வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194, ஏ. பண்டாரநாயக்க மாவத்த கொழும்பு-12.

திறம் சலவைக்கு
மில்க் வைற் சோப்

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 ஆனி திங்கள் 6-ம் நாள் (19—6—60) ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் 23 | இதழ் 3

# வேலை நிறுத்த காலச் சம்பளம் வழங்குவது மற்றொரு தேர்தல் 'ஸ்டண்ட்'!

## கொழும்பு தெற்கில் அரசாங்க தமிழ் ஊழியர்களை வளைக்க ஜே. ஆர். சூழ்ச்சி

### தோல்வியின் நிழலாட்டத்தை யு. என். பி. மேலிடம் அந்தரங்கத்தில் அறிந்து கொண்டது.

(சுதந்திரன் நிருபர்)

ஏதிர்வரும் பொதுத் தேர்தலில் தங்கள் கட்சி பரிபூரண பெரும்பான்மைப் பலத்தைப் பெறும் என்ற நம்பிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியினர் படிப்படியாக இழந்து வருவதாக தெரிகிறது. திருவாளர்கள் டட்லி சேனநாயகா, ஜே. ஆர். ஜயவர்த்தன போன்ற மேலிடத்துத் தலைவர்களே இந்த உண்மையை அந்தரங்கத்தில் உணர்ந்து காதோடு காதாகக் கவலையோடு பரிமாறிக்கொள்ளுகின்றனர்.

தமிழரசுக் கட்சி மீது பழியையும் பாவத்தையும் சுமத்துவதன் மூலம் வகுப்புவாதக் கொந்தளிப்பை ஏற்படுத்தி அதன் உச்சியில் பதவிக்கு வந்துவிடலாம் என்று திரு டட்லி ஆரம்பத்தில் செய்த முயற்சி படிப்படியாக பிசுபிசுத்து வருகிறது. எனவே புது முயற்சிகளுக்குத் திட்டமிட்டு வருகின்றனர்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையே இரகசிய ஒப்பந்தம் ஒன்று உண்டு என்று நிரூபிக்க மேற்கொள்ளப்பட்ட பிரமப் பிரயத்தனங்கள் யாவும் பயனற்றுவிட்டன.

#### கே. எம். பி. மறுத்துவிட்டார்

இரகசிய ஒப்பந்தம் ஒன்று உண்டு என்று பகிரங்கமாகக் கூப்பாடு போடுமாறு யு. என். பி. தூதுவர்கள் சிலர் திரு. கே. எம். பி. இராஜரத்னு போன்ற வகுப்பு

(8-ம் பக்கம் பார்க்க)



ஹட்டன் ஜோன்பொஸ்கோ கல்லூரி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை திருவள்ளுவர்விழா அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பேச்சுப் போட்டியில் முதன்மையாகத் தெரிவு செய்யப்பட்ட சிறீபாத கல்லூரியில் பயிலும் 6 வயதுச் சிறுமி இந்திரா இராசதுரை தனது உரையை அந்த வைபவத்தில் அபாரமாக நிகழ்த்தி அனைவர் உள்ளங்களையும் கவர்ந்தார். அவர் பேச்சில் சொக்கி விட்ட 'சுதந்திரன்' ஆசிரியர் மாலை சூட்டிக் குழந்தையை உற்சாகப்படுத்தினர். தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் வழங்கும் பரிசை, ஆசிரியர் அணிந்த வெற்றி மாலையுடன் குழந்தை ஏற்றுக் கொள்வதை படத்தில் காண்க.

[படப்பிடிப்பு: பி. சுப்பையா]

## மாஜி மந்திரி மரிக்காரின் விசித்திர சரித்திர ஆராய்ச்சி!

### அடுத்த வாரம் வெளிவரும்

மாஜி தபால் வானொலி மந்திரி ஜனுப் வி. ஏ. எஸ். மரிக்கார் ஒரு விசித்திரமான சரித்திர ஆராய்ச்சியை நடத்தி ஓர் அறிக்கையைக் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஆங்கில சிங்களப் பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில் தமிழரசுக் கட்சியின் உதவியோடு தமிழ் நாட்டில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கையை எதிர்காலத்தில் ஆக்கிரமித்துவிடப் போகிறது என்று ஒரு பீதியைச் சிங்கள மக்களிடம் கிளப்பிவிட முயன்றிருக்கிறார்.

அது மட்டுமல்ல, ஒல்லியான உருவமும் நெட்டைத் தோற்றமுமுடைய சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் ஆகிய தமிழரசுத் தலைவரின் பின்னே சிங்களவர்களை விழுங்கி ஏப்பம் விடவிருக்கும் 4 கோடித் தமிழர்களை அவர் காண்கின்றாராம்!

திரு. செல்வநாயகத்தின் திருவதனத்திலே எல்லாளன், வீரபாண்டியன், பராந்தகன் மாமல்லன், முதலாம் இராசேந்திரன் ஆகிய தமிழ் வேந்தர்களின் சாயலையும், சிங்கள வரலாற்று நூல்களின்படி ஒரு இலட்சம் சிங்களக் குடும்பங்களை வாளுக்குப் பலியாக்கியதால், தமிழர்களால் ஆற்றல் மிக்கவரென அழைக்கப்படும் இராஜ ராஜ சோழனின் முகத் தோற்றத்தையும் காண்கின்றாராம்!

இந்த விநோதமான அறிக்கையின் தமிழாக்கத்தை அடுத்த வாரச் சுதந்திரனில் தமிழர் எனப்படுவோர் ஒவ்வொருவரும் தவறாது படிக்க வேண்டியது அவசியமாகும்.

கடிதம்

## ஜீ. ஜீ. யைப் பற்றி ஜே. ஆர். 'குசு குசு' வென்றுதான் பேசினர்!

### அருகிலிருந்த அரசாங்க ஊழியர் சுட்டிக்காட்டும் ஒரு திருத்தம்

"கொழும்பு தெற்குத் தொகுதிக்கு யு. என். பி. அபேட்சகராகப் போட்டியிடும் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அப்பகுதியிலுள்ள தமிழ்ப் பிரமுகர்கள் சிலருடைய வீடுகளில் இரகசியக் கூட்டங்கள் நடத்தி வருவதாகவும் அப்படியொரு கூட்டம் திரு. ஈ. பி. செல்லையா என்பவருடைய வீட்டில் நடைபெற்றதாகவும் 'சுதந்திரன்' 5-6-1960 தேதி இதழில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

("அழைப்பின் பேரில் அந்தக் கூட்டத்துக்குப் போயிருந்தவர்களில் நானும் ஒருவன். நான் ஒரு அரசாங்க ஊழியனாயிருப்பதால் என் பெயரை வெளியிடாதீர்கள்.)

"பிரஸ்தாப கூட்டத்தில் நிகழ்ந்தவற்றைப் பற்றித் தங்கள் ஒற்று நிருபர் பெரும்பாலும் சரியாகவே வர்ணித்துள்ளார். ஆனால் ஒரு சிறு பிழை விட்டு விட்டார்.

#### சாரம் சரி சந்தர்ப்பம் பிழை

"திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பேசியதாக வெளியிட்டுள்ள கருத்துக்களின் சாரம் சரியாக இருக்கிறது. ஆனால் அவர் எழுந்து நின்று பகிரங்கமாகப் பேசும்போது திரு. பொன்னம்பலத்தின் வட்டமேசை ஆலோசனையைப் பற்றியும், அவர் தமிழ் மக்களுக்குப்பொருத்தமான தலைவர் என்பது பற்றியும் தான் குறிப்பிட்டார்.

"திரு. பொன்னம்பலத்தை மந்திரியாக்கிச் சமஷ்டி இயக்கத்தை நசுக்குவோம் என்ற கருத்தையும் அவரையே யாழ்ப்பாணப் பொது மக்கள் தேர்ந்தெடுத்து அதன் மூலம் யு. என். பிக்கு ஆதரவு தரவேண்டும் என்ற கருத்தையும் பகிரங்கப் பேச்சின் போது அவர் வெளியிடவில்லை.

(9-ம் பக்கம் பார்க்க)

தொய்வு (ASTHMA) சங்காரி
ரிச்லெட்ஸ் பெக்டோரல்
(RICHELET'S PECTORAL)



* இடைவிடாத இருமல்
* இளைப்பு
* மூச்சுத் திணறல்
* கிர் புர் சத்தம்
* நெஞ்சு வலி!
* தொண்டை வலி




இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. ஈளை நோயினல் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:
வெஸ்டன் ஏஜன்சீஸ்,
63, பேங்ஷால்வீதி, கொழும்பு.
(போன்: 2885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் மக்களின் உரிமைக் குரல்

# ஆளை ஆளைப் பாராமல் அரசியல் கட்சியின் ஆட்டத்தைப் பார்த்து தேர்தலில் வாக்களியுங்கள்

## தமிழரசே தமிழ் மக்களின் இதயகீதம் என்பதை நிலைநாட்டுங்கள்

## உடுப்பிட்டி கூட்டத்தில் வட்டுக்கோட்டை அபேட்சகர் முழக்கம்

**“தொண்ணூறு விதம் தமிழ் பேசும் மக்கள் வாழும் வடக்குக் கிழக்கு மாகாணங்களி லுள்ள கோடு கச்சேரிகளில் தமிழில் கருமமாற்று வதற்கு என்ன தடை? இவ்வித உரிமையைக்கூட வழங்க மறுத்த அரசாங்கத்தை நாம் எப்படி ஆத ரிக்க முடியும்” என்று மாலிசந்திக்கருகாமை யில் அணிமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் கேட்டார்.**

இக்கூட்டம் உடுப்பிட்டித் தொகுதியில் தமிழரசுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திரு க. ஜெயக்கொடியை ஆதரிக்கு முகமாக நடைபெற்றது. தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமைவகித்துப் பேசினர். அவர் பேசியதாவது:-

### நமது குறைந்தபட்ச கோரிக்கைகள்

“இலங்கை முழுவதும் தமிழ் சிங்களத்துடன் சம அந்தஸ்தில் இருக்க வேண்டு மென்பது எமது கட்சிக் கோரிக்கைகளில் ஒன்ருக இருந்தபோதிலும் அரசாங் கத்தை ஆதரிப்பதற்கு இடைக்கால நிபந்தனை யாக நாம் டட்லியி டம் கேட்டுக்கொண் டது வடக்குக் கிழக்கு மாகா ணங்களில் தமிழ் அரசகரும மொழியாக இருக்க வேண் டுமென்பதுதான். அன்றியும் எமது சமஷ்டிக் கோரிக் கையை விட்டு பிரதேச சபைகளை நிறுவி உள்நாட்டு விடயங்களை நாமே நடாத் தும் உள்நாட்டுச் சுயாதீனத் தைக் கொடுக்கும்படியும், பிரஜாவுரிமை, குடியுரிமை என்பன இல்லாமல் அரசி யல் அநாதைகளாக இருக் கும் பத்து லட்சம் இலங்கை இந்தியர்களுக்கும் அவர்க ளின் சன விகிதாசாரத்துக்கு ஏற்ப 13 பிரதிநிதிகள் பாரா ளுமன்றத்தில் இருக்கக்கூடி யதாக நாம் தற்காலிக ஏற் பாடாக அவர்களுக்கு நாலு பிரதிநிதிகளைக் கொடுக்கும் படியும் கேட்டோம். எங் கள் கோரிக்கைகளிலிருந்து நாம் எவ்வளவோ குறைத் துக் கேட்டும் யு. என். பி. அரசாங்கம் ஒரு கோரிக் கைக்குத்தானும் உடன்பட வில்லை.

“இப்படிப்பட்ட அரசாங் கத்தை நாம் ஆதரித்தோமா ளுல் தமிழினத்தின் துரோகி களாக மாறியிருப்போம். உரிமையற்ற இனமாக நாம் இந்த நாட்டில் இருந் தென்ன இறந்தென்ன என்ற கேள்வி கேட்க வேண் டியவர்களாய் இருக்கின் ருேம்.

### குறையை நிவர்த்திக்க சந்தர்ப்பம்

“எனவே, எங்கள் கட்சி அபேட்சகரை நீங்கள் தெரிந் தனுப்ப வேண்டியது அத்தி யாவசியம். சென்ற தேர்த லில் விட்ட குறையை நிவர்த்தி செய்வதற்கு உங் களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இச்சந் தர்ப்பத்தைத் தவறவிட மாட்டீர்களென்று நம்புகி றேன்”—இவ்வாறு தமிழர சுத் தந்தை கூறி முடித்தார்.

### இறந்த ஆட்டின் குட்டியா?

“தாய் இறந்துவிட்டால் ஆட்டுக்குட்டியை வேறு ஆட்டில் பால் குடிக்க விட்டு வளர்ப்பது வழக்கம். அவ் வித நிலைமை சென்ற முறை இத்தொகுதிப் பிரதிநிதி திரு சிவசிதம்பரத்துக்கு ஏற் பட்டது. இனிமேலும் உங் கள் பிரதிநிதி இறந்த ஆட் டின் குட்டியாக இருக்க வேண்டுமா?” என்று வட்டுக் கோட்டைத் தொகுதியின் முன்னள் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போ தைய அபேட்சகருமான திரு அ. அமிர்தலிங்கம் பேசு கையில் கேட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:-

“ஜனநாயக ஆட்சியிலே மக்கள் வாக்களிப்பது தனி நபருக்காக அல்ல. கொள் கை லட்சியத்திற்காக. எனவே தான் நாம் கேட் பது: ஆட்களைப் பாராது அவர்கள் கட்சியின் ஆட்டத் தைப் பாருங்கள்.

“தமிழரசுக் கட்சிக்கு இடும் ஒவ்வொரு வாக்குக ளும் சிங்கள மக்களின் கண் களைத் திறக்க—தமிழரசே தமிழர்களின் இதைய கீதம் என்று நிச்சயிக்கும் வாக்குக ளாகும்.

### யு. என். பி. யும் ஜீ. ஜீ.யும்

“‘நோகாமல் அடிக்கி றேன் ஓயாமல் அழு’ என்று கூறுவதைப் போன்று ஜீ. ஜீ. பொன்னம்பலம் வட்ட மேசை மகாநாட்டைப் பற் றிப் பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்ட அடுத்த நேரம் பாராளுமன்றத்தில் டட்லி சேனநாயக்கா அதே வட்ட மேசைப் பல்லவி யைப் பாடினர். 1957-ம் ஆண்டில் டட்லியைத் தலை யில் தூக்கித் திரிந்த பொன் னம்பலம் ஏன் ஐக்கிய தேசி யக்கட்சியின் பெயரால் போட்டிக்கு நிற்கவில்லை? ஐக்கிய தேசியக் கட்சியின் அலங்கோல ரூபத்தை மறைப்பதற்காகவே இங்கே தமிழ்க் காங்கிரஸ் என்னும் போர்வையில் போட்டியிடு கின்ருர்கள்” என்ருர் திரு. அமிர்தலிங்கம்.

அவர் டட்லி சேனநாயக் காவின் துவேஷப் பிரசாரங் களைப்பிட்டுக் கூறுகையில் சொன்னதாவது:-

### டட்லியின் துவேஷம்

“1958-ல் இந் நாட்டில் நடந்த வகுப்புக் கலவரத்தி லும் மோசமான நிலையை உண்டாக்கக் கூடிய விதத் தில் டட்லி சேனநாயகா துவேஷப் பிரசாரங்களைத் தமிழர்களுக்கு மாருகச் சிங் களவர்கள் மத்தியில் நிகழ்த் தி வருகின்ருர். துவேஷப் பிரசாரத்திற்காகக் கைது செய்யப்பட வேண்டிய முத லாவது நபர் டட்லி சேனநா யக்காவாகவே இருக்கவேண் டும். அப்படியிருக்க ஏன் டட்லி பொலிசாரால் கைது செய்யப்படவில்லை?” என் ருர்.

### ஏரிக்கரையின் உபதேசம்

ஏரிக்கரை பத்திரிகைகளின் துவேஷப்பிரசாரங்களை அம் பலப்படுத்திய அமிர்த லிங்கம் பத்திரிகைகளைக் கண்டித்துப் பேசுகையில் பின்வருமாறு கூறினர்:-

“இப் பத்திரிகைகள் ஆரம் பத்தில் சிங்களவர் மத்தி யில் தமிழருக்கு மாருன பிரசாரத்தில் தமிழ்க் காங் கிரசுக்கு ஆதரவாகச்செய்து வருகின்றன. எமக்கு விரோ தமான பிரசாரங்களைச் செய்துவந்த இந்த ஏரிக் கரைப் பத்திரிகைகள் இப் பொழுது தமிழினத்துக்குப் புத்தி புகட்ட வந்துள்ளன. இப்பத்திரிகைகள் இனிமேல் இவற்றிலும் மோசமான வற்றையெல்லாம் வெளியி டும். அவற்றையெல்லாம் நீங்கள் நம்பிவிடக் கூடாது.

### முகத்துக்கஞ்சி கற்பை இழப்பதா?

“முகத்துக்காக யாராவது ஒரு பெண் கற்பைக் கொடு க்க முடியுமா? சுதந்திரப் போராட்டம் நடக்கும் இவ் வேளையில்-மடிப்பிச்சையெடுக் கும் இனமாக அல்லாது சுதந்திர தமிழ் இனமாக நாம் வாழவேண்டுமானல் தமிழ் பேசும் மக்கள்வாழும் தொகுதிகளில் எல்லாம் தமிழ் மக்கள் தமிழரசுக்கட் சியினரையே தெரிவு செய்ய வேண்டும்.

“சென்ற தேர்தலில் தமிழ் காங்கிரஸ் வாநிகள் தமிழர

(7-ம் பக்கம் பார்க்க)


★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும்
சிறந்த பாவனையிலும்
உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண் பாவாடை கிமோனு முத லியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலு முள்ள புடைவை வியா பாரிகளிடம்

கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்,

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.


# காப்பியில் கலப்படத்தை கண்டு பிடிக்க வழியுண்டு

## மைசூர் உணவுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையத்தின் சாதனை

காப்பியில் கலப்படம் செய்யப்படாமல் இருப்பது அருமையிலும் அருமை. கலப்படம் செய் யப்பட்டிருக்கிறதா என்ப தைக் கண்டுபிடிப்பது எப் படி? அதற்கு சுலபமான வழி இருக்கிறது.

அதை அறிவதற்கு முதல் காப்பி தயாரிக்கப்படும் முறையை ஓரளவு தெரிந்து கொள்ள வேண்டும்.

காப்பிச் செடியிலிருந்து காப்பிக் கொட்டை கிடைப் பதற்கு மூன்று அல்லது நான்கு வருஷங்களாகும். ஒரு காப்பிச் செடியிலிருந்து அரை பவுண்டு முதல் ஒரு பவுண்டு காப்பிக்கொட்டை வரை கிடைக்கும்.

### இரண்டு முறையில்

காப்பிக்கொட்டை பக்கு வப் படுத்துவதில் இரண்டு முறைகள் கையாளப்படுகின் றன. மிகவும் பழுத்த சிவந்த பழம் அல்லது “செரி”, தோல் உரிக்கப் பட்டு, புளிக்கவைக்கப் பட்டு நன்ருக சுத்தம் செய்து உலர வைக்கப்படுகி றது. அதற்கு “பார்ச் மெண்ட்” அல்லது “பிளான் டேஷன் காப்பி” என்று [illegible] முறையில் [illegible] றன. இதற்கு “செரிகாப்பி” என்று பெயர். பார்ச் மெண்ட் காப்பி, செரி காப் பியைவிட விலையிலும், தரத் திலும் உயர்ந்தது.

### பரிசோதனை

கலப்படம் செய்யப்பட்ட காப்பித் தூளைக் கண்டுபிடிப் பதற்கு பல ரசாயன முறை கள் இருக்கின்றன. மைசூர் உணவுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலையத்தில் எளிய முறையொன்று உரு வாக்கப்பட்டிருக்கிறது.

இந்த முறைப்படி, கால் தேக்கரண்டி அளவு காப் பித் தூள், ஒரு கோப்பைத் தண்ணீரில் கொதிக்க வைக் கப் படுகிறது. அந்தத் தூள் அடியில் உறைந்தவுடன் தண்ணீர் வடிக்கப்படுகிறது. அந்தத் தூள் பிறகு உலர வைக்கப்பட்டு, ஒவ்வொரு தூளும் தனித்தனியாக இருக்கும் விதத்தில் சிறு துவாரங்கள் நிறைந்த வெள் ளைக் காகிதத்தில் பரப்பி வைக்கப்படுகிறது. அதன் மீது, இரண்டு சத விதம் காஸ்டிங் சோடா கலந்த தண்ணீர் ஊற்றப்படுகிறது. அந்தத் தூள்களில், புளியங் கொட்டை அல்லது பேரீச் சம் பழக் கொட்டைத் தூள் கலந்திருந்தால், அந்தக் காகிதத்தின் மீது சிவப்புப் புள்ளிகள் நிறைந்து காணப் படும்.

### செயற்கை முறை சாத்தியமில்லை

காப்பிக் கொட்டை சரி யானபடி வறுக்கப்பட்டால் தான் காப்பிக்குரிய மணம் கிடைக்கும். கருகாமலும் இருந்தால்தான் சிறந்த காப்பி தயாரிக்கமுடியும்.

காப்பிக் கொட்டையில் காணப்படுகிற சுமார் 30 ரசாயனங்களின் காரணமா கத்தான் அது மணம் வீசு கிறது. அவைகள் சமரீதி யான முறையில் மிகவும் குறைந்த அளவில் காணப் படுகின்றன. செயற்கை முறைகளில் அந்தகைய மணத்தை ஏற்படுத்துவது இதுவரை சாத்தியமில்லாதி ருக்கிறது.

### ரஸாயனக் கூட்டு

ஒரு கோப்பைக் காப்பியில் சுமார் ஒரு மில்லிகிராம் நயாஸின் இருக்கிறது.

நயாஸினேடு கூட, கிபோப் பிளேவின், பான் டோதெனிக் ஆஸிட், குளோ வின், போலிக் ஆஸிட், வைட்டமின் பி, வைட்ட மின் பி 12 ஆகிய பொருள் கள் காப்பியில் உள்ளன. அவைகள் நயாஸினைவிட மிகவும் குறைந்த அளவில் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்



குயுக்தி

செல்வி எஸ். பாக்கியலட்சுமி, மாத்தளை

கே: குயுக்தியாரே, ஒரு குறளுக்குத் தாங்கள் பொருள் கூற வேண்டும். "கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும் இல்லாதாள் பெண் காமுற்றற்று" என்பதுதான் அந்தக் குறள். "முலை இல்லாதவள் காம இன்பத்தை அனுபவிக்க விரும்புவது போன்றதே படிப்பில்லாதவன் மேடையில் பேச விரும்புவது" என்று ஒரு வித்துவான் இதற்குப் பொருள் கூறினார். கல்லாதவன் சபையில் பேச விரும்புவதைத் தாழ்த்திக் கூற விரும்பினும் வள்ளுவர் இத்தகைய ஒரு மட்டமான உவமானத்தை உபயோகித்திருக்க வேண்டியதில்லை என்பதே என் கருத்தாகும். தங்கள் கருத்தென்னவோ!

ப: சகோதரி, காமத்தைப் பற்றிப் பேசுவதெல்லாம் தாழ்வானது, மட்டமானது என்று நீங்கள் கருதக் கூடாது. இன்று 'காதல்' என்ற பொருளில் உள்ளதுதான் தொல்காப்பியர், திருவள்ளுவர் காலத்தில் 'காமம்' எனப்பட்டது. முறையான காமம் சமுதாயத்துக்கு வேண்டியதே. அதில் தவறு ஒன்றுமில்லை. அதுவேறு விஷயம். எடுத்துக்கொண்ட குறளுக்கு வித்துவான் சொன்ன பொருள் சரியானதாக எனக்குத் தோன்றவில்லை. "முலையிரண்டும் இல்லாதாள் காமுற்றற்று" என்றிருந்தால் வித்துவான் கொண்ட பொருள் சரியாக இருக்கலாம். இடையில் திருவள்ளுவர் 'பெண்' என்ற ஒரு சொல்லைப் புகுத்தியிருக்கிறாரே, ஏன்? 'பயனில் சொல் பாராட்டக் கூடாது' என்று கூறும் வள்ளுவர் அனாவசியமாக இந்தச் சொல்லைப் புகுத்தியிருப்பாரா? 'பெண் காமுற்றற்று' என்றால் 'முலையிரண்டும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்பினாற் போன்றது' என்று பொருள். பெண் தன்மை என்பது தான் என்ன? பெண் தன்மை என்பது விசேஷமாகத் தாய்மையையே குறிக்கும். முலையில்லாதவள் தாய்மை பெற விரும்பினால் அது தாய்மையாகுமா? "முலையில்லாதவள் எப்படி அமுதமாகிய முலைப் பாலையூட்டித் தன் குழந்தையின் வயிற்றுப் பசியைத் தீர்க்க முடியாதோ அவ்வண்ணமே கல்வியில்லாதவன் பேசும்போது அறிவாகிய ஞானப் பாலை யூட்டி கேட்போரின் கருத்துப் பசியைத் தீர்க்க முடியாது" என்பதுவே மேற்படி குறளின் புதை பொருளாகும்.

ஃ

நா. இராமசாமி, அனலைதீவு

கே: கடவுள் என்றால் பொருள் என்ன?

ப: கடவுள் என்றால் கடவு—உள் என்று ஆகும். கடவுதல் கடாவுதல் என்பதன் திரிபு. கடாவுதல் என்றால் சொல்லுதல் என்று பொருள். உள் கடாவுதல் என்பது உள்ளம் சொல்லுதல் அல்லது மனத்தின்குரல் என்று அர்த்தமாகும். 'இது சரி, இது பிழை' என்று மனம் இடித்துரைப்பதையே மனச்சாட்சி யென்கின்றனர். எனவே கடவுள் என்பது மனச் சாட்சியேதான்!

கே: சுதந்திரனைச் சிலர் தந்திரன் என்று வர்ணிக்கின்றனர். இது சரியா?

ப: மிகவும் சரியானதே. சுதந்திரன் என்றால் விடுதலை பெற்றவன், விடுதலைக்காகப் போராடுபவன் என்றெல்லாம் பொருள் படும். விடுதலைக்காகப் போராடுபவன் வீரனாக மட்டுமிருந்தால் போதாது; விவேகியாகவும் இருக்க வேண்டும். விவேகியிடம் தந்திரம் நிரம்ப இருப்பது தவறல்ல. அதுவும் அரசியலில் தந்திரம் அத்தியாவசியமானதாகும். அதனாலேயே அந்தக் காலத்தில் "ராஜதந்திரம்" என்று கூட ஒரு கலையைப் போற்றி வளர்த்து வந்தார்கள் பாரதப் பேரரசர்கள். சுதந்திரனிடம் இத்தகைய ராஜ தந்திரம் நிரம்ப இருக்கிறது. எனவே சுதந்திரனைச் சிலர் தந்திரன் என்று ஆசையோடு, அபிமானத்தோடு கூறும்போது 'சுதந்திரன் பெரும் ராஜ தந்திரன்' என்பதையே குறிக்கிறார்கள். ராஜ என்பது தொக்கு நிற்கிறது: 'போன்' பேசினேன் என்னும் போது 'டெலி' என்பது தொக்கு நிற்பதைப் போல. போன் என்றால் டெலிபோனையே குறிக்கிறதல்லவா? அதேபோல் தந்திரன் என்றால் சுதந்திரன் அரசியலில் தந்திரன்—ராஜ தந்திரன்—என்பதையே குறிக்கிறது.

> திருவாளர் குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்.
> த. பெ. இல. 1183.
> கொழும்பு-12.

மு. பரராசசிங்கம், யாழ்ப்பாணம்

கே: சுதந்திரனில் கேள்வி பதிலாக வைத்தியப் பகுதியொன்று ஆரம்பிக்கப் போவதாக எழுதியிருந்தீர்கள். இன்னும் காணவில்லையே.

ப: மிக விரைவில் ஆரம்பிக்கவிருக்கிறது. புகழ் வாய்ந்த டாக்டர் ஒருவர் பதில் தரப்போகிறார். காத்திருங்கள்.

ஃ

அறிவழகன், தெஹியோவிட்ட

கே: நான் ஒரு யுவதியைக் காதலிக்கின்றேன். அவள் தங்கள் மகளாக இருந்தால்......

ப: நல்லதாய்ப்போயிற்று; ஒரு சதம் சீதனத் தொல்லையில்லாமல் நீ என் மருமகனாய் வாய்த்துவிடுவாய் அல்லவா?

ஃ

எஸ். தேவபாலசிங்கம், நல்லூர்

கே: திரு ஜீ. ஜீ. கைகட்டிச் சேவகம் செய்பவர் அல்லர் என்று ஒருவர் எழுதுகிறார். இது சரியா?

ப: ஆம். அது சரி. திரு ஜீ. ஜீ. கைகட்டிச் சேவகம் புரிபவர் அல்லர். காலில் விழுந்துதான் அவர் எதையும் செய்வார். காலஞ்சென்ற திரு டி. எஸ். சேனநாயகாவின் அப்போதைய வாசஸ்தலமான டெம்பிள் ட்ரீஸ் மாளிகைக்குச் சென்று அவர் காலில் விழுந்து, பின்னர் முழந்தாளில் எழுந்து நின்று, அவருடைய இடது கரத்தைத் தமது வலது கையால் பற்றி முத்தமிட்டுத்தானே 'பொய்த் தொழில் வால் பிடி மந்திரி' என்ற எலும்புத் துண்டைக் கவ்விக் கொண்டு வெளியே வந்தார் 1947ல். அப்படிப்பட்ட ஒருவரைக் கைகட்டிச் சேவகம் செய்பவர் என்று எப்படித்தான் சொல்ல முடியும்? அபவாதம்! அபவாதம்!

கே: யாழ்ப்பாணத்தில் புதிய புதிய பத்திரிகைகள் தோன்றுகின்றனவே. இதனால் யாருக்குப் பயன்?

ப: ஏன், கடலைக்காரர்கள் பயனடைகிறார்களே. குறைந்த விலையில் இருத்தல் கணக்கில் விற்காத பத்திரிகைகள் கிடைத்தால் அது யாழ்ப்பாண வியாபாரிகளுக்கும் பயனாகிறதல்லவா?

ஃ

செல்வி ஆனந்தி குமரகுரு, கொழும்பு

கே: மண், பொன், பெண் என்ற ஆசைகளில் ஒருவன் அறவே நீக்க முடியாத ஆசை எது?

ப: வயோதிபம் வந்ததும் பெண் ஆசை ஒழிந்துவிடுகிறது. கரன்ஸி நோட்டுகள் வந்த பின் பொன் ஆசையென்பது அர்த்தமற்றதாகிவிட்டது. மண் ஆசைதான் நீக்க முடியாதது என்பது என் கருத்து. உயிர்போன பின்கூட மண்ணை நாடித்தானே சடலம் இறுதி யாத்திரையை ஆரம்பிக்கிறது!

ஃ

கு. செந்தில்நாதன், யாழ்ப்பாணம்

கே: தமிழரசுக் கட்சி ஒரு ஆங்கிலப் பத்திரிகை ஆரம்பித்தால் அதைச் செவ்வனே நடத்தக் கூடிய ஆசிரியர்களுக்குக்கூடத் தமிழ் மக்களிடம் பஞ்சம் உண்டு என்று என் நண்பன் கூறுகிறான். இதை ஏற்றுக்கொள்வீர்களா குயுக்தியாரே?

ப: ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டேன். தமிழரசுக் கட்சி ஒரு ஆங்கிலப் பத்திரிகை ஆரம்பித்தால் அதில் எழுதக்கூடிய திறமை வாய்ந்த எழுத்தாளர்கள் பலர் நம்மிடம் இருக்கவே இருக்கிறார்கள். உதாரணத்துக்குச் சில பெயர்களை வேண்டுமானாலும் குறிப்பிட முடியும். திருவாளர்கள் ஏ. ஜே. ஆர். வேதவனம், எஸ். ஜே. குணசேகரம், ஜேம்ஸ் டி. இரத்தினம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், வி. நவரத்தினம்போன்றோர் சிறந்த ஆங்கில எழுத்தாளர்களே.

## சுவை

எழிலிபொளிர் இன்முகத்தைக் காட்டி நின்றாள்.
ஏங்கியவள் முன்னின்ற காளை முன்பு
குழலிசையின் இன்பமெனக் குழைந்த பேச்சில்
கொள்ளையின்பங் கண்டிடவே கொண்டான் நாட்டம்.
தழலெரியும் இதயத்தைத் தணிக்க வல்ல
தங்கமுகத் திங்களவள் மங்கை முத்து
அழகொளிரும் பல்வரிசை யதனைக்காட்ட
அவன் பெற்ற அனுபவத்தின் "சுவை" தானென்னே.!

பேசன்பே பேசென்றான் பேசவில்லை
பேசாத பொற்சிலையோ பெருமூச்செற்றி
மாசற்ற மனந்திறந்தாள் மண்டியிட்டாள்
மதுரமொழி சிந்திடவே மனமுங் கொண்டாள்
கூசுவது பொறுக்காது கொல்லுகின்றாய்
கூவாத மாங்குயிலே கூவாய் என்றான்
யாசித்தேன் செவ்விதழ்கள் சொரியும் தேனின்
யானமுதச் "சுவை"யுண்ண என்றான் நின்றான்.

மங்கையவள் வாயசைத்தாள் வார்த்தையில்லை
மனக்கடலில் அலைபாய மறுகி நின்றான்
அங்கமெலாம் அசைத்தசைத்து அதிலே இன்பம்
அனைத்தையுமே தேக்கியவள் அவன்முன் வைத்தாள்.
பொங்குகின்ற இளமையுடன் புன்னகையைப்
பொலிவுடனே பூக்கின்ற பூவே நீயும்
இங்கென்ன நர்த்தனமா ஆடுகின்றாய்?
இன் "சுவை"யே இனிப் பொறுக்க முடியாதென்றான்.

கண்களிலே அருவியதைப் பாயவிட்டாள்
கைச்சாடை காட்டியவள் வாயைத் தொட்டாள்
எண்ணத்தை வார்த்தைகளால் வடிக்கவொண்ணா
எழிற்குமரி யவள் பிறக்கும் போதே ஊமை!
வெண்மதியிற் குறையுண்டு இயற்கை காட்டும்
வேடிக்கை என்னென்பேன் என்றான் பொய்கைத்
தண்கமலக் கன்னியே என்தாய்மே லாணை
தரணியிலே நீயமுதச் "சுவை"தானென்றான்.

"ஏயா ரெம் ஸலீம்"

# 'கடைசித் தமிழன் வரை போராட்டம் ஓயாது

ஃ ஃ ஃ

# விடுதலை பெற்ற பின்னரே அமைதியை நாடுவோம்'

## மூதூர் தொகுதியில் முதலாவது பிரசாரக் கூட்டம்

"தமிழினத்தின் உரிமைக் குரலைக் கேட்டும் கேட்காதவர்கள் போல் இருந்து விட்டால் நாளடைவில் தமிழர்களின் உரிமைக் குரல் மங்கி மறைந்து தானாகவே அடங்கி விடும் என்று ஆட்சியாளர்கள் மனப்பால் குடிக்கின்றனர். ஆனால் தமிழ் பேசும் இனத்தில் கடைசி மனிதனாக ஒரு நபர் மிஞ்சி இருக்கும் வரை எங்கள் போராட்டம் ஓய்ந்து விடாது."

இவ்வாறு தம்பலகமம் கோயில் குடியிருப்பு மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் மக்களின் பலத்த கரகோஷத்திற்கிடையே பேசுகையில் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும் திருமலை முன்னாள் எம். பி. யுமான திரு. இராஜவரோதயம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "இந்த நாட்டின் தற்காலிகப் பிரதமராக விளங்கும் திரு. டட்லி சேனநாயகா தான் ஒரு குறிப்பிட்ட இனமான சிங்களவர்களுக்கு மட்டும் தான் பிரதமர் என்ற தோரணையில் பேசி வருகின்றார். தமிழரசுக் கட்சியின் நியாயமற்ற கோரிக்கைகளுக்கிணங்கி சிங்கள இனத்துக்கு துரோகம் இழைக்க மாட்டேன் என்று அவர் கூறுவது[illegible] நமக்கு வேடிக்கையாக இருக்கின்றது. கிழக்கு வடக்கு மாகாணங்களில் தமிழும் ஒரு உத்தியோக மொழியாக அங்கீகரிக்கப் பட்டால் அது எந்த விதத்தில் சிங்கள இனத்துக்கு துரோக மிழைத்ததாக முடியும் என்பதுதான் நமக்கு விளங்கவில்லை" என்று தெரிவித்தார்.

### மித்திரபேதம்

ஸ்ரீ முருகன் பேசுகையில் "வடக்குக் கிழக்கென்று, தமிழ்ப் பிரதேசங்களைக் கூறுபோட்டு தமிழர்களுக்கிடையே மித்திர பேதம் செய்யும் துரோகிகள் நம்மிடையே இருக்கின்றனர். எனவே இந்த மாய்மாலக்காரர்களின் விஷப் பேச்சில் மயங்கி விடாமல் மக்கள் சர்வ ஜாக்கிரதையாக [illegible] சரி,

(5-ம் பக்கம் பார்க்க)

உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட் என்னும்
அழகின் அணிகலனை அணியுங்கள்.
பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன
நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால்
உறுதியாக உழைக்கின்றது.
இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல்,
மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலைட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர்
வர்ணங்களிலும் கிடைக்கின்றன.
குண்டன்மால்ஸ்,
லிமிட்டெட்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘எல்லா மக்களும் தினமும் வெள்ளைப் பூண்டு உண்ணவேண்டும்’

## ஆறுயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு எகிப்திய மன்னன் இட்ட கட்டளை

## பூண்டு பூண்டறுக்கும் பலவித நோய்கள்

வெள்ளைப்பூண்டின் நற்குணங்களைப் பண்டை மக்கள் அறிந்திருந்தார்கள் என்பதற்குப் போதிய சான்று இருக்கிறது. ஏறத்தாழ ஆறுயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த எகிப்திய மன்னன் ஒருவன் தன் குடி மக்கள் அனைவரும் நாள்தோறும் பூண்டு உண்ண வேண்டும் என்ற கட்டளையிட்டதாக வரலாற்றில் ஒரு குறிப்பு உள்ளது. வேதகால யூதர்கள் அதை ஏராளமாகச் சாப்பிட்டார்கள். கிரேக்கர்களும் அதை விரும்பிப் புசித்தார்கள். உணவுக்குழாய்பற்றிய பிணிகளுக்கு அது ஏற்ற சரக்கு ஆகும் என்று ரோமர்கள் நம்பினார்கள். செவிடு, நாட்பட்ட இருமல், சுவாசகாசம், மலக்கிருமி, சன்னி, வாதரோகங்கள், தலைவலி, வாய்நோய், நீர்க்கோவை சீதபேதி,மூலம் இவற்றில் வெள்ளுள்ளியை உபயோகிக்கலாம் என்று இந்துக்களின் குணவாகடங்கள் கூறுகின்றன.

### மருத்துவத் தந்தை செய்த பிரயோகம்

மருத்துவக் கலையின் தந்தையாகிய ஹிப்பாக்கிரட்டீஸ் அதைக் குன்ம நோய்களுக்கு வழங்கினார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் டாக்டர் புல்லர் என்பவர் பூண்டுக்கு இருமல் சாந்தப்படும் என்று கண்டுபிடித்தார். அதனால் கபவாத சுரத்தைக் குணமாக்கினார் டாக்டர் எஸ். டபிள்யு. கராஸ்மன். தமது அனுபவத்தில் நோயாளிகளுக்குப் பூண்டு கொடுத்த ஒரு தடவையாகிலும் நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குள்ளாகக் காய்ச்சல் தணியவும் நாடி சமப்படவும் தவறியதில்லை என்று இப் புகழ் பெற்ற மருத்துவர் கூறுகிறார்.

### நஞ்சுக்கு முறிப்பு

தொன்று தொட்டே அது பலவித நஞ்சுகளுக்கு ஏற்ற முறிப்பாகவும், புழுக் கொல்லியாகவும் கையாளப்பட்டு வந்திருக்கிறது. அது காலரா நுண்ணங்களை அழிக்கும் வல்லமை உடையது என்று டாக்டர் லிக்யாணி மெய்ப்பித்துக் காட்டினார். எரிஸிப்பெலாஸ் என்ற தோல் நோயை வெள்ளைப்பூண்டினால் டாக்டர் மின்சின் குணப்படுத்தினார். ஒரு பங்கு பூண்டின் சாற்றுக்கு இரண்டு பங்கு ஒலிவ் எண்ணெய் சேர்த்துக் கலக்கி, அதைப் படை உள்ள இடத்தில் தினம் இரண்டு மூன்றுமுறை தடவி, குணம் அடையச் செய்தார்.

### இரத்தக் கொதிப்புக்கு ஏற்ற மருந்து

அது இரத்தத்திலும் வேலை செய்யக்கூடியது என்று அணிமையில் தெரிய வந்துள்ளது. இரத்தக் கொதிப்பைத் தடுப்பதற்கும் தணிப்பதற்குப் அது உதவும்.

ஆனால் அதன் விசேஷ குணம் சீரணப் பிணி இனங்களை கண்டிப்பதேயாகும். அது பெருங் குடலில் அதிகமாய் வேலைசெய்யக்கூடியது. இச்செய்கைக்காகவே பண்டையோர் அதை மிகவும் புகழ்ந்து உரைத்தார்கள். இக்காலத்தில் அதற்காகவே பெரிதும் உபயோகப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் பேராசிரியர் ஈ. ரூஸ் என்ற பெரிய ஜெர்மன் டாக்டர் பூண்டின் சாற்றை மாத்திரைகளாகச் செய்து சலக் கழிச்சல் சீதக்கழிச்சல் முதலிய நோய்களுக்குக் கொடுத்துக் குணப்படுத்தினார். குடலில் புற்றுக் கட்டி, க்ஷயக் கட்டி முதலானவை உண்டாயிருப்பதன் காரணமாக ஏற்பட்ட வயிற்றோட்டங்கள் மட்டும் அதற்குக் கட்டுப்படவில்லை என்று அவர் கூறினார். மற்றெல்லாவற்றிலும் அது அற்புதமான பலனைத் தந்ததாம். பழமையாக நீடித்த கழிச்சலை அது நன்றாகக் கண்டித்ததாம்.

### பூண்டு பூண்டறுத்த நோய்கள்

பூண்டு மாத்திரை சாப்பிட்டவர்களில் தொண்ணூற்றூறு பேருடைய நோய் வரலாறுகளை டாக்டர் ரூஸ் பிற்காலத்தில் வெளியிட்டார். அவைகளில் சிலவற்றை இங்கே சுருக்கித் தருகிறேன்.


1. ஒரு குடியானவர்: 41 வயது. பல ஆண்டுகளாகச் சீதபேதியால் பீடிக்கப்பட்டிருந்தார். வயிற்றுப் பொருமல், பிசைந்து வலித்தல், இரைதல், உடல் அமைதியின்மை. துவக்கத்தில் இரண்டு மாத்திரைகள் வீதம் தினம் மூன்று முறை மூன்று மாதம்வரை சாப்பிட்டு பின்னர் தினம் இரண்டு முறையாகக் குறைத்து உட்கொண்டு வந்தார். நாளடைவில் மலம் இறுகியது, போக்கும்குறைந்தது.

2. ஒரு புலவர். அவருக்கு அடிக்கடி அடிவயிற்றில் வலி உண்டானது. தவிர, வயிற்றில் புளிப்பு, கழிச்சல். அது குடல் வால் அழற்சியாக இருக்கலாம் என்று எண்ணி செயின்ட் ஜோஸப்ஸ் ஆஸ்பத்திரிக்கு வந்தார். ஆனால் அன்று அறுவை மருத்துவர் வரவில்லை. ஆதலால் டாக்டர் ரூஸினிடம் சில பூண்டு மாத்திரைகள் வாங்கிக் கொண்டுபோய், காலை மாலை இரண்டு மாத்திரை வீதம் சாப்பிட்டு வர, சில நாட்களில் வயிற்று வலி நின்றுவிட்டது. பிறகு அறுவை செய்து கொள்ள அவரை இசைய வைப்பது டாக்டருக்குப் பெரும் பாடாய்ப்போய்விட்டது;

### நர்ஸு ஒருத்தி குணமடைந்தாள்

3. நர்ஸு ஒருத்தி ஆய்வுக் கூடத்திலே ஒரு சீதபேதிக் கிருமியைத் தவறுதலாக உட்கொண்டுவிட்டாள். உடனே அவளுக்கு [illegible] வாந்தி, வயிற்றோட்டம்

(5-ம் பக்கம் பார்க்க)

திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்கு உகந்த நம்பிக்கையாய்ந்த பம்ப்

விங்கெட்

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்திசெய்யும் உலகப்பிரசித்திபெற்ற மெஸர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான, உறு[illegible] தண்ணீர் பம்ப்[illegible], அதிககாலம் [illegible] சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிக [illegible]. [illegible] போட்டி விலைகளில் கிடைக்கும். [illegible] 4 ஸ்[illegible] பெற்றோல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் [illegible] சிக்கனமானவை. எம்மிடம் [illegible] தில் பலரக உப [illegible] ருப்புகள் உள்ளன. [illegible] குழாய்களும், கை உருளைகளும் கிடைக்கும்.

உபவிநியோகஸ்தர்கள்:
ராஜரத்தினம் அன் கம்பெனி,
244, கே. கே. எ[illegible]. ரோடு,
யாழ்ப்பாணம்.

மூழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்
(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்ட அங்கத்தவர்களின்பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
தபாற்பெட்டி 88. கொழும்பு
காட்சியறை: ஜெனரல் லேக்ஸ்ரோட்
போன்: 7681.

உயர்ந்த சேவை

1½" மோடல்- மணித்தியாலம் 1500 - 6000 கலன் இறைக்கிறது.
2" மோடல்-மணித்தியாலம் 1680 - 11000 கலன் இறைக்கிறது
3" மோடல்-மணித்தியாலம் 4500 - 16800 கலன் இறைக்கிறது.
டிலிவரிக்கேற்ப ஹெட்டும், சக்ஷன் லிவ்ட்டும் தேவை ஆகக் கூடுதல் முழு ஹெட் 70 அடி
ஆகக் கூடுதல் சக்ஷன் லிவ்ட் 25 அடி

எமது பிரதிநிதியை விசாரிக்கவும்:
எம். பூபாலசிங்கம்,
244, கே. கே. எஸ். ரோடு,
யாழ்ப்பாணம். போன்: [illegible]


# நமக்குத் தொழில் கவிதை

## ஆடி இருபதிலே சாடு

நாட்டில் நமதுரிமை நாட்டவரும் கட்சிக்கே,
வீட்டிற்கெதிராக வோட்டிடுவாய்—போட்டியீட்டு
கூடிக் குரலெழுப்புங் கூலிகளைக் காத்திருந்து
ஆடி இருபதிலே சாடு

—செல்வி வே. அன்னலட்சுமி, மண்டைதீவு

அந்தி மயங்கி அடிவான் கருகிடினும்
வந்திடுவார் காண் என்றன் வாசலுக்கே!—சந்தியிலே
மூடி முகம்புதைத்தோர் முன்வந்தார் இன்றவரை
ஆடி இருபதிலே சாடு!

—அருணு, காரைதீவு

தாயாம் மொழியுரிமை தான்வாழும் நாட்டுரிமை
போயதே இப்பழைய புல்லரினால்—மாயாது
கூடிவந்தார் பத்துப் பேர் கூண்டோடு மாண்டகல
ஆடி இருபதிலே சாடு!

—“பசிக்கவி”, கொழும்பு

எல்லாம் அவராய் இணக்கி வைத்த முன்னணியை
கல்லறையில் மூடு! கதிகெட்டோர்—நல்லவர்போல்
நாடி வருமிந்த நாள் பிறகும் மீளாமல்
ஆடி இருபதிலே சாடு!

—நாதன், மண்டூர்

வாழுந் தமிழரசுக் கட்சிக்குன் வாக்குகளை
ஆழிபோ லள்ளி யளித்திடுவாய்!—ஈழமிசை
நீடித் துணைக்கவிழ்க்க நிற்போரை, ஏ தமிழா!
ஆடி இருபதிலே சாடு!

—செ. செல்வரத்தினம், கொக்குவில் மேற்கு

இந்தா மதுவென்றே ஈந்தாலும் பொற்குவியல்
தந்தாலும் நெஞ்சே தளராதே—சிந்தித்துக்
கூடி எழு! பொன்னரென்பார் கொள்கையிலே மண்தூவி
ஆடி இருபதிலே சாடு!

—பாலகுரு சின்னச்சாமி, மட்டுநகர்

செந்தமிழா! உன் இனத்தைச் சீர்குலைத்துச் சாய்த்திடவே
சிந்தைகொள்வார் பால்நானை சேர்பவரை-பொத்திடையே
ஓடி ஒளிய வைப்பாய் ஊர்சிரிக்கும் காங்கிரசை
ஆடி இருபதிலே சாடு!

—அனலன், குச்சவெளி

ஓடித் திரிந்தே உலுத்தர்களைக் கண்டெடுத்து
நாடிவரும் தேர்தலிலே நாட்டிவிட்டார்!—பேடி மக்கள்,
கூடிக் கழுத்தறுக்கும் கும்பல், இவர் தம்மை
ஆடி இருபதிலே சாடு!

—மு. இராசரத்தினம், அளவெட்டி

கோரையெனுங் கட்சிகளை கொத்திறேனும் சென்றமுறை,
வேரோடு கல்லிவிட வேண்டாமோ?—நேரிழையாய்
வாடி வதங்கி வலிஅவைகள் குன்ற, வரும்
ஆடி இருபதிலே சாடு!

—வே. சண்முகலிங்கம், சுன்னாகம்

எட்டப்பன் கூட்டமெமை ஏய்க்கப் புதுவேடம்
கட்டியின்று காங்கிரசில் வாரூர்காண்—இட்டமுக
மூடி கழன்று முதுகு புறங்காண
ஆடி இருபதிலே சாடு!

—க. மயில்வாகனம், பெரிய போரதீவு

உரிமைக் குரலெழுப்பும் உத்தமரை முட்ட
எருமை பலவுண்டே இன்னும்!—பெருமடையர்
கூடாத கோமாளிக் கும்பல் அது வெம்பிவிழ
ஆடி இருபதிலே சாடு!

பூதவுடற் புகழேந்தி, ஏழாலை வடக்கு

வாடி வதங்கி வருந்தும் தமிழ் மக்கள்
கூடி ஒரு கொடிகைக் கொண்டுயர்த்த—ஓடிப்போய்க்
கோடிக்குப் பின்னால் கொடுங்காங் கிரஸ் ஒதுங்க
ஆடி இருபதிலே சாடு!

—வை. கந்தசாமி, நாரந்தனை

“பொட்டப்பர்”-பொன்னரொடு போத்தற் கலைவளர்க்கும்
“எட்டப்பர்”, மொட்டைக் “கரியப்பர்”-கொட்டமெலாம்
ஓடி யொழிய ‘ஒருகண்’ அரசழிய
ஆடி இருபதிலே சாடு!

—“இராசபாரதி”, குறுமன்வெளி

கோரிக்கை நான்கைக் கொடுக்க மறுப்போருக்
கேரிக் கரையே எசமானும்—ஊரில் அவர்
மூடர்நாம் என்று முடிவுகட்ட வையாமல்
ஆடி இருபதிலே சாடு!

—‘ஏழாலைக் கவிஞர்’

“கள்” பொட்டை யாகக் கறள்பட்ட செஞ்“சாவி”
தன்கெட்ட நாக்கினுற் தானுடிய—பண்கெட்ட
சாடிவயிற் “றெட்டப்பர்” ‘சைக்கிளொடும்’ வீழ்ந்தலற
ஆடி இருபதிலே சாடு!

—‘வெல்லிக்குறும்பன்’

‘பொன்ன’ரிலே மொய்த்திருக்கும் உண்ணிகளும் போத்தற்கை
‘மன்னவ’ரும் கொள்கை மறுத்துவிட்ட—‘என்.எம்.’மின்
தோழர்களுஞ் செஞ்சட்டைச் சோம்பர்களும்சேர்ந்தழவே
ஆடி இருபதிலே சாடு!

—பரிமளா இராசதுரை, குறுமன்வெளி

கூட்டரசுக் கொள்கையெனுங் கூர்வாளைக் கையேந்தி
நாட்டின் பொதுத்தேர்தற் கோட்டமதில்—சட்டுவிறல்
பாடிக் களிக்கவே பாவாய்! முன் னோடிப்போர்
ஆடி இருபதிலே சாடு!

—வி. கி. இராசதுரை, குறுமன்வெளி

தொகுத்தவர்: கவிஞர் “அமுது”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தியோக மொழி அலுவலகத்தில்

# திடீர் திடீர் மாற்றங்கள்

## மேலும் மூன்று தமிழருக்கு கல்தா

## டட்லி தமிழரசை எதிர்த்து

### தமிழர்களை வாழ்விக்கும் இலட்சணம் இது!

உத்தியோக மொழி இலாகாவிலுள்ள தமிழ்ச் சுருக்கெழுத்துப் போதனாசிரியருக்கும் (சி. இராமலிங்கம்) தமிழ்த் தட்டெழுத்துப் போதனாசிரியர் இருவருக்கும் (வி. துரைசிங்கம், க. குமாரசாமி) அவ்விலாகாவில் வேலையில்லையென்றும், இப்பதவிகளை நீக்கிவிடுமாறும் உத்தியோக மொழி இலாகாவின் மேலதிகாரிகள் திறைசேரிக்கு எழுதியிருந்தார்கள். இப்பதவிகளை ஒழித்துவிட வேண்டாம் என்றும் எதிர்வரும் பொதுத் தேர்தல் முடிந்து தமிழ் மொழியின் நிலைமை தெளிவாக்கப்படும் வரையும் இவ்வுத்தியோகத்தர்களை பதவிநீக்கம் செய்ய வேண்டாம் என்றும் தமிழரசுத் தந்தை திரு செல்வநாயகம் பிரதம மந்திரி திரு டட்லி சேனநாயகாவுக்கு எழுதியிருந்தார். இவை பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளாகும்.

### அறிக்கை கேட்டிருந்தார்

பிரதம மந்திரி, தமிழரசுத் தந்தை எழுதிய கடிதத்தை உத்தியோக மொழி இலாகாத் தலைவருக்கு அனுப்பி ஓர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டிருந்தார். உத்தியோக மொழி இலாகாவின் தலைவர் நீட் அவெனியூ காரியாலயத்தில் வேலை செய்யும் ஒரு தமிழ் உத்தியோகத்தரையும், அவ்விலாகாவின் வெளியீட்டுப் பிரிவில் வேலை செய்யும் ஒரு தமிழ் உத்தியோகத்தரையும்கொண்டதொரு குழுவினை நிறுவி, தமிழ்ச் சுருக்கெழுத்துப் போதனாசிரியருக்கும் தமிழ்த் தட்டெழுத்துப் போதனாசிரியர் இருவருக்கும் அந்த இலாகாவில் வேலை இருக்கிறதா என்பதை ஆராய்ந்து தமக்கு ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி கேட்டிருந்தார்.

### வேலையுண்டு; வேலை இல்லை!

இம்மூன்று உத்தியோகத்தரும் தமிழ்ச் சுருக்கெழுத்துப் போதனாசிரியரையும், தமிழ்த் தட்டெழுத்துப் போதனாசிரியர்களையும் நேரில் விசாரித்தனர். இவர்

"காண்டீபன்"

களுடைய விசாரணையின் முடிவு வேறுபட்டதால் நீட் அவெனியூ காரியாலயத்து உத்தியோகத்தர் "இவர்களுக்கு வேலையில்லையென்றும்" ஏனைய இரண்டு உத்தியோகத்தரும் "இவர்களுக்கு வேலை இருக்கிறதென்றும்" தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அறிக்கைகள் பிரதம மந்திரிக்கு அனுப்பப்பட்டனவா என்பது சந்தேகத்துக்கு இடமாயுளது.

### திடீர் உத்தரவு

பிரதம மந்திரியினுடைய அனுமதி இல்லாமலே சென்ற சனிக்கிழமை (11-6-60) தமிழ்ச் சுருக்கெழுத்துப் போதனாசிரியருக்கும் தமிழ்த் தட்டெழுத்துப் போதனாசிரியர்களுக்கும் 13-6-60ல் வேறு அலுவலகங்களுக்குச் செல்லுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இத்திடீர் உத்தரவுக்குக் காரணம் நீட் அவெனியூவிலுள்ள தமிழ் உத்தியோகத்தரின் அறிக்கையே என்கின்றனர். மேலதிகாரிகள் சொல்லுகிறபடி அறிக்கை எழுதுவதில் இந்த உத்தியோகத்தருக்கு நிகரான துரோகிகள் இலங்கையில் இல்லை. முன்னொரு முறை இவர் சமர்ப்பித்த அறிக்கையினாலேதான் இரு தமிழ் உத்தியோகத்தர்களுக்கு வேலைநீக்க அறிவித்தல் கொடுக்கப்பட்டது.

### சர்வாதிகார நடவடிக்கை

யார் என்ன சொன்னாலும் தாங்கள் நினைத்ததையே செய்வோம் என்பதை உத்தியோக மொழி இலாகாத் தலைவர்கள் இந்தச் சர்வாதிகார நடவடிக்கையின் மூலம் நிரூபித்துவிட்டார்கள். இத்தீவிர சிங்கள வகுப்பு வாதிகள், உத்தியோக மொழி இலாகாவிலுள்ள தமிழ்ப் பகுதியை இல்லாமல் செய்துவிட சூழ்ச்சி செய்து வருகிறார்கள் என்று நாம் முன்னரே பல முறை எடுத்துக் கூறியது இப்பொழுது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

எட்டப்பன் கூட்டத்துடன் சேர்ந்து தமிழரைக் காட்டிக் கொடுப்பதன் மூலம் நீட் அவெனியூ அலுவலகத்தில் எவ்வித வேலையும் இல்லாமல் சுசாலாகக் காலம் கழிக்கலாமென்று எண்ணியிருக்கும் தமிழ் ... இருப்பவர்களுமாகிய மூன்று தமிழ் உத்தியோகத்தரில் இருவரை இந்தத் திடீர் மாற்றம் கலங்கச் செய்துவிட்டது. இனித் தங்கள் கழுத்திலும் மாலை விழுங்காலம் விரைந்து வந்து விட்டது என்று இந்த உத்தியோகத்தர்கள் அந்தரப்படுகிறார்கள்.

### அவர் செய்த சபதம்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நீட் அவனியூவில் இருந்த நாலைந்து தமிழ் உத்தியோகத்தர்களை வெளியீட்டுப் பிரிவிக்கு மாற்றுவதற்குத் தங்கள் தலைமை நண்பரே காலாய் இருந்ததாகவும், அதன் பின்னர் எவ்வித மாற்றமும் நடைபெறுதென்று நம்பியிருந்ததாகவும் இவர்களில் சிலர் இப்பொழுது கூறுகின்றனர்.

உத்தியோக மொழி இலாகாவில் உள்ள உயர்தர சிங்கள அதிகாரி ஒருவர் நீட் அவெனியூவில் உள்ள காரியாலயத்தில் ஒரு தமிழரையும் இருக்க விடமாட்டேன் என்று சபதம் செய்தாராம். அவர் கூறிய சபதத்தை இப்பொழுது நிறைவேற்றிவிட்டார் என்றும், இப்பொழுது அங்கே எஞ்சி இருக்கும் தங்களுக்கு எவ்வித வேலையும் இல்லாமையால் எந்தக் கணமும் தங்களை சிறிதும் இரக்கமின்றி அந்த அதிகாரி மாற்றிவிடுவார் என்றும் இவர்களில் ஒருவர் தம் அந்தரங்க நண்பரிடம் தெரிவித்தார்.

### யு. என். பி. தமிழர் உணர்வார்களா?

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு, பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகாவும் அவரின் பொறுப்பில் உள்ள உத்தியோக மொழி இலாகாவும் செய்துவரும் இந்தக் கைங்கரியத்தை அறிந்த பின்னுந்தான் யு. என். பி.தமிழர்க்கு போதிய சலுகைகளை அளிக்கும் என்று எண்ணி தாங்களும் ஏமாந்து பிறரையும் ஏமாற்ற முயன்ற தமிழர்கள் உண்மையை உணருவார்களா?

"நாங்கள் தமிழர்களை எதிர்க்கவில்லை. தமிழரசுக் கட்சியையே எதிர்க்கிறோம்" என்று தேர்தல் கூட்டங்களில் அழகாக ஆலாபனை செய்கிறார் திரு. டட்லி. அரசாங்க இலாகாக்களிலிருந்து தமிழ் பகுதிகளையும் தமிழ் உத்தியோகஸ்தர்களையும் ஒழித்துக்கட்டுவதுதான்

## கடைசித்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் வாழ்ந்தாலும் சரி தமிழன் தானே என்றஇலட்சிய உறுதிப்பாடு ஒவ்வொரு தமிழனிடமும் இருக்கவேண்டியது அவசியம்" என்றார்.

### மோதவிடப் பார்க்கிறார்கள்

செல்வி பத்மாவதிவேலுப்பிள்ளை பேசுகையில், "தென்னிலங்கையில் உள்ள அரசியல் வாதிகள் தங்கள் அதிகார வெறியைப் பூர்த்தி செய்வதற்காக ஒரு பாபமும் அறியாத சிங்களப் பொது மக்களையும் தமிழ் மக்களையும் மோதவிடப் பார்க்கிறார்கள். சிங்களச் சகோதரர்களிடம் எங்களுக்கு எந்த விதமான துவேஷமும் இடையாது. தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் என்றும் சகோதரர்களாகவே வாழ விழைகிறோம். எமது கட்சி எதிர்ப்பது அரசாங்கத்தின் ஒற்றையாட்சித் திட்டமொன்றையேதான். இணைப்பரசு ஏற்படாவிடில் இலங்கையில் ஒற்றுமையையோ பொருளாதார சுபீட்சத்தையோ காண்பது பகற்கனவாகவே முடியும்" என்றார்.

அடுத்ததாக திருவாளர்கள் த. ஏகாம்பரம், முத்துக்குமாரசுவாமி, நவரெத்தினம் ஆகியோர் பேசினர்.

மூதூர்த் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டமாக இக் கூட்டம் நடைபெற்றது.

## சிலாபத்தில் தமிழரசுக் கூட்டம்

தமிழரசுக் கட்சி அபேட்சகராகச் சிலாபத் தொகுதியில் போட்டியிடும் திரு. பிரான்ஸிஸ் பெரேராவுக்கு ஆதரவு தேடும் முகமாக இம்மாதம் 12-ந் தேதி இரவு அங்கு ஒரு கூட்டம் நடைபெற்றது.

சிலாபத்திலுள்ள படித்தவர்களும், பிரமுகர்களும், வர்த்தகர்களுமான தமிழர்கள் இக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். கொழும்பிலிருந்து திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் அந்தரங்க காரியதரிசி திரு. வி. குமாரசாமியும் அழைப்பின் பேரில் சமுகமாயிருந்தார்.

சிலாபத் தொகுதியில் தமிழரசுக் கட்சி எதற்காகப் போட்டியிடுகிறது என்ற விவரங்கள் விளக்கப்பட்டன. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியேயுள்ள தமிழ் பேசும் மக்கள் தங்கள் மொழி, கலை, கலாச்சாரம், பொருளாதாரம் ஆகியவற்றுக்கு மேலாகத் தம் புனிதமான மத சுதந்திரத்தையும் பாதுகாத்து, தன்மானத்துடன் தலை நிமிர்ந்து வாழ வேண்டுமானால், இலங்கையில் எங்கோ ஒரு பகுதியில் தமிழ் இனம் சுயாதீனத்துடன் அரசோச்சித் தானாக வேண்டும் என்றதத்துவத்தை திரு. குமாரசாமி பிறநாட்டு உதாரணங்களை முன்வைத்துச் சாங்கோபாங்கமாக விளக்கிப் பேசினார்.

கூட்டத்தில் வந்திருந்த பலரும்—பெரும்பாலும் தமிழ் ஆசிரியர்கள்—திரு. குமாரசாமியிடம்கேள்விக்கு மேல் கேள்வி போட்டுச் சந்தேகங்களுக்கு விளக்கம் கோரினர். திரு. குமாரசாமியும் சளைக்காமல் வெகு பொறுமையோடு சகலவற்றையும் ஸ்படிகத் தெளிவாக விளக்கி வைத்தார்.

திரு. குமாரசாமி அளித்த பதில்களினால் மன நிறைவும் திருப்தியும் அடைந்த பிரஸ்தாப கூட்டத்தினர் எதிர் வரும் பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகருக்கே தங்கள் பரிபூரண ஆதரவையும் அளிப்பதென ஏகமனதாக முடிவு செய்தனர்.

கூட்டத்தின் இறுதியில் நன்றி கூறிய ஆசிரியர் திரு. வின்ஸன் லாஷுஸ் திரு. குமாரசாமியை வெகுவாகப் பாராட்டியதோடு, "திரு. பிரான்ஸிஸ் பெரேராவுக்கே அனைவரும் வாக்களிப்போம்" என்றும் உறுதி கூறினார்.

அவர் தமிழர்களை நேசிக்கும் இலட்சணமோ என்று கேட்கிறோம்.

## எல்லா மக்களும் தினமும்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய கெட்ட குணங்கள் உண்டாயின. மலத்துடன் சீதமும் இரத்தமும் கலந்து கழிந்தன. உடம்பெல்லாம் கொடுமையான வலி. அவள் செத்துப்போவாள் என்றே எல்லோரும் நினைத்தார்கள். இறுதியில் டாக்டர் ருனின் மாத்திரைகளை இரண்டு வீதம் நாள் ஒன்றுக்கு ஐந்து வேளை ஆறு நாள்வரை கொடுத்தார்கள். அவள் விரைவில் நோய் நீங்கி, குணம் அடைந்தாள்.

4. ஒரு பெண். 24 வயது. குடல் சவ்வு அழற்சி. திடீரென உடம்பெல்லாம் குத்தும் வலியும் உண்டானது. குளிர் நடுக்கம், உணவு வெறுப்பு, வாந்தி, அடிக்கடி வயிற்றுல் போனது. நாள் ஒன்றுக்கு மூன்று வேளை இரண்டு மாத்திரை வீதமாக ஐந்து நாள் சாப்பிட்டு வர, நோய் சுகப்பட்டது.

5. ஒரு டிருத்துவர். 28 வயது. குடல் சவ்வு அழற்சி. இருந்தாற்போல், வயிற்றோட்டம் உண்டானது. உணவு சாப்பிடும் ஒவ்வொரு தடவையும் வயிறு கழிந்தது. மூன்று நாள் மருந்திலே குணம்.

6. நரம்புக் கிளர்ச்சியால் உண்டான வயிற்றோட்டம். சிலருக்கு எக்காரணத்தினாலாவது மிகவும் பதற்றம் ஏற்பட்டால், உடனே பேதி காணும். அப்படிப்பட்ட ஒரு நோயாளி பூண்டு மாத்திரை சாப்பிட்டு, சுகம் அடைந்தார்.

### பேராசிரியர் பெற்ற பலன்

7. ஒரு பேராசிரியருக்குப் பதினேழு ஆண்டுகளாக சில சமயம் வயிற்றோட்டமும் சிலசமயம் மலச்சிக்கலும் மாறி மாறி இருந்தன. பெருங்குடல் அழற்சி. வாயுத் தொந்தரவு. இரண்டரை மாதத்திலே சுகம் பெற்றார்.

8. ஒரு மாணவன். 23 வயது. அதிக வாயுத் தொந்தரவு, பசி மந்தம், உடல் மெலிவு, வலுக் குறைவு, வயிற்றோட்டம். பூண்டு சாப்பிட, நோய் விரைவில் நீங்கியது.

9. இரண்டு பள்ளி ஆசிரியர்கள். ஒருவர் வயது 55, மற்றவர் 47. இருவருக்கும் மலப்போக்கு அதிகமாய் இருந்தது. வாயுத் தொல்லை வயிற்று உப்பிசம், ஏப்பம், தலைவலி, இருதயப் படபடப்பு. ஆறு வாரங்களில் நல்லகுணம்.

### பயமின்றிச் சாப்பிடலாம்

வயிற்றுவலி, வயிற்றோட்டம், உப்பிசம், வாயுத் தொல்லை முதலிய வயிற்றுச் சிறு நோய்களுக்கெல்லாம் அச்சம் இன்றிப் பூண்டை உபயோகப்படுத்தலாம் என்று அவர் கூறுகிறார். ஆனால் மற்றப் பரிகார முறைகளைப் போலவே, இதுவும் ஒவ்வொரு சமயம் பயன்படாமற்போகலாம். மருந்து அளவு வேளைக்கு இரண்டு மாத்திரை வீதம் நாள் ஒன்றுக்கு மூன்றுவேளை ஆகும். நோய் கடுமையாக இருந்தால், தினம் ஐந்து வேளைவரை சாப்பிடலாம், இலகுவான நிலைமைகளில் ஒன்று இரண்டு வேளை போதும்.

டாக்டர் ருனின் பூண்டு மாத்திரைப் பெயர் அலிஸாட்டின் (Allisatin) என்பது; ஒரு கிராம் எடை உள்ளது. இவைகளைப் பயம் இன்றிச் சாப்பிடலாம், தீங்கு அற்றன ... நாமுது.

—"நல்வழி"


இலங்கைக் கலைக் கழகம்

தமிழ் நாடக நடனக் குழு

# நாடகப் போட்டி

பரிசு விபரம்:—

முதற் பரிசு ரூ. 500/-

இரண்டாம் பரிசு ரூ. 350/-

மூன்றாம் பரிசு ரூ. 150/-

போட்டி முடிவு திகதி 6-8-60.

பங்கு பெற விரும்பும் நாடகாசிரியர்கள் போட்டி பற்றிய விதிகட்கு கீழ்க்காணும் முகவரிக்கு எழுதவும்.

கலாநிதி சு. வித்தியானந்தன்

தலைவர்

தமிழ் நாடக நடனக் குழு

இலங்கைக் கலைக் கழகம்

கலா பவனம்

கொழும்பு-7.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏககாலத்தில் ஒருவர் இரு இடங்களில் இருக்க வழியுண்டா?

## அந்தவழியை ஒரு தமிழ்ப் புலவர் திருக்களந்தைச் சிவனுக்கு காட்டினார்

## பக்திக் கவிஞர்கள் ஊட்டும் தமிழ்க் கவிதை இன்பம்

ஒரு தேசத்திற்குப் புகழ் புலவர்களால் விளைகின்றது. சிறந்த புலவர்கள் இருந்து நாட்டை அலங்கரிக்கின்றார்கள். மேலும் புலவர்கள் திறமையாகப் பாடுவதிலும், திறமையாகப் பேசுவதிலும் வல்லவர்கள். அக்காலத்துப் புலவர்களின் தேனூறும் பாடலுக்கு மன்னர்கள் வாயூறி நின்றார்கள். மன்னர்கள் மட்டுமா? ஆண்டவன் கூட.

"பாவலான் ஒருவன்
செந்தமிழ்க் கிரங்கிப்
பரவையார் ஊடலை மாற்ற
ஏவலாளாகி இரவெலாம்
உழன்றான்"

ஏகநாயகனாகிய எம்பெருமான் என்றால், பாவலர் பெருமை பாட்டுக்கும் ஏட்டுக்கும் அடங்குமோ?

சொக்கநாதப் புலவர் என்ற ஒருவர் மதுரையில் இருந்தார். அவர் திருமலை நாயக்கர் காலத்தவர். அவர் பல பாடல்கள் பாடியிருக்கின்றார். ஒவ்வொரு பாடலும் சுவை மிகுந்தது. சொல் நடை, பொருள் நடையுடன் கூடியது.

சொக்கநாதப் புலவர் ஒரு சமயம் திருக்களந்தை என்ற திருத்தலஞ் சென்றார்.

சுவாமி திருமுன் நின்று அழகாகப் பாடினார். சிவலிங்கத்திலிருந்து ஒரு குரல் எழுந்தது.

"அன்பனே! உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள்"

இந்தக் குரலைக் கேட்டவுடனே புலவர் திடுக்கிட்டுப்போனார். எம்பெருமான் திருவருளை எண்ணினார். அவர் கண்களிலிருந்து விண்மாரி என நீர் வழிந்தது; சொல் குழறியது.

### செல்வத்தைக் கேட்கவில்லை

ஆண்டவனிடம் அவர் என்ன கேட்டார்? அழிகின்ற பொன்னையும் பொருளையும் நிலபுலங்களையுமா கேட்டார்? இல்லை, இல்லை!

நிரம்பிய பொன்னும் பொருளும், நிலபுலங்களும் உடையவன் மகிழ்ச்சியாகவும், திருப்தியாகவுமா இருக்கின்றான்? செல்வம் உயர உயரக் கவலைகள் உயருகின்றன. மன்னாதி மன்னரும் கவல்கின்றார்கள். பெரிய கோடீஸ்வரர்கள் மனச்சாந்தியின்றி வருந்துகின்றார்கள்.

ஆதலால் அறிவு நிறைந்த புலவர் பெருமான் அல்லலுக்கு உறைவிடமான செல்வத்தை வேண்டினாரில்லை.

### கேட்ட வரம்

அவர் வேறு என்ன வேண்டினார்? இறைவன் நமது உள்ளத்தில் இருப்பதுவே மேலான இன்பம் என்று கருதினார்.

**திருமுருக கிருபானந்தவாரியார்**

ஒரு மாகாணத்துக் கவர்னர்—அல்லது முதன் மந்திரி நமது வீட்டில் வந்து சிலநேரம் தங்கிவிட்டுச் சென்றால் அந்த வீட்டிற்குப் பெருமை ஏற்படுகின்றது.

அகிலாண்டகோடி பிரமாண்டநாயகனான எம்பெருமான் நமது உள்ளத்தில் எழுந்து அருளினால் அதைவிட மேலான ஒரு பெறும்பேறு இருக்க முடியுமா?

"சுவாமி, கருணைக் கடலே! தேவரீர் என் உள்ளத்தில் எழுந்தருளியிருக்க வேண்டும்" என்றார்.

### இறைவன் மறுத்தார்!

இறைவன் புலவருடன் வேடிக்கையாகப் பேசுவதை விரும்பினார். "அன்பனே! இதோ இந்தத் திருக்களந்தைக் கோயிலிலே இருக்கின்றேன். இங்கு என்பால் பல அடியார்கள் இடையறாது வந்து வந்து வழிபட்டு வரம் பெறுகின்றார்கள். இதனை விடுத்து உன் உள்ளத்தில் நான் எப்படி வர இயலும்? அப்படி வந்து தங்கினால் இங்கு வருகின்ற அடியார்கட்கு ஏமாற்றமாகிவிடும். ஆகவே நீ கேட்ட வரத்தின்படி நான் உன் உள்ளத்தில் எப்போதும் தங்கியிருக்க முடியாது" என்றார்.

### புலவர் கூறிய வழி

புலவர் இந்த வாசகத்தைக் கேட்டார். இறைவன் எங்கும் தங்கும் நிறையுடையவன் பல்வேறு வடிவும் பல்வேறு செயலும்பூண்ட பரிபூரணன் எனினும் இறைவன் "திருக்களந்தைக் கோயிலில் இருக்கின்றேன். உன் உள்ளத்தில் எவ்வாறு வந்து தங்குவேன்" என்று கூறியதனால் நாமும் சமர்த்தாகத்தான் கூற வேண்டும் என்று கருதினார்.

"ஆண்டவனே! நீர் இரண்டு இடங்களிலும் ஏககாலத்தில் இருக்க ஒரு வழி கண்டு பிடித்திருக்கின்றேன். அது என்ன வழி தெரியுமா? கூறுகின்றேன் கேளுங்கள்:

"தாங்கள் முன்னர் தங்கள் திருமேனியில் இடப்பாகத்தை என் தாய் உமாதேவிக்குத் தந்தீர்கள். அவருடைய வலப்பாகத்தைப் பெற்றுக்கொண்டீர்கள். அந்த வகையில் தங்கள்

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழரை நசுக்கும் சிங்களக் குடியேற்றம்

## சர்வதேச சட்டத்துக்கு முற்றும் முரணானது

## வவனியாவில் எஸ். ஜே. வி.

**'சிறுபான்மையினத்தின் பாரம்பரிய உறைவிடங்களில் பெரும்பான்மைச் சமூகத்தினர் குடியேறுவதை சர்வதேச சட்டம் அனுமதிக்காது. இத்தகைய குடியேற்றம் சிறுபான்மையினத்தை அழிக்கும் தன்மையுடையது. அவர்கள் குடியுரிமையை மறுப்பதுமாகும்.'**



திரு. எஸ். கதிரவேற்பிள்ளை

இவ்வாறு வவனியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:—

இன்று இந்நாட்டை எதிர்நோக்கி நிற்கும் இனப் பிரச்னையைத் தீர்க்க வல்லது தமிழரசுக் கட்சி கேட்ட நான்கு அம்சக் கோரிக்கைகளே. திரு. டட்லி சேனநாயக்கா எமது கோரிக்கைகள் பற்றி சிங்களச் சகோதரரிடையே பொய்ப் பிரசாரஞ் செய்து திரிவது கவலை தரும் விஷயமாகும். யு. என் பி. யினர் சிங்கள மக்களுக்குக்

(9-ம் பக்கம் பார்க்க)

# இன ஒற்றுமைக்காகவே சத்தியாக்கிரகம் நடத்தப்பட்டது

## காலிமுகக் காடையர்களால் இதை உணர முடியவில்லை!

## தமிழரசு யாழ் அபேட்சகர் கதிரவேற்பிள்ளை விளக்கம்

**"துக்கம், துக்கத்துக்கான காரணம், துக்க நிவாரணம், நிவாரணத்துக்குரிய மார்க்கம் ஆகிய நான்கைப்பற்றியும் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் சிந்திக்க வேண்டும். எப்போதும் துக்கம் காத்துக்கொண்டிருப்பதாலோ, துக்கதினம் அனுஷ்டிப்பதன் மூலமோ அந்தத் துக்கத்தைத் துடைத்துவிட முடியாது"**

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியால் யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நடத்தப்பட்ட காலிபேஸ் சத்தியாக்கிரக நினைவு நாளான ஜூன் 5 துக்க தின கூட்டத்தில் மேற்படி கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதி அபேட்சகரான அட்வகேட் எஸ். கதிரவேற்பிள்ளை பேசும்போது தெரிவித்தார்.

அட்வகேட் கதிரவேற்பிள்ளை தமது பிரசங்கத்தில் சொன்னதாவது:

### புனிதமான சத்தியாக்கிரகம்

தமிழ், சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதே தமிழரசுக் கட்சியின் நோக்கமாகும். இரு இனங்களையும் பிரித்துச் சாதிப் பூசலை வளர்ப்பதற்கு ஆதாரமாகச் சிருஷ்டிக்கப்பட்ட சட்டத்தைஎதிர்த்தே காலிபேஸ் திடலில் சத்தியாக்கிரகம் அனுஷ்டித்தோம். இன ஒற்றுமையின் பேரால் நடத்தப்பட்ட அந்தப் புனிதமான சத்தியாக்கிரகத்தைக் காடையர் மூலம் எதிர்த்தது பெரிய துக்கம். அதன்மூலம் அவர்கள் இழிவான பெயரைத் தேடிக்கொண்டதும் துக்கத்துக்கிடமான காரியமாகும்.

### அரசியலில் குறைபாடு

சிங்கள மக்கள் தமக்கு மட்டும் சொந்தமான அரசியல் மொழியை நம்மீது திணித்தது, திணிக்கப்பட்டதால் நாம் அடைந்த இன்னல், அநியாயமாகத் தமிழ் மக்களைத் தாக்கியது ஆகிய துக்கச் செயல்கள் ஒன்றன்பின் ஒன்றாக நீண்டுகொண்டு போவதைக் காணலாம். இவற்றுக்கெல்லாம் அத்திவாரமாக அரசியல் வளர்ச்சியில் குறைபாடு நிலவுவதும் துக்கத்துக்குரியதாகும்.

### சிங்கள மக்கள் கெட்டவர்களல்லர்

இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு, சிங்கள மக்களைக் கெட்டவர்கள் என நாம் சொல்ல முடியாது. அனுபவம் ஆற்றல், பண்பாடு என்பனவற்றில் உள்ள குறைபாட்டினால் அவர்கள் திடீரெனக் கிடைத்த அதிகாரத்தைச் சரியான வழியில் பாவிக்கத் தெரியாமல் தவறிவிட்டார்கள். இதுவே மேற்கண்ட துக்கங்களை விளைவித்தது. இந்த நிலை மாற்றப்படக் கூடியதா? எந்த இனத்தினதும் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படாத வகையில்

(9-ம் பக்கம் பார்க்க)

பணம்! சேமியுங்கள்!! பணம்!!!

இன்றே நாஷனல் பாட்டரிகளைப்



பாவிக்க ஆரம்பித்து அதிக லாபம் பெற்று ஆனந்தியுங்கள்.



நீடியகாலம் பாவிக்கிறது விலையோ மிகக் குறைவு

இறக்குமதியாளர்கள்:

எஸ். யூ. முஹம்மது ஹாஜியார்.

70, டாம் வீதி, கொழும்பு. போன்: 7653✶143, தெலிகிராம்: ...525

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி அரசமைப்பில் இஸ்லாமிய அரசு

## இலங்கை முஸ்லிம்களுக்கு ஓர் அரிய வரப்பிரசாதம்

## முஸ்லிம்கள் நசுக்கப்படுவர் என்பது சிறுபிள்ளைத்தனமான ஓலமாகும்

(அல்-ஹாஜ் .வி .எம் . ஷம்சுத்தின்)

"இலங்கையில் ஒரு சமஷ்டி அரசியலை ஏற்படுத்தினாலொழிய தமிழ் மொழி பேசும் இனங்களுக்கு விடுதலையில்லை என்பதை தமிழரசுத்தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கண்டு கொண்டார். இக் கருத்தை அவர் பிரசாரம் செய்த சமயம், யு. என். பி. அரசியல் கட்சி கலங்கியது. யு. என். பி. கட்சியில் அட்டைபோல் ஒட்டிக் கொண்டு 10 லட்சம் தமிழ் பேசும் மக்களின் வாக்குரிமையைப் பறிக்க பார்த்துக் கொண்டிருந்த யு. என். பி. தாஸர்களும் யு.என். பிக்கு பக்க பலமாக நின்றனர்.

முஸ்லிம் தலைவர்களில் சிலர், தமிழரசுக் கட்சியின் கோரிக்கை நிறைவேறுமாயின், சிங்களப் பகுதி முஸ்லிம்கள் நசுக்கப்பட்டு விடுவார்களெனப் பூச்சாண்டி காட்டினர்! "இந்தியாவைப் பிரிப்பது, பெற்றதாயை இரு துண்டாக வெட்டுவதற்கு ஒப்பாகுமென" இந்திய காங்கிரஸ் பிரசாரம் செய்தபோது; "பிரிந்து போவதால் இந்தியாவுக்கு நஷ்டமில்லை" என்று ஜனப் ஜின்னு கூறினார். இக் கூற்றுக்கு ஆதரவு கொடுத்தவர்கள் இலங்கையிலுமுண்டு. அவர்கள்தான் இன்று இலங்கையிலுள்ள முஸ்லிம் தலைவர்கள்.

### புரிந்து கொள்ளவில்லை

இந்த முஸ்லிம் தலைவர்கள்—மற்றும் சிங்களவர்களைப் போல்—சமஷ்டி என்றால் என்னவென்பதைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. சமஷ்டி என்றால் இலங்கையைப் பிரிப்பதல்ல! வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குப் பிரதேச சபைகள் அமைக்கப்பட்டு தனி அரசியலமைப்பு வகுத்துக் கொள்வதுதான். இப்படிச் செய்வதால், பொருளாதாரம் குறைவு படாது. ஏனெனில், சமஷ்டிக்கு, மூன்று பெரிய துறைமுகங்கள் கிடைக்கும். அவை யாவன, திரிகோணமலை, காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை.

இப்படி நிர்வாக அதிகாரப் பங்கீடு நடந்தால் சிங்களப் பகுதியிலுள்ள முஸ்லிம்களுக்கு எவ்வித தீங்கையும் சிங்களவர்களாலோ, அல்லது அரசாங்கத்தாலோ செய்ய முடியாது.

### அங்கும் மோதவில்லையே

இந்தியாவில், கிழக்கு வங்காளமும், மேற்கு வங்காளமும், அடுத்தடுத்து இருப்பதுடன், தனியாக ஆட்சியும் செய்து வருகின்றன. அங்குள்ள இரு சமூகப் பெரும்பான்மை மக்கள் மோதிக் கொள்ளவில்லை! இஃதே போல், இந்தியா—பாகிஸ்தான் உறவுகள் மேலும் பலப்பட்டு வருவதுடன் "இரு அரசாங்கங்களும் யுத்தம் புரிவதில்லை" என்ற ஒரு ஒப்பந்தமும் உருவாகயிருக்கின்றது.

### பதவிக்குத் தலை சாயமாட்டார்

தமிழரசுக் கட்சி இன்று தனிப்பெருமையுடன் தலை தூக்கி நிற்கிறது. எவ்வித அரசியல் கட்சியும் தமிழரசுக்கட்சியின் ஆதரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. தமிழரசுக் கட்சியின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டாலன்றி சிங்களக் கட்சிகளுக்கு அதன் ஆதரவு கிடையாது. திரு. செல்வநாயகம் மந்திரிப் பதவிக்காகத் தலை சாய்க்கமாட்டார் என்பது திண்ணம். அது நிரூபிக்கப்பட்டுவிட்டது கடந்த பாராளுமன்றத்தின் காலத்தில்.

### பயத்துக்கு இடமில்லை

சமஷ்டி ஏற்பட்டால், இலங்கை முஸ்லிம்களின்—அதுவும், கிழக்கு மாகாணத்தில் வதியும் முஸ்லிம்கள் நிலைமை என்ன? இவர்கள் தமிழருக்கு அடிமைப்பட்டு விடுவார்கள் (மொழி அடிப்படையில் முஸ்லிம்களும் தமிழர்

(10-ம் பக்கம் பார்க்க)

# முதலிக்குளத்திட்டத்தில் 217-குடும்பங்களுக்கு காணிகள்

## இராஜவரோதயத்தின் முயற்சி அளித்துள்ள மகத்தான பயன்

## இந்தத் திட்டத்தில் பூராவும் தமிழர்கள்

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு என். ஆர். இராஜவரோதயத்தின் முயற்சியின் பயனாக முதலிக்குளத் திட்டத்தில் 217 பேர் காணிகள் பெறுகிறார்கள்.

திருமலை மாவட்டத்தின் கீழுள்ள முதலிக்குளக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் காணிகள் விநியோகிக்கப்படும் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. சித்திரைத் திங்களில் நடைபெற இருந்த காணிக் கச்சேரிகள் திருகோணமலைத் தமிழரசு வாலிப முன்னணியினரதும் தமிழரசுத் தலைவர் திரு ந. இ. இராஜவரோதயத்தினதும் முயற்சியினால் வைகாசித் திங்கள்வரை ஒத்தி வைக்கப்பட்டது. முதல் நடைபெறவிருந்த காணிக் கச்சேரிகளில் பங்குபற்றும் விண்ணப்பதாரர்களுக்கு பத்து வருடகால எல்லை முன்னாள் கடற்படை ஊழியர்களுக்கான சலுகைகள் கொடுபடவில்லை.

### விடாமுயற்சியால் விளைந்த பயன்

தமிழரசுத் தலைவரின் விடாமுயற்சியால் பத்து வருட காலங்கள் திருமலையில் வசித்தவர்களுக்கும், முன்னாள் கடற்படைத்தள ஊழியர்களுக்கும் தான் முதற் சலுகை அளிப்பதென நில அமைச்சு தீர்மானித்தது. அதற்கிணைய வைகாசித் திங்களில் நடைபெற்ற காணிக் கச்சேரி விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தது.

### அழைப்புகள் கிடைத்துள்ளன.

கடந்தவார இறுதியில் தான் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்குத் திருமலை அரசினர் பகுதியிலிருந்து அழைப்புகள் கிடைத்துள்ளன. முன்னூற்றி பதினெட்டு விண்ணப்பதாரர்களுக்குக் காணிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள்

கடந்த வருடத்தில் காணிகள் கொடுபடாதிருந்த 101 தமிழ்க் குடும்பங்களுட்பட புதிதாக 217 குடும்பங்கட்கு காணிகள் கொடுக்கப்பட்டுள்ளன. புதிதாகக் காணி கொடுக்கப்பட்டவர்களும் தமிழர்கள்.

முதலிக்குளத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட காணிகள் அனைத்தும் தமிழர்களுக்கே கொடுக்கப்பட்டது என்பதும் திரு. என். ஆர். இராஜவரோதயத்தின் விடா முயற்சியே இதற்குக் காரணம் என்பதும் குறிப்பிடத் தக்கனவாகும்.

# ஆனை ஆனைப் பாராமல்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சுக் கட்சியினருக்கு வாக்களித்தால் தமிழர்கள் சிங்களவர்களிடம் மீண்டும் அடிபடவேண்டியதுதான் என்று முழக்கஞ் செய்தார்கள். 19 தொகுதிகளில் 15 தொகுதி வாக்காளர்கள் அடிக்குப் பயந்தவர்கள் நாங்கள் அல்ல என்று தங்கள் ஆண்மையை நிரூபித்தார்கள். இத்தொகுதி மக்கள் அவ்விதம் செய்யவில்லை. சென்ற தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் என்ற பட்ட மரத்திற்கு ஒரு மொட்டைக் கொம்பராக இத்தொகுதிப் பிரதிநிதி அனுப்பப்பட்டார். இனி மேலும் நீங்கள் அத்தவறை செய்யமாட்டீர்கள். உங்களுக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைத் தவறவிடமாட்டீர்கள்"—இவ்வாறு கூறினார் திரு அமிர்தலிங்கம்.

### எட்டப்பன்கள் அல்லர்

அபேட்சகர் திரு க. ஜெயக்கொடி பேசுகையில்: "தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பட்டம் பதவியை விரும்பாதவர்கள். தமிழினத்தின் நலன் ஒன்றிலேயே கண்ணாகவிருப்பவர்கள் என்பதைக் கடந்தகாலத்தில் நிரூபித்துவிட்டார்கள். தமிழனைக் காட்டிக்கொடுக்கும் எட்டப்பன்களாக அவர்கள் ஒருபோதும் மாறமாட்டார்கள்.

"எந்த அரசாங்கத்துடனும் சேரவோ, அன்றேல் எதிர்த்து நிற்பதோ தமிழரசுக் கட்சியினரின் நோக்கமல்ல. எமது கட்சியின் கோரிக்கைகளை எக்கட்சியினர் ஏற்கின்றார்களோ அவர்களால் நிறுவப்படும் அரசாங்கத்தை ஆதரிப்பது தான் எமது கொள்கை. தமிழர்களின் ஒன்றுபட்ட சக்தியின் முன், சிங்களவர்களின் அடிமைகளாகத் தமிழர்கள் வாழும் நிலையை தமிழரசுக் கட்சி ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. யு. என். பி. யின் மறைமுகமாகப் போட்டியிடும் தமிழ் காங்கிரஸ் வாதிகளை தமிழர்கள் ஆதரிக்கக்கூடாது. தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவனும் தமிழரசுக் கட்சியையே ஆதரிக்க வேண்டும்" என்றார்.

### நாம் கூறியது உண்மையாகிவிட்டது

பருத்தித்துறைத் தொகுதி அபேட்சகர் திரு. க. துரைரத்தினம் பேசுகையில்: சென்ற தேர்தல் காலத்தில் நாம் கூறியது முற்றும் உண்மையாய்விட்டது. தற்போது போட்டியிடும் 15 கட்சிகளில் எக் கட்சியாவது நிரந்தரமான பெரும்பான்மையைப் பெற்றுவிட முடியாது. தமிழர்களிடையே ஒற்றுமை இருக்கும்வரை எந்த அரசாங்கமும் தமிழர்களின் ஆதரவைப் பெறாது அரசோச்ச முடியாது.

### சிம்மசொப்பனம்

"தமிழர்களின் ஒன்றுபட்ட சக்தியாகத் திகழும் தமிழரசுக் கட்சியென்றால் தென்னிலங்கையில் சிங்களக் கட்சியினருக்குச் சிம்ம சொப்பனமாகிவிட்டது. முதலாளித்துவ பத்திரிகைகளும் எமக்கு மாறாகப் பிரசாரஞ் செய்கின்றன. இவ்வேளையில் பாராளுமன்றத்தில் கோப்பாய்ப் பிரதிநிதி திரு மு. பாலசுந்தரம் விட்டு வந்த சவாலை நிறைவேற்றுவதற்கு தமிழ் தொகுதிகளில் போட்டியிடும் தமிழரசுக் கட்சியினரைச் சென்ற முறையிலும் கூடுதலான அதிகப்படி வாக்குகளினால் தமிழ் மக்கள் தெரிவு செய்ய வேண்டும். அதன்மூலம் தமிழர்களின் கோரிக்கை தமிழரசுதான் என்பதைத் தென்னிலங்கை மக்களுக்கு உணர்த்த வேண்டும்" என்றார்.

### சிறுபான்மையினர் கடமை

"தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்தில் தமிழர்களைக் காட்டிக்கொடுத்தார்கள் சிறுபான்மைத் தமிழர்கள் என்ற வசை எதிர்கால சரித்திரத்தில் இடம்பெறாதிருக்க சிறுபான்மைத் தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியினரை எல்லாத் தொகுதிகளிலும் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்" என்று அச்சமூகத்தைச் சேர்ந்தவரும் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் முன்னாள் இணைச் செயலாளருமான திரு ஆ. ம. செல்லத்துரை ஆசிரியர் ஒரு வேண்டுகோள் விடுத்துத் தனது பேச்சை முடித்தார்.

இக்கூட்டத்தில், வதிரியில் வசிக்கும் சிறுபான்மைத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்த மக்களால் திரட்டப்பட்ட ரூபா 611/- திரு ஆ. ம. செல்லத்துரையால் உடுப்பிட்டித் தொகுதியின் தமிழரசுக் கட்சி அபேட்சகரின் தேர்தல் நிதியாக வடமராட்சி கிளைத் தலைவர் திரு ச. வீரசிங்கத்திடம் கையளித்தனர். மேலும் ரூபா 54 சதம் 15 கூட்டத்திற்கு வந்திருந்தோர் வழங்கினர்.

திருவாளர்கள்: மு. பாலசுந்தரம் (கோப்பாய் அபேட்சகர்), வ. ந. நவரத்தினம் (சாவகச்சேரி அபேட்சகர்), இ. நவரத்தினம்அட்வகேட், செ இராசா முதலானோரும் பேச்சாளர்களாகக் கலந்து கொண்டனர்.

### ஆயுர்வேத பரீட்சை முடிவு

வடஇலங்கை சுதேச வைத்திய சபையார் யாழ்ப்பாணம் இலங்கா ஆயுர்வேதக் கல்லூரியில் சென்ற மார்ச் மாதம் நடைபெற்ற வருடாந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பெயர்களை தராதர ஒழுங்கின்படி வெளியிட்டிருக்கிறார்கள். விவரம் வருமாறு:-

விசேட வகுப்பு—(இரண்டாம் வருடம்) (1) ஏ அருமைநாயகம்—2-ம் பிரிவு.

விசேட வகுப்பு:—(முதல் வருடம்) (1) பி. இராசேஸ்வரி—1-ம் பிரிவு, (2) எஸ். இராசரத்தினம்—1-ம் பிரிவு.

மூன்றும் வருடம்:—(1) கே. வல்லிபுரம்—2-ம் பிரிவு, (2) எஸ். வைத்திலிங்கம் — 2-ம் பிரிவு, எம். கதிரேசு—3-ம் பிரிவு.

இரண்டாம் வருடம்:— (1) என். பத்மநாதன்— 2-ம் பிரிவு, (2) டி. சேனாதிராசா —3-ம் பிரிவு.

முதல் வருடம்:— (1) எஸ். சந்தியாப்பிள்ளை— 2-ம் பிரிவு, (2) எம். பிலேந்திரன் —3-ம் பிரிவு, (3) எஸ். சிவசம்பு—3ம் பிரிவு, (4) எம். குருசிவனார்—3-ம் பிரிவு.


இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!

மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே




● ஒருவரின் ஆயுள் கால முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி.

● மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

● இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.

● உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:

ரெய்மு சன்ஸ் லிமிட்டெட்,

88 A, மெயின் வீதி, கொழும்பு-11.

போன் : 4243, 5060.

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1960 ஜூன் மாதம் 19-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411. த. பெ. 1183

# பேராசிரியர்களின் கூட்டறிக்கை

இலங்கைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கல்விமான்கள், பேராசிரியர்கள் பன்னிரண்டு பேர் ஒரு முக்கியமான அறிக்கையில் கைச்சாத்திட்டு, அதை வெளியிடுவதற்காகப் பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ளார்கள்.

ஒரு பகிரங்க கண்டனமாகவும், அதேவேளையில் ஒரு பகிரங்க வேண்டுகோளாகவும் அமைந்துள்ள அப்பத்திரத்தின் தமிழ் ஆக்கம் இதோ இப்பக்கத்தில் கைச்சாத்திட்ட பேராசிரியர்களின் பெயர் விவரங்களுடன் பிரசுரிக்கப்படுகிறது.

தேர்தல் பிரசாரம் என்ற போர்வையில் குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சி நாட்டில் தூண்டிவரும் சிங்களவர்—தமிழர் வகுப்பு பேதத்தையும், இன வெறியையும் அழுத்தந் திருத்தமாகக் கண்டிக்கும் தோரணையில் அமைந்துள்ள மேற்படி அறிக்கையில் வகுப்புக் கலவரங்களினால் விளையக் கூடிய அனர்த்தங்களையும், ஆபத்துக்களையும் ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டி, கொந்தளிப்பு ஏற்படுத்தக்கூடிய கீழ்த்தரமான துவேஷப் பிரசாரங்களையும், பிரசுரங்களையும் விட்டொழிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

இவ்வண்ணம் கண்டனம் தெரிவித்து வேண்டுகோளும் விடுத்திருப்பவர்கள் சாதாரணமானவர்கள் அல்லர். அத்தனை பேரும் படித்தவர்கள்; பட்டம் பெற்றவர்கள்; ஒவ்வொரு துறையிலும் துறைபோகக் கற்ற விற்பன்னர்கள்; எந்த அரசியல் கட்சியையும் சாராத நடுநிலைமையாளர். எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் அனைவரும் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள்—சிங்களவர்கள்! ஒருவர்கூட அவர்களில் தமிழர் இல்லை!

எனவே இந்தப் பெருமக்களுடைய அபிப்பிராயத்தைப் பெரும்பான்மை மக்கள் சமூகமும், அவர்தம் அரசியல் தலைவர்களும் அலட்சியம் செய்வதற்கில்லை. 'சிறுபான்மையினரின் கழுத்தை வெட்டிப் பெரும்பான்மையினருக்குப் பலியிடுதலே ஜனநாயகம்' என்று ஒருவிதமான விசித்திர ஜனநாயகம் போதித்து வரும் ஏரிக்கரை, டைம்ஸ் ஸ்தாபனப் பத்திரிகைகளும் சற்று விழிப்படைவதற்கு பேராசிரியர்கள் வெளியிட்டுள்ள எச்சரிக்கை பயன்படும் என்று நம்புகிறோம்.

"அதிகாரத்தில் அமர்ந்துகொள்ளும்பொருட்டு பாமர மக்களின் வாக்குகளைப் பிடிப்பதற்காக, மக்களின் இன, மத உணர்ச்சி நெருப்புக்கு நெய் வார்க்கப்படுவது எல்லை மீறிப்போய்க்கொண்டிருக்கிறது. இதைக் கவனிக்கும்போது நெஞ்சு பகீரென்கிறது!" என்று பேராசிரியர்கள் கூறுகின்றார்கள்.

சமீபகாலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் இடைக்காலப் பிரதமருமான திரு டட்லி சேனநாயகா தேர்தல் பிரசார மேடைகளில் மிகவும் கீழ்த்தரமான இன, மத உணர்ச்சிகளையே கிளப்பி வருகின்றார். இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி, பொய்யையும் புனைசுருட்டுக்களையும் அவிழ்த்துவிட்டு, தமிழ்ப் பொதுமக்கள் மீது பாமரச் சிங்கள மக்களுக்கு ஆத்திரம் உண்டாகும்படி துவேஷத்தைத் தூண்டிவிட்டு வருகின்றார்.

அதேவேளையில், "தமிழர்களுக்கு எதிராக நாம் சினம் கொள்ளவில்லை. தமிழரசுக் கட்சியையே நாம் கண்டிக்கிறோம்" என்று திரு டட்லி கூறுவது நமக்குப்போலவே பேராசிரியர்களுக்கும் வேடிக்கையாகத் தோன்றியிருக்கிறது. திரு டட்லியின் இந்த அகங்காரமான அல்லது அசட்டுத்தனமான வியாக்கியானத்துக்குப் பேராசிரியர்கள் கன்னத்தில் அறைந்தாற்போல பதிலளித்திருக்கிறார்கள்:

> "தமிழரசுக்கட்சி தமிழ் மக்களில் பெரும்பான்மையோரின் பிரதிநிதி. எனவே தமிழரசுக் கட்சிக்கு எதிராகக் காட்டப்படும் துவேஷம் தமிழ் மக்களில் பெரும்பான்மையானவர்களுக்கு எதிராகக் காட்டப்படும் துவேஷமேயாகும்."

மேற்படி பதிலுக்கு திரு. டட்லி என்னசொல்லப் போகிறார் என்று நாம் கேட்க விரும்புகிறோம்.

தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகள் தாம் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களுடைய இதய பூர்வமான கோரிக்கைகளாகும் என்பதைப் படித்த சிங்களப் பெருமக்கள், கல்விமான்களான சிங்களப்பேராசிரியர்கள், உணர்ந்து வருகிறார்கள்.

குறுகிய அரசியல்வாதிகளுக்கும், குட்டை குழப்பும் சில பத்திரிகையாளருக்குந்தான் இந்த உண்மை இன்னும் புலனாகவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியை அண்டி, அடிவருடித் தங்கள் சுய அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளலாம், சுயநலத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று கருதும் சில இனத் துரோகிகளான கொழும்புத் தமிழர்களுக்கும் இந்த உண்மை இன்னும் தெளிவாகவில்லை. இந்த நிலை குறித்துப் பெரிதும் நாம் வருந்துகிறோம்.

தமிழ்பேசும் மக்களின் குரல்வளையை நசுக்கி அவர்களுடைய ஜீவாதாரமான கோரிக்கைகளை ஒடுக்குவதன் மூலம் சிங்கள மக்களிடம் செல்வாக்கைப் பெற்று, அரசியல் கட்டில் ஆரோகணித்து விடலாம் என்று அபிலாஷைப்படுகிறார் ஐக்கியதேசியக்கட்சித் தலைவர் திரு. டட்லி. அவருடைய இந்த எண்ணம் கேலிக்கிடமானது என்பதை பின்வரும் ஒரு அங்கதமான வாக்கியத்தின் மூலம் கிண்டல் செய்கிறார்கள் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள். அவர்கள் கூறுவதாவது:

> "உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஒடுக்கப்பட்ட சமுதாயங்களின் பாதுகாவலனாக நடந்து கொள்வதில் இலங்கை பெருமை அடைந்திருக்கிறது. சமீபத்தில் தென்ஆபிரிக்க சுதேசிகளின் சார்பில் இலங்கை உறுதியுடன் நின்றிருக்கிறது; பெருமைப்பட வேண்டியதே. ஆனால் உள்நாட்டில் நடப்பவற்றைக் கவனிக்கும்போது இவையனைத்தும் கருத்தற்ற செயலாகவே தோன்றுகின்றன. ஏமாற்றுவித்தை போலவே தெரிகிறது. ஊருக்கு உபதேசம் புரியப் போகுமுன் நாம் நம்மையே முதலில் திருத்திக் கொள்ள வேண்டும்."

மேற்படி கூற்றிலிருந்து இந்த நாட்டிலும், அரசியல் தார்மீக நியாயங்களுக்கு முற்றும் முரணாக, சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதைப் படித்த சிங்களப் பெருமக்கள் ஒப்புக் கொள்ளும்படி ஆகிவிட்டது என்பது பெறப்படுகிறதல்லவா?

தமிழரசுக்கட்சியின் போராட்டம் இந்த அளவிற்கு வெற்றியீட்டித் தந்திருக்கிறது என்பதைக் காணப் பெருமகிழ்வடைகிறோம். தமிழ் பேசும் மக்கள் உறுதி தளராமல், ஆர்வம் குறையாமல், தங்கள் நியாயப் பூர்வமான கோரிக்கைகளை [illegible] தால்விவரினும் சலிக்காமல் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு போவார்களேயானால் இறுதியில் அவற்றை அவர்கள் அடைந்தே தீருவார்கள் என்பது சர்வ நிச்சயமாகும்.

# பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் பன்னிருவரின் பகிரங்க கண்டனம்

## வகுப்புவாத அரசியல் பிரசாரம் ஆபத்தானது என எச்சரிக்கை!

### ஏரிக்கரைப் பத்திரிகைகளின் அற்பத்தனம்

இலங்கையின் இன்றைய அரசியலில், தேர்தல் பிரசாரத்தையொட்டி வகுப்புவாதமும் இனவெறியும் பச்சை பச்சையாகக் கிளப்பப்படுவதைக் கண்டித்து இலங்கைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் பன்னிருவர்—எல்லோரும் சிங்களவர்—பத்திரிகைக்கு ஒரு விசேஷ அறிக்கை விடுத்துள்ளார்கள்.

இவ்வறிக்கையின் நகல் எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. டைம்ஸ் ஒப் ஸிலோன் (Times of Ceylon) பத்திரிகை அவ்வறிக்கையை முழுமையாக அசல் ரூபத்தில் கடந்த சனிக்கிழமை வெளியிட்டது.

ஏரிக்கரைப் பத்திரிகையான ஸிலோன் டெயிலி நியூஸ் (Ceylon Daily News) இதை வெளியிடும்போது கையொப்பமிட்டவர்கள் யார் யார், என்ன அந்தஸ்தில் உள்ளவர்கள் என்பதை வெளியிடாமல், வெறும் பெயர்களை மட்டும் மொட்டையாக வெளியிட்டு மாரீசத்தனம் செய்திருக்கிறது. பல்கலைக்கழக விலாசமிட்டு வெறும் மொட்டையாகப் பெயர்களை வெளியிட்டால் கையொப்பமிட்டவர்கள் பேராசிரியர்கள் அல்லர்—சாதாரண பேர்வழிகள்—வெறும் மாணவர்கள்—என்று பொதுமக்கள் எண்ணிவிட்டுப் போகட்டும் என்பது டெயிலி நியூஸின் சூழ்ச்சியாகும்.

தமிழ் பேசும் மக்களுக்கு தார்மீக பலத்தையூட்டும் இந்த அற்புதமான அறிக்கையின் தமிழ் மொழிபெயர்ப்பை வெளியிட வேண்டும் என்ற பரந்த நோக்கம் தமிழுக்கு, விழாவெடுக்கும் தினகரனுக்குத் தோன்றாதது எதுகாரணம் பற்றியோ நாமறியோம்!

ஸிலோன் டெயிலி நியூஸ் இன்னொரு அற்பத்தனத்தையும் செய்திருக்கிறது. பத்திரிகா தர்மத்தின்படி இந்த வேலை கழிசடைத்தனமானதுமாகும். அதாவது பேராசிரியர்கள் விடுத்த மூலப்பிரதியில், "We write this, at a time when political speeches and journalism have sunk to a very low level..." என்று ஒரு வாக்கியம் வருகிறது. இதன் பொருள், "அரசியற் பிரசங்கங்களும் பத்திரிகைகளின் தரமும் மிகவும் கீழ்நிலைக்கு இறங்கியிருக்கும் ஒரு கட்டத்தில் நாம் இதை எழுதுகிறோம்......" என்பதாகும். இந்த வாக்கியத்திலிருந்து 'journalism'—'பத்திரிகையின் தரமும்' என்ற பிரயோகத்தை நீக்கிவிட்டுப் பிரசுரித்திருக்கிறது டெயிலி நியூஸ் பத்திரிகை.

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்ததா? ஏரிக்கரைப் பத்திரிகைகள் இறங்கி விட்ட கீழான தரத்தையே பேராசிரியர்கள் சுட்டியிருக்கிறார்கள் என்பதை டெயிலி நியூஸ் உணர்ந்து கொண்டு வெட்கந் தாங்க முடியாமல் அப்பதப் பிரயோகத்தை நீக்கித் தன் நீசத்தனத்தை மறைக்க முயன்றிருக்கிறது என்றே நாம் கருதுகிறோம்.

—ஆசிரியர்.

ஆட்சிவிட்டு கட்சிதாவுதல், நிமிஷத்துக்கு ஒரு வேஷம், நேரத்துக்கு ஒரு கோலம், பரஸ்பர தூஷணை, இவ்வனைத்தும் இலங்கை மாதாவின் இன்றைய அரசியலில் சாதாரணமான சம்பவங்கள்.

இருந்தும் அதிகாரத்தில் அமர்ந்துகொள்ளும் பொருட்டு, பாமர மக்களின் வாக்குகளைப் பிடிப்பதற்காக, இன்று மக்களின் இன, மத உணர்ச்சிகளுக்குத் தாராளமாக நெய்வார்க்கப்படுவது எல்லை மீறிப்போய்க் கொண்டிருக்கிறது. இதைக் கவனிக்கும்போது நெஞ்சு பகீரென்கிறது!

"மக்களின் உணர்ச்சிகளோடு ஒன்று கலந்த இப்பிரச்னைகளுக்கு கட்சிப் போராட்ட அடிப்படையில் தீர்வு காண முடியாது. கல்வி வாசனையற்ற பாமர மக்கள் மத்தியில் உணர்ச்சி வசம் கொண்ட ஒரு (பொதுத் தேர்தல்) சூழ்நிலையில் இவ்விஷயம் விவாதிக்கப்படக் கூடாது. சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு வட்டமேசை மாநாடுதான் இத்தகைய விவாதத்திற்கேற்ற சூழ்நிலையைத் தோற்றுவிக்க முடியும். கட்சி அரசியல் அல்ல" இவ்வாறாகப் பிரதம மந்திரி பாராளுமன்றத்தில் கூறிய வார்த்தைகள் இன்னும் காதில் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன.

தேர்தல் பிரசாரத்தில் இனவாரி, மொழிவாரிப் பிரச்னைகளை முற்றாகத் தவிர்க்க முடியாது தான். இருந்தும் 1958ன் அனுபவங்களுக்குப் பின்னாவது வகுப்புணர்ச்சிகள் எல்லைமீறிப் போகாது கவனித்துக் கொள்ள வேண்டுமென்பதையே எவரும் எதிர்பார்த்திருந்திருப்பார்கள்.

மார்ச் மாதத் தேர்தலில் அநேகமாக எல்லாக் கட்சியினரும் தமக்கு வகுப்புவாத நோக்கே இல்லை என்று தூர நின்றுகொண்டவர்கள். ஏற்கனவே நிலவி வந்த வகுப்புணர்ச்சிகளைப் பகிரங்கமாக நின்று தூண்டிவிடுவதைத் தவிர்த்துக்கொண்டவர்கள். இந்த அளவில் அவர்கள் நமது பாராட்டுதல்களுக்குரியவர்களே! ஆனால் அதே போல, இந்தத் தேர்தலிலும் அவர்கள் நடந்து கொள்ளுவார்கள் என்றே நம்பினேம். பிரதமரின்

(9-ம் பக்கம் பார்க்க)

## வேலை நிறுத்த காலச்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெறியர்களை அணுகிக் கேட்டதாகத் தெரியவருகிறது. அப்படி திரு. இராஜரத்னா ஒத்துழைத்தால் யு. என். பி. அரசாங்கம் அமைத்ததும் பெரிய பெரிய பதவிகளும் உயர்வுகளும் அவருக்குக் கொடுப்பதாக வாக்களிக்கப்பட்டதாம்.

நாட்டின் போக்கை ஆராய்ந்து பார்த்த இராஜரத்னா யு. என். பிக்கு எதிர்காலம் இல்லை என்பதை அறிந்து யு. என். பி. தூதுவர்களின் கோரிக்கைக்கு இணங்க மறுத்துவிட்டார்.

### மரிக்காரின் கைங்கரியம்

உடனே இந்தக் கைங்கரியத்தைச் செய்வதற்கு கொழுத்த சம்பளத்தில் மாஜி தபால் அமைச்சர் ஜனாப் ஸி. ஏ. எஸ். மரிக்கார் அமர்த்தப்பட்டிருக்கிறார். அவர் பெயரில் வெளியாகும் ஒவ்வொரு பத்திரிகை அறிக்கைக்கும் யு. என். பி. ஆயிரக் கணக்கில் பணம் கொடுப்பதாகத் தெரியவருகிறது. யு. என். பி. ஆட்சிக்கு வந்தால் மரிக்கார் ஒரு செனட்டராக்கப்படுவாராம்!

வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழந்ததனாலேயே திடீர் திடீரென்று சிற்சில அரசியல் 'ஸ்டண்டு'களை யு. என். பி. கையாண்டு வருகிறது என்று நம்பப்படுகிறது.

### அரசியல் 'ஸ்டண்டு'கள்

அரிசி விலை குறைப்பு, குறைந்த விலையில் இறைச்சி, மாணவர்களுக்கு இலவச பஸ் பிரயாணம், அரசாங்க ஊழியர்களுக்கு வேலை நிறுத்தச் சம்பளம் போன்றவை இத்தகைய 'ஸ்டண்டு'களாகும்.

கொழும்பு தெற்குத் தொகுதியில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் நிலைமை திண்டாட்டமானதாகவே இருக்கிறது. கொழும்பு தெற்கில் பெருந்தொகையான அரசாங்க தமிழ் ஊழியர்கள் இருக்கின்றனர். இவர்கள் அனைவரும் யு.என். பியை எதிர்த்து வாக்களிப்பர் என்பதை அறிந்து இவர்களை வளைப்பதற்காகவே திரு. ஜே. ஆர். வேலைநிறுத்த காலச் சம்பளம் வழங்கப் போவதாக ஒரு பாசக் கயிற்றை வீசியிருக்கிறார்.

'சம்பளம் தந்தால் தரட்டும். இரண்டு கையாலும் வாங்கிக் கொள்ளுவோம். ஆனால் போடுகிறவாக்கை யு. என். பியை எதிர்த்தே போடுவோம்' என்று அரசாங்க ஊழியர்கள் அனைவரும் அந்தரங்கத்தில் முடிவு செய்திருப்பதாக அறியப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக் கழகப் பேராசிரியர்கள்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றப் பேச்சு எமக்கு உற்சாகமூட்டியது. இருந்தும் இன்றைய தேர்தலில் பிரதான அங்கம் வகிக்கும் பிரச்னையாகிவிட்டது வகுப்புவாதம்!

பிரசாரம் வலுப்பெற, வலுப்பெற இரண்டு பிரதான கட்சிகளும் குற்றச்சாட்டுகளையும் எதிர்க் குற்றச்சாட்டுகளையும் பரிமாறிக்கொள்ளுவார்கள். எவ்வளவு மறைமுகமாக நடந்தாலும் தமிழர்களுக்கெதிராகப் பிரசாரம் வலுப்பெறும். தமிழர்களுக்கெதிராக வெறுப்புணர்ச்சி காட்டுவதில் முந்தி நிற்பது யார் என்ற அளவிற்கு விஷம் வளர்ந்துவிடும்.

ஏனைய நாடுகளில், பலம் குறைந்த மக்களுக்கெதிராக நடக்கும் பிலிருனிய வேட்டைகளை நாம் கண்டிக்கத் தயங்குவதில்லை. ஆனால் கட்சித்தலைவர்களே பலர் நிகழ்த்தும் பேச்சுக்களின் தொனி இந்த வேடர்களின் தரத்திற்கு இறங்கிவிட்டதே என்பதை நினைக்க எமது மனம் பெரிதும் சஞ்சலமடைகிறது.

இத்தகைய நடவடிக்கைகளுக்குப் பல்வேறுவிதமான நியாயங்களும் விளக்கங்களும் தேடிப்பிடிக்கப்படுகின்றன. ஆனால் இவற்றுள் எவையும் அதிகம் சத்து நிறைந்தனவாகத் தெரியவில்லை.

"தமிழர்களுக்கெதிராக நாம் கோபம் காட்டவில்லை; தமிழரசுக் கட்சியையே குறிப்பாக கண்டிக்கிறோம்" என்று ஒருபுறம் கூறப்படுகிறது.

மறுபுறம் இப்பிரச்னைகளை கிளறிவிடுவது அரசியல் ரீதியில் இப்பொழுது தேவையே; ஆனால் இதனால் ஏற்படும் மனக்கசப்புகளைப் பின்னால் ஆற்றிவிடலாம் என்றும் கூறப்படுகிறது.

இக்கூற்று,ஒன்றில், நகைப்புக்கிடமளிக்கும் வகையில் தாம் சரியென நிரூபிக்கும் ஒரு தர்க்க முயற்சியாயிருக்க வேண்டும். அல்லது சந்தர்ப்பவாதத்தில் ஒரு திட்டமிட்ட பிரயத்தனமாயிருக்க வேண்டும். இவற்றீள் எதுவாயிருந்தாலும் தமது செய்கைகளுக்குரிய தார் மீகப் பொறுப்பை எவரும் தட்டிக்கழிக்க முடியாது. தமது மனச்சாட்சிக்கே இவர்கள் பதிலிறுக்க முடியாது.

ஐந்து உண்மைகள் யாருக்கும் துலக்கமாகத் தெரிய வேண்டும்.

(1) தமிழரசுக் கட்சி தமிழ் மக்களில் பெரும்பான்மையோரின் பிரதிநிதி. எனவே தமிழரசுக் கட்சிக்கெதிராக காட்டப்படும் துவேஷம் தமிழ் மக்களில் பெரும்பான்மையானவர்களுக்கெதிராகக் காட்டப்படும் துவேஷமாகும்.

(2) மேலும் தம்முடைய உயிருக்கும் தமது நலவுரிமைகளுக்கும் ஆபத்து ஏற்படுகிறது என்ற எண்ணத்தில் தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளுக்கெதிராக இருக்கும் தமிழரையும் கட்சிக் கொடியின்கீழ் ஒன்று திரட்டிவிடும் இந்த வகுப்புவாதம்.

(3) தமது பிரசாரம் தமிழரசுக் கட்சிக்கெதிரானதென்றும் தமிழ் மக்களுக்கெதிரானதல்லவென்றும் அரசியல் கட்சிகள் எவ்வளவுதான் கூறினாலும், உணர்ச்சிகள் கிளறப்பட்ட சிங்களப் பொதுமக்கள் இந்த நுண்ணிய வித்தியாசத்தைக் கவனிக்கப்போவதில்லை. வகுப்புவாதப் பிரசாரம் தொடர்ந்துகொண்டேபோனால், தமிழ் மக்களிடையே தமிழரசுக் கட்சித் தமிழர், தமிழரசு எதிர்ப்புத் தமிழர் என்ற பிளவு நீடிக்குமா என்பது சந்தேகம். அப்படி இன்னும் தமிழரசுக் கட்சிக்கெதிரான தமிழர்களிருந்தால், இந்த எதிர்ப்புத் தமிழர்களையும் ஆதரவுத் தமிழர்களையும் சாதாரண சிங்கள மக்கள் எவ்வாறு அடையாளம் கண்டுபிடிக்கப்போகிறார்கள்? பசி வெறிகொண்ட ஒரு நரி கோழிக் கூட்டுக்குள் நுழைந்ததும் சேவல் எது பேடு எது என்று தெரிவு நடத்திக்கொண்டிருக்கப்போகிறதா?

(4) அரசியல் சாகஸம் என்ற பெயரில் கேள்விக்குரிய வழிவகைகளைப் பின்பற்றலாம் என்பது மிகவும் பொறுப்பற்ற ஒரு நடத்தை. எதுவானலும்,அரசியல் தலைவர்கள் என்னதான் சொன்னாலும், இன, மொழி வெறி தலைக்கேறிய பின் நிலைமை கட்டுக்கடங்காதுபோயே போய்விடும். இதன் முடிவு குட்டையைக் கிளறிவிடும் அரசியல்வாதிகள் நினைத்திருக்க முடியாத சம்பவங்களில் போய்த்தான் முடிவுறும். 1958ன் கலவரங்கள் இதற்குச் சான்று. சிறீ எதிர்ப்பு இயக்கம் இரத்தக் களரியில் முடிந்தது. இன்று, இதனிலும் மேலான அளவில் உணர்ச்சிகள் தூண்டிவிடப்படும்பொழுது 1958ன் இரத்தக் களரியிலும்பார்க்க மிகப் பெரிய பிரளயம் நிகழாது என்பது என்ன நிச்சயம்? அதுவும் தேர்தல் பிரசார இயக்கம் இன்று ஆரம்ப நிலையில்தானிருக்கிறது. வேகம் வலுப்பெறும் பொழுது நிலைமை எப்படியிருக்கும்? கலவர காலத்தில் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் ஆறவில்லை. அப்படியானால் இன்று விதைக்கப்படும் விஷம் எப்பொழுது ஆறப்போகிறது?

(5) இவ்விஷத்திலிருந்து தோன்றக்கூடிய விளைவுகள் சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் அன்னியர்களாக்கிவிடும். தமிழர்களைத் தேசிய வாழ்விலிருந்து தடுத்து வைக்கும். மனித உயிர்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய சூழ்நிலையைத் தோற்றுவிக்கும். கலவரங்களில் உயிரிழந்தோ உடமையிழந்தோ பாதிக்கப்பட்டவர்களின் உற்றார் உறவினர்களைத் தேடிப்பிடித்து அவர்களின் துயரத்தில் தமது அரசியல் முதலீட்டைச் செய்வதற்கு அரசியல் தலைவர்களின் அடிவருடிகள் பலர் முயன்று வருவதை நாம் அறிவோம். தமக்குக் கீழ் உள்ளவர்கள் இப்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்பதைத் தலைவர்கள் அறியாது இருக்கலாம். இத்தகைய அடிவருடிகளுக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்புமேயில்லை என்று கண்ணியமுள்ள அரசியல் தலைவர்கள் நடந்துகொள்வார்கள் என்றே நம்புகிறோம்.

உலகின் பல்வேறு பகுதிகளிலும் ஒடுக்கப்பட்ட சமுதாயங்களின் பாதுகாவலனாக நடந்துகொள்வதில் இலங்கை பெருமையடைந்திருக்கிறது. சமீபத்தில் தென்னாபிரிக்க சுதேசிகளின் சார்பில் இலங்கை உறுதியுடன் நின்றிருக்கிறது; பெருமைப்பட வேண்டியதே. ஆனால் உள்நாட்டில் நடப்பவற்றைக் கவனிக்கும் பொழுது இவையனைத்தும் கருத்தற்ற செயலாகவே தோன்றுகின்றன. ஏமாற்று வித்தைபோலவே தெரிகிறது. ஊருக்குபதேசம்புரியப் போகுமுன் நாம் எம்மையே முதலில் திருத்திக்கொள்ள வேண்டும்.

தமிழரசுக் கட்சிக்குப் பரிந்து இக்கடிதத்தை நாம் எழுதவில்லை. அதே நேரத்தில், 'சிங்களம் மாத்திரத்தை'யோ அல்லது சமஅந்தஸ்தையோ நாம் ஆதரித்தும் இதை எழுதவில்லை. வகுப்புத் துவேஷம் எல்லைமீறினால் இலகுவில் கட்டுப்படுத்த முடியாது. எனவே தேர்தல் பிரசாரத்தில் வகுப்புவாதம் பிரதம பிரச்னையாகிவிடாது தவிர்த்துக் கொள்ளுங்கள் என்று அரசியல் தலைவர்களைக் கோரியே இக்கடிதத்தை எழுதுகிறோம். இது எமது ஒரு வேண்டுகோள். அரசியல் மேடைகளில் நிகழ்த்தப்படும் பேச்சுகளில் கவனமான வார்த்தைகளைப் பாவியுங்கள் பேசுந் தொனியில் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளுங்கள். இதுவே எமது வேண்டுகோள்.

இதன் அடியில் கையொப்பமிடுபவர்கள், அரசியல், தேசிய பிரச்னைகளில் வேறுபட்ட கருத்துக்களைக்கொண்டவர்கள். இவர்களுள் எவரும் அரசியல்வாதிகளுமல்லர்.

முக்கியமான பிரச்னைகள் பற்றிக் கண்ணைமூடிக்கொள்ளும்படி நாம் கேட்கவில்லை. ஆனால் அரசியல் சந்தர்ப்ப சௌகரியங்களுக்காக இப்பிரச்னைகளைப் போராட்டகளமாக்க வேண்டாம் என்றே நாம் கேட்கிறோம். இத்தகைய சூழ்நிலையில் நாடு மீண்டும் ஒரு பிரளயத்தில் மாண்டுவிடும் என்பது எவருக்கும் புலனாயிருக்கும் பொழுது வகுப்புவாதப் பிரசாரம் மிக மிக ஆபத்தானது.

அரசியற் பிரசங்கங்களும், பத்திரிகைகளும் மிகவும் கீழ் நிலைக்கு இறங்கியிருக்கும் ஒரு கட்டத்தில் நாம் இதை எழுதுகிறோம்.

மிகுந்த வேகத்தில் சீரழிந்துகொண்டேபோகும் ஒரு நிலைமைக்கு இத்தகைய வேண்டுகோள் ஒன்று, ஒரு தடையாக அமையலாம் என்ற நம்பிக்கையிலேயே இதை நாம் வரைகிறோம்.

(13-ம் பக்கம் பார்க்க)

## ஜீ. ஜீ.யைப்பற்றி........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"அன்று அங்கு கூடிய பிரமுகர்கள் ஒன்றாக அளவளாவி பானதிகள் அருந்திச் சிரித்து மகிழ்ந்து குலாவிக்கொண்டிருந்த போதுதான் மேற்படி வாக்குகள் ஜே. ஆரின் வாயிலிருந்து புறப்பட்டன. சற்று குசு குசு தொனியிலேயே கூறினார். இவற்றை அவர் கூறும் போது நான் மிகவும் அருகாமையிலிருந்தேன். தங்கள் ஒற்று நிருபர் பகிரங்கப்பேச்சையும், தனிப்பட்ட உரையாடலையும் குழப்பிக்கொண்டார். உண்மை என்னவோ உண்மைதான். ஆனால் எப்போது பேசப்பட்டது என்பதில் தான் வித்தியாசம்.

"எதற்கும், சுதந்திரன் எப்போதும் போலச் சரியான செய்தியையே வெளியிடவேண்டும் என்ற விருப்பத்தால் இதை எழுதினேன். விரும்பினால் திருத்தம் வெளியிடுங்கள். விரும்பாவிட்டால் விட்டு விடுங்கள்.

இங்ஙனம்

ஒரு அரசாங்க ஊழியன்

கொழும்பு 6

8-6-1960

குறிப்பு:

நமது ஒற்று நிருபர் தாம் எழுதிய செய்தி தாம்கேள்வியுற்றபடி முற்றும் சரியானது என்று நிலைநாட்டுகிறார். எதற்கும் தங்கள் திருத்தத்தையும் இதோஅப்படியே வெளியிட்டுள்ளோம். சுதந்திரன் செய்தி பிழைப்பட்டு விடக் கூடாது என்பதில் நமது வாசக நேயர்கள் காட்டும் அக்கறைக்கும் ஆர்வத்துக்கும் [illegible] கிறோம்.

—ஆசிரியர்

## விக்னராஜா—ஜெயலட்சுமி



மல்லாகம் திரு. அ. சுப்பிரமணியம் தம்பதிகளின் புத்திரனும் நீர்ப்பாய்ச்சு இலாகா டெக்னிகல் உதவியாளருமான விக்னராஜாவுக்கும், மல்லாகம் வழக்கறிஞர் க. நடராசா தம்பதிகளின் புத்திரி ஜெயலட்சுமிக்கும் 1960 ஜூன் 1-ந் தேதி திருமணம் சிறப்பாக நடைபெற்றது. தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் உட்படப் பல பெரியோர்கள் மணமக்களை வாழ்த்தினர்.

திருமணத்துக்கு விஜயம் செய்தோருக்கும் வாழ்த்துச் செய்திகள், அன்பளிப்புகள் அனுப்பியோருக்கும் விக்னராஜா தம்பதிகள் தம் உளம் கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

## சாவகச்சேரி தொகுதியில்

### தமிழரசுக் கூட்டங்கள்

சாவகச்சேரித் தொகுதியில் தமிழரசுக் கட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் பின் வரும் தேதிகளில் நடைபெறும் என்றும் அப்போது வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழரசுத் தலைவர்களும் பிரமுகர்களும் சொற்பொழிவாற்றுவார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.

ஜூன் 1960

18-ந் தேதி சாவகச்சேரி பட்டினம், 26-ந் தேதி வரணி.

ஜூலை 1960

2-ந் தேதி கைதடி, 9-ந் தேதி கொடிகாமம், 17-ந் தேதி சாவகச்சேரி பட்டினம் (கடைசிக் கூட்டம்.)

## ஏககாலத்தில் ...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமேனியின் இடப்பாகமும் அம்மையின் வலப்பாகமும் சேர்ந்து இப்போது இங்கே காட்சியளிக்கின்றீர்கள்.

### ஒன்று அங்கே ஒன்று இங்கே

"ஐயனே! தங்கள் திருமேனியில் மற்றைப் பாதியும் அம்மையின் மேனியில் ஒரு பாதியும் உண்டல்லவா? அந்த இரண்டும் சேர்ந்தால் ஒரு உருவம் ஆகுந்தானே? அப்போது இரண்டு வடிவங்கள் ஆகும். ஒன்று திருக்களந்தைக் கோயிலில் இருக்கட்டும். மற்றொன்று அடியேன் மனக்கோயிலில் இருக்கட்டுமே" என்றார்.

புலவருடைய சொல்திறத்தைக் கேட்டுப் பெருமான் மகிழ்ச்சியுற்றார். அவருடைய உள்ளக் கோயிலில் எழுந்தருளி அருட்காட்சி தந்தருளினார்.

அவர் பாடிய அற்புதமான பாடல் இதோ:-

ஆகத்திலே யொருபாதி
யென்னம்மைக்
களித்தவன்தன்
பாகத்திலே யொன்று
கொண்டாய்; அவள்
மற்றைப் பாதியும்உன்
தேகத்திலே பாதியும்
சேர்ந்தால், இருவர்
உண்டே; சிவனே
ஏகத்திராமல் இருப்பாய்
களந்தையும்
என்னெஞ்சமே

—[illegible] இளங்கு

## தமிழரை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறித் திரிவதுபோல் மொழி மத அடிப்படையில் சிறு சிறு சுதந்திர துண்டங்களாக எமது நாட்டைப் பிரிப்பது எங்கள் கட்சியின் நோக்கமல்ல.

தமிழ்ப்பிரதேசத்திலே வாழும் சிங்கள மக்கள் பாதிக்கப்படுவர் என்று டி. என். பி. தலைவர் கூறித் திரிகிறார். இது வெறும் கற்பனை! இத்தகைய அச்சம் வேண்டாம். சிங்களப் பகுதியில் தமிழர் போல் தமிழ் பகுதியில் சிங்களவர் அந்நியோன்யமாய் வாழலாம்.

திரு. வி. ஏ. கந்தையா, திரு. கே. துரைரத்னம், திரு. ஏ. அமிர்தலிங்கம், டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம், திரு. ஜி. பி. வின்சன்ட் ஆகியோரும் பேசினர்.

திரு. வி. டி. சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

## இன ஒற்றுமைக்..

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் நாகரிகமாக நடந்துகொள்ளும் பட்சத்தில் அவை தாமாகவே நீங்கிவிடும். அரசியல் பண்பாட்டுடன் நாடு வாழ வேண்டும். வளர வேண்டும் என சிங்கள மக்கள் எண்ணட்டும். அதாவது சிங்கள மக்கள் தாமாகவும் திருத்த வேண்டும், நாம் நியாயத்தை எடுத்துக் காட்டுவது மூலமும் தம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்றியில் வடு!

சிறுகதை — எழுதியவர்: "தீவான்"

சாந்தி:-

பகல் சாப்பாட்டிற்கு வேண்டிய சமையலை முடித்துக்கொண்டு நான் சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி பத்தரை. 'அடேயப்பா! இன்றைக்கு இவ்வளவு சிக்கிரத்தில்சமையல் முடிந்துவிட்டதே! நேரமாகிவிட்டதே என்று விழுந்து விழுந்து வேலை பார்த்ததுதான் மிச்சம். ஆனால் அவர் ஆபீசிலிருந்து வருவதற்கு இன்னும் நீண்ட இரண்டு மணித்தியாலங்கள் இருக்கின்றனவே!' என்று எண்ணமிட்டுக்கொண்டே நான் எதிரில் இருந்த நாற்காலியில் அமர்வதற்கும் "இச் இச்" என்று ஒரு பல்லி நச்சரிப்பதற்கும் சரியாக விருந்தது.

நிமிர்ந்து பார்த்தேன். பல்லி ஒன்று, சுவரிலே மாட்டப்பட்டிருந்த என் கணவரின் புகைப் படத்தின்மேல் வளைய வளைய வந்துகொண்டிருந்தது. ஏதோ எண்ணியவளாய் நான் அதனருகே சென்றேன். பல்லி எங்கோ பதுங்கிக்கொண்டது. படம் பளிச்சிட்டது. என் கணவரின் முகத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்தபடியே அசைவற்று நின்றேன். அந்த முகத்திலேதான் எத்தனை பொலிவு! எத்தனை கவர்ச்சி! அந்தக் கருணையே வடிவான முகத்தைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டே நின்றேன்.

இருந்தாற்போல் எனது பார்வை அந்தப்புகைப்படத்தின் பின்னால் செருகப்பட்டிருந்த புத்தகத்தின்மேல் தாவியது. என் கரங்கள் அதை எடுத்துக்கொள்வதில் ஈடுபட்டன. புத்தகத்தைக் கையில் எடுத்தேனோ இல்லையோ, என்றைக்குமில்லாத மகிழ்ச்சி என்னிதயத்தை நிறைத்தது. தொடர்ந்து எனது எண்ணப் பறவை கடந்தகால எனது கல்லூரி வாழ்க்கையை நோக்கிச் சிறகடித்தது.

அப்பொழுது எனது கணவர் எனக்குக் கல்லூரித் தோழன். ஆனால் அவரையும் என்னையும் காதலர்களாக்கி கடிமணத்திற்கு அழைத்து வந்ததோ இந்த இலக்கியப் புத்தகம் கம்பராமாயணமே தான். எச். எஸ். ஸி. வகுப்பிலே, என் கணவர் இலக்கியத்திலே சூரப்புலி. ஆனால் அவரிடம் இலக்கியப் புத்தகமோ ஒன்றுகூடக் கிடையாதே! (இலக்கியத்திலே தான் 'புலி' என்ற நினைப்பில் புத்தகம் ஒன்றும் வேண்டுவதில்லையோ என்னவோ!) இலக்கியப் பாடம் என்றதும் புத்தகம் இரவல் வேண்டுவதில் தலைப்பட்டுவிடுவார். அவருக்கு ஏற்றாற்போல் இரவல் கொடுப்பதற்கு நானும் வந்து வாய்த்தேன். நான் ஏதாவது புத்தகம் அவருக்கு கொடுத்துவிட்டேன் என்றாலே போதும். சக மாணவர்களின் கேலியும் கிண்டலும் வானைப் பிளக்கும்! அதற்கு ஏற்றாற்போல் என்னிடமிருந்து வேண்டும் ஒவ்வொரு புத்தகத்திலும் "சரவணன்— சாந்தி" என்று தனது பெயருடன் எனது பெயரையும் பொறித்துவிடுவார் அவர்.

ஆத்திரத்தை வரவழைத்துக்கொள்வேன் நான். ஆனால் 'அத்தனையும் பொய்க்குத்தான்' என்று பறைசாற்றிவிடுமே என் ஆத்திரத்திற்கிடையே அரும்பும் இளமுறுவல்.

"சாந்தியின் ஆத்திரமெல்லாம் அதற்கு அவளும் சம்மதந்தான் என்பதுதான் அர்த்தம். அல்லாவிட்டால், ஏன் நான் கேட்க முன்பே அந்தக் கம்பராமாயணத்தை மீண்டும் மீண்டும் அவள் தர வேண்டும்?" என்றெல்லாம் அவர் என்னைப்பற்றி எண்ணுதவரா என்ன? காலஞ் செல்லச் செல்ல எங்களிடையே இத்தொடர்பு முற்றியது. அக் கம்பராமாயணத்தின்மூலம் நாம் எத்தனையோ காதல் கடிதங்கள் பரிமாறிக்கொண்டோம். சுருங்கக்கூறின் அக் கம்பராமாயணம் எங்களுக்கோர் தரகனுகவே திகழ்ந்தது.

இதையெல்லாம் எண்ணிப் பார்த்தபோது நான் என்னையறியாமலே சிரித்துவிட்டேன். சிரித்துக்கொண்டே எங்கள் காதலுக் கேதுவாய் இருந்த அப்புத்தகத்தின் ஏடுகளைத் தட்டிக்கொண்டே போனேன். ஆனால் நான் கண்டேனு எனக்கு எதிர்பாரா இன்பத்தை அளித்த இதே புத்தகத்துள், பேரிடியைத் தரும் செய்தி ஒன்றும் இருக்குதென்று.

புத்தகத்தின் ஏடுகளை வேகமாகப் புரட்டிக்கொண்டு போனேன். அதைத் தொடர்ந்து வேகமாகத் துள்ளி விழுந்தது ஒரு நீலக் காகித உறை, அப்புத்தகத்துள் இருந்து. அடுத்த கணம் என் கவனம் அந்நீல உறைமேல் தாவியது. அவ்வுறையுக்குள் இருப்பதை அறியும்பொருட்டு, அதை எடுத்துப் பிரித்தேன். என்றைக்குமில்லாத நடுக்கம் என் கரங்களில் காணப்பட்டது.

நீல உறையைப் பிரித்தேன். அடுத்தகணம், ஆயிரம் சம்மட்டியால் தாக்கி, என்னை யாரோ அதளபாதாளத்தில் தள்ளிவிடுவது போலிருந்தது, எனக்குத் தலைசுற்றியது. அருகில் நின்ற தூணைப் பற்றிக்கொண்டேன். புத்தகம் என் கரத்தை விட்டு நழுவியது. எங்கு நிற்கிறோம் என்ன செய்கிறோம் என்பதொன்றும் எனக்குப் புரியவில்லை.

இத்தனைக்கும் காரணம், அந்நீல உறைக்குள் இருந்த புகைப்படம் ஒன்றுதான். அப்புகைப்படத்திலே எனது கணவரும் இன்னொரு அழகிய பெண்ணும் வெகு அன்னியோன்யமாகச் சேர்ந்திருந்தார்கள்.

ஐயோ! இதையெல்லாம் என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. ஒழுக்கத்தின் பிறப்பிடமான என் கணவரா இத்தகைய ஒழுங்கீனப் பாதையில் சென்றிருக்கிறார்? 'உன்னையன்றி வேறொரு பெண்ணைக் கனவிலும் நினைக்கமாட்டேன், சாந்தி' என்று சதா சொல்லித் திரியும் என் கணவருக்கா இத்தகைய தீய தொடர்புகள்?

குனிந்த தலை நிமிராமல் தான் செல்வார் என் கணவர். ஆனால் அவருக்கொரு கள்ளக் காதலி! எத்தனை நாட்களாக இந்தக் கள்ளத் தொடர்பு? கட்டியவள் இருக்க கள்ளக் காதலி வேறு! அவர்மேல் நான் கொண்டிருந்த மாசற்றஅன்புக்கு இதுவா அவர் அளிக்கும் பரிசு? நான் அவர்மேல் கொண்டிருந்த அன்பு, ஆசை, மதிப்பு எல்லாம் காட்டிலே காய்ந்த நிலவாகிவிட்டதே இன்று! 'என் கணவர் ஆயிரத்தில் ஒருவர். அவர்போன்ற உத்தமர் எனக்குக் கணவனுக வாய்த்ததே நான் முற்பிறப்பில் செய்த புண்ணியந்தான், என்று இறுமாந்திருந்தேனே அத்தனையும் வீண்! வீண்!

"சாந்தி! உன்னைவிட்டு அரை நிமிடங்கூட எனக்குப் பிரிந்திருக்கமுடியவில்லையே, இப்பொழும் உத்தியோகத்தை உதறிவிட்டு, வீட்டோடேயே கடையொன்று போட்டு வியாபாரம் செய்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்" என்று அவர் கூறும் ஆசை வார்த்தைகள் எல்லாம் பசப்புத்தானே? கட்டியவள் இருக்க கள்ளப்பெண்! என்னைக் கைப்பிடிக்க முன்பே அவருக்கு ஒரு கள்ள நாயகி! சீ! என்ன மானங்கெட்ட வாழ்க்கை!

பூனைபோல் இருக்கும் ஆண்களே மோசக்காரர்கள்! ஏமாற்றுப் பேர்வழிகள்! அவர்களை நம்பி ஏமாந்துபோய்விடுகிறார்கள் என்னைப்போன்ற பேதைப் பெண்கள்! ஆனால் இனி மேலும் என்னை யாராலும் ஏமாற்ற முடியாது! இன் [illegible] கண்டுவிடுவது! என் இதயம் கடலாகக் கொந்தளித்தது. ஆத்திரத்தால் என் அங்கமெல்லாம் அனலாகப் பற்றியது. என் கணவனைப்பற்றி நான் எத்தனை இன்பக் கோட்டைகள் கட்டியிருந்தேன்! ஆனால் நான் கட்டிய இன்பக் கோட்டைகளெல்லாம் என் கண்ணெதிரே, அதுவும் என் தலைமேலேயே நொறுங்கி விழுந்தன. என் உடல் தள்ளாடியது. துக்கம் தொண்டையை அடைத்தது. கோடிப்புறக் கட்டிலிற் போய் குப்புற விழுந்தேன். விம்மி விம்மி அழத்தொடங்கினேன். ஆத்திரத்தையெல்லாம் கரைத்துக்கொண்டு கண்ணீர் ஆருகப் பாயத் தொடங்கியது.

சரவணன்:-

"சாந்தி!" என்று ஆசை தீர அழைத்தபடியே வீட்டுக்குள் நுழைந்தேன். ஆனால் என் அழைப்பிற்கு யாரும் பதிலளிப்பதாகக் காணவில்லை. "சாந்தி!" மீண்டும் அழைத்தேன். ஆனால் பதிலில்லை. மௌனம் தான் பதில் கொடுத்தது. என்னை ஆச்சரியமும் அதிர்ச்சியும் சூழ்ந்துகொண்டு வேடிக்கை பார்த்தன. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. என் வருகைக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கும் என் அருமை சாந்தி எங்கே போய்விட்டாள்? 'ஒளிந்து நின்று குறும்பு செய்கிறாளா? இத்தனை நேரமாகவா? இருக்காது. "சாந்தி!" மூன்றாவது முறையாகக் குரல் கொடுத்தேன். ஆனால் பதில் இல்லை.

நான் அதிர்ச்சியால் அறையப்பட்டவனாய்ச் சுற்றும் முற்றும் பார்த்தேன். வீடு ஹோவென்று கிடந்தது. எங்கும் ஒரே பயங்கர அமைதி. சதா கலை சிந்தும் எனது வீடு இன்று ஏன் செத்ததுபோல் வெறிச்சோடிக் கிடக்க வேண்டும்? எங்கே சாந்தி போய்விட்டாள்? ஒருவேளை பக்கத்து வீட்டுப் பெண்களுடன் 'மாதர் மகாநாடு' நடத்துகிறாளோ? எட்டிப் பார்த்தேன் எதிர் வீட்டை. அப்படி ஒன்றும் அங்கு காணப்படவில்லை.

ஏதோ நினைத்துக்கொண்டவனாய் கோடிப்புறத்தை நோக்கி நடந்தேன். அடுத்த கணம் திடுக்கிட்டு நின்றேன்! அங்கே, சாந்தி என் அருமை மனைவி கோடிப்புறக் கட்டிலிற் குப்புறக் கிடந்தாள். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. "சாந்தி உடம்புக்கென்ன?" என்றவனாய் ஓடோடிப்போய் அவளைத் தொட்டேன். அவள் திடுக்கிட்டு எழுந்தாள். முகத்திலே அழுகையும் வியவையும் ஒன்று சேர்ந்து அவளை உருமாற்றுவதில் ஈடுபட்டிருந்தன. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. சற்றுத் திகைத்து நின்றேன். அவள் என்னை ஒருதரம் ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வையிலே ஆத்திரமும் சோகமும் இழைவிட்டிருந்தன.

"சாந்திஉடம்புக்கென்ன?" என்றவனாய் மீண்டும் அவளைத் தொடப்போன எனக்கு "உடம்புக்கு ஒன்று

(15-ம் பக்கம் பார்க்க)

# சமஷ்டி அரசமைப்பில்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

களே!) என்ற பயத்தைச் சில சிங்களத் தலைவர்களைப் போல், முஸ்லிம் தலைவர்களும் வெளியிட்டனர். இந்தப் பயத்தை—திருகோணமலையில் கூடிய தமிழரசுக் கட்சி தீர்த்து விட்டது. அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு கூறுகிறது.

"சமஷ்டி அமைப்பின் கீழ் ஒரு மொழி பேசும் இராச்சியமோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழி பேசும் இராச்சியங்களோ நிறுவுவதன் மூலம் தமிழ் பேசும் மக்களுக்குச் சுதந்திரத்தைப் பெறுவதே கட்சியின் நோக்கம். சமஷ்டி அரசமைப்புக்குள் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையுள்ள பிரதேசத்தில் சுயஆட்சியுள்ள ஒரு முஸ்லிம் அரசு நிறுவுதலும், தமிழரசு, முஸ்லிம் அரசு ஆகிய இரு நாடுகளிலுமுள்ள சிறுபான்மையோர்களின், மொழி, கலாச்சாரம் தெய்வவழிபாடு, மற்றும் அடிப்படை உரிமைகள் வழங்கப்படும்."

இதைவிட நியாயமான தீர்மானங்கள் முஸ்லிம்களுக்கு வேறு என்ன வேண்டியதிருக்கின்றன?

## பொய்யுரை கூறுதவர்

இத் தீர்மானம் "முஸ்லிம்களைக் கவரச் செய்யப்பட்டதென்று," யு. என். பி. சரடு விடுகிறது. உண்மையில் அப்படியல்ல. கட்சி நலனுக்காக அல்லது தலைமைப் பதவிக்காகப் பொய்யுரை கூற மாட்டார் திரு. எஸ். ஜே வி. செல்வநாயகம். அவர் அப்படியானவரல்லர்.

சமஷ்டி ஆட்சிமுறை இயங்கும் உலக நாடுகள் பல. அங்கெல்லாம் வெளிநாட்டவர் வந்து குடியேறிவிடவுமில்லை; தங்கள் பிரதேசத்தை வேற்று நாட்டவனுக்கு விற்று விடவும் இல்லை. இதற்கு மாறாகப் பாதுகாப்பு, போக்குவரத்து, தபால், தந்தி, ரயில் போக்குவரத்து முதலியன மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலேயே இருக்கின்றன. இந்த அடிப்படையில்தான் தமிழரசுக் கட்சி ஒரு சமஷ்டியை இலங்கையில் ஏற்படுத்த விரும்புகிறது. இதில் பிழை என்ன இருக்கிறது?

## சிறுபிள்ளைத்தனம்

இலங்கையில் தமிழரசு ஏற்படின், தென் இந்தியாவுடன், இலங்கை இணைந்துவிடுமென்றும், திரிகோணமலை துறைமுகம், இந்தியப் போர்த்தளமாக்கப்பட்டு விடுமெனவும் சில சிங்களத் தலைவர்களும், சிங்களப் பத்திரிகைகளும் ஓலமிடுவது சிறுபிள்ளைத்தனமாகும். இந்தியா எந்த நாட்டையும் ஆக்ரமிக்காது. அதற்கு எத்துறைமுகங்களும் தேவை இல்லை! இலங்கைக்கு வெகு அருகாமையிலிருக்கும் சேது சமுத்திரம் வெட்டப்பட்டு ஆழ்கடலாக ஆக்கப்பட்டால், இலங்கைத் துறைமுகங்கள் ஒன்றுக்கும் உதவாமல் போகும்.

சமஷ்டியைச் சேர்ந்த பிரதேசங்கள் நாளடைவில், குடியேற்றக் கட்டுப்பாட்டைத் தளர்த்தி பல லட்சக் கணக்கான தென்னகத் தமிழர்களை இலங்கையில் குடியேற்றி விடுவார்கள் என்பது அபத்தம். "அப்படித் தென்னகத் தமிழர்களை இங்குள்ள தமிழர்கள் குடியேற்றி வைப்பதாக விவாதத்துக்காக, ஒப்புக்கொள்வோம்." அப்படியானால் அது சமயம் பெரும்பான்மைச் சிங்களவர்கள், தன் இனத்தவர்களைப் பெருக்க வேண்டுமானால் பர்மாவிலிருந்தும், சீனத்திலிருந்தும் பௌத்தர்களை இங்கு குடியேற்றலாமே!


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ANANDA MEDICAL HALL TRADE MARK ஆனந்தா 174, SEA STREET, COLOMBO

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை கணுக்களால வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரிது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர் நியமனத்தை எதிர்த்தவர்

## இன்று சித்திரமான விசித்திரத் தொழிலில் விற்பன்னராக விளங்கும் விந்தை

### ஏருவூரில் நடைபெறும் 'பிளாஸ்டிக்' உற்பத்திகள்

[பேட்டி கண்டவர்: "மாலதி"]

அந்த இடத்துக்கு நான் வரும்போது மாலை 6-30 மணி. அப்போதுதான் அது ஞாபகம் வந்தது. எது? 'றப்பர் ஸ்டாம்பு' ஒன்றுக்கு 'ஆடர்' கொடுக்க வேண்டுமென்பது.

உள்ளே கால்வைத்ததும் வையாததுமாகக் கேட்டேன்.

"நீங்கள் 'றப்பர் ஸ்டாம்பு' செய்து கொடுப்பீர்கள் தானே?"

"ஆமாம்; அமருங்கள்" வேலையில் ஈடுபட்டிருந்த அவர் நிமிர்ந்து பார்த்தார். நான் அவர் முன்பாகப் பேசாமல் அமர்ந்தேன். மீண்டும் அவரின் தலைகவிழ்ந்தது. கடைசியாக அந்த ஒரு எழுத்தையும் பலகையில் பொருத்தி ஒட்டிவிட்டு நிமிர்ந்தமர்ந்தார்.

இப்போது நான் வந்த வேலையையே மறந்தேன். நல்ல தருணமடா!...மனது எதையெதையோ பேசியது. சுருக்கமாக என்னை அவருக்கு அறிமுகமாக்கினேன். அவரின் முகம் மலர்ந்தது. சுதந்திரன் என்றதும் அவர் உள்ளம் துள்ளியது.

"கிழக்கு மாகாணத்திலேயே இந்த வேலை செய்வோர் யாருமே கிடையாது. ஏன் இலங்கையிலேயே நாங்கள்தான் இத்தனை திறமாக இந்த வேலையைச் செய்கிறோம்" எனப் பெருமைபட அவர் கூறிக்கொண்டார்.

புரிகிறதா வாசக நேயர்களே! உங்களைத் தான் கேட்கிறேன். இப்போது நாங்கள் எங்கே நிற்கிறோம் தெரியுமா? ஏருவூர்; "ஜெயா புரொடக்ட்ஸ்"

திருமதி ஜெயதேவி தங்கசாமிதான் இதன் உரிமையாளர்.

ஆகா! அழகழகான உருவப் படங்கள்; கருத்தைக் கவரும் பிளாஸ்டிக் பொருள்கள்; நெஞ்சையள்ளும் வெட்டுப் படங்கள்; சிந்தையை நிறைக்கும் வண்ண ஓவியங்கள். நாள் முழுக்க ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்தே களிக்கலாமே!

ஆமாம்; களிக்கலாம். நேரம்தான் சொல்லாமல் கொள்ளாமல் கழிகிறதே!

"உங்கள் தொழிலாளி ஒருவரை அழையுங்களேன். அவரைத்தான் நான் காண வேண்டும்..." நேரம் சொல்லாமல் நகர்வதை உணர்த்தாமல் உணர்த்துகிறேன்.

"வேதாரணியம்!" அவர் குரல் கொடுக்கிறார். இளைஞர் ஒருவர் சிரித்த முகத்தோடு என்முன்பாக வந்தமர்கிறார்.

"இவர் தொழிலாளி மாத்திரமல்ல, இந்த ஸ்தாபனத்தின் நிருவாகியும்கூட; உங்களுக்கு வேண்டியதைத் தெரிந்து கொள்ளலாம்." மீண்டும் அந்தக் குரல் இப்படி ஒலிக்கிறது,

எனது கண்கள் அவருக்கு நன்றி சொல்லுகின்றன.

இனி இந்த இளைஞரோடு சில நிமிடங்களைக் கழிப்போமா?

ஏருவூர் 4ம் குறிச்சியைச் சேர்ந்த இந்த இளைஞர் பொன் ஆபரணத் தொழிலாளி சுந்தரமூர்த்தியின் புதல்வர் தாயார் அழகம்மா; இவருக்கு வயது 22 ஆகிறது. 1956ல் தமிழ் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்து ஆசிரியர் கலாசாலைப் புகுமுகப் பரீட்சைக்கும் அமர்ந்துவிட்டு, 1958ல் 'ஜெயா புரொடக்ட்'ஸில் சேர்ந்து தொழில் பழகினார்.

இவருக்கு நன்றாகக் கைவந்த தொழில் என்ன தெரியுமா? 'பிளாஸ்டிக்' வேலைதான். வியக்கத்தக்க முறையிலே இவரின் கைவண்ணம் பொலிவதை, 'ஜெயா புரொடக்ட்ஸில்' கால்வைக்கும் எவருமே மறுக்க முடியாது. இதற்கென விசேஷ பயிற்சி பெறாத ஒரு இளைஞர் இப்படித் திறம்பட்ட ஒரு கலைஞராக, அதுவும் இந்த ஊரிலே விளங்குவதைக் காணும்போது நமக்கு நம்பிக்கை பிறக்காமலா போகும்? தமிழினம் கைத்தொழிலிலே உச்சவரம்பையடையும் காலமொன்று கிட்டத்திலேதான் இருக்கிறது.

இத்துடன் நில்லாது இயந்திரமூலம் பெயர் பொறிக்கும் வேலை (என்கிறேவிங்)கிலும் இவருக்கு நல்ல தேர்ச்சியுண்டு.

1955ல் ஏருவூர் உயர்தர பாடசாலைக்கு சிங்கள ஆசிரியர் நியமிக்கப்பட்டாரே! ஞாபகமிருக்கிறதா? அப்போது அதை எதிர்த்துக் கிளர்ச்சியில் இறங்கியமுதல் நபர் யார் தெரியுமா? நமது வேதாரணியம்தான். இதை கூறிக்கொள்ளும்போது அவரோடு சேர்ந்து நாமும் பெருமைகொள்கிறோம்.

இவருக்கு இங்கே கொடுக்கப்படும் சம்பளம் ரூ. 125/- தான். இது இவரின் செலவுக்கே சரியாய்விடுகிறது. இவருக்கு இரு சகோதரரும் இரு சகோதரியும் இருக்கிறார்கள். ஆனாலும் வீட்டுப் பொறுப்பு இவருக்கு கிடையாது.

சரி நம்மைக் காத்துக் கொண்டிருக்கிறார் இளைஞர் வேதாரணியம். அவரோடு பேசிப் பார்ப்போமே!


"தம்பி! நீங்கள் ஒரு தொழிலாளி என்ற முறையில் என்ன விபரங்களைச் சொல்லப்போகிறீர்கள்? இதோ வாசகநேயர்கள் ஆவலோடிருக்கிறார்கள் காதைத் தீட்டிக்கொண்டு. சொல்லுங்களேன்"

முதலிலே எனது வணக்கம்.

என்னைப்பற்றித்தான் தெரிந்துகொண்டீர்களே! தொழிலைப்பற்றித்தானே சொல்லவேண்டும்?



எலக்ட்ரிக் என்கிரேவிங் யந்திரத்தைக் கொண்டு இளைஞர் வேதாரணியம் ஊற்றுப்பேனு ஒன்றில் உடையவரின் பெயரைச் செதுக்குகிறார்.



ஹொபி மெஷின் மூலமாக பிளாஸ்டிக் எழுத்துக்கள் அறுத்தெடுக்கப்படுகின்றன. இந்த யந்திரத்தைக் கொண்டு பிளாஸ்டிக் உருவங்களையும் அறுத்துத் தயாரிக்கலாம்.

'பிளாஸ்டிக்'கிலே பெயர்ப் பலகைகள் தொடக்கம் வெட்டுப் படங்கள்; மாதிரி உருவங்கள் வரை நாங்கள் செய்கிறோம். இது மாத்திரமன்றி, 'வின்ட் ஸ்கிறீன்' (மோட்டோர் சைக்கிளின் முன்மறைப்பு) கூட எங்களால் செய்யப்படுகிறது.

பெயர்ப் பலகைக்கான மூலப்பொருள் 'பேர்ஸ்பெக்ஸ்' (Perspex). இதை நாங்கள் கொழும்பிலுள்ள 'இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்றீஸ்' கம்பனி மூலமாகப் பெறுகிறோம். இந்தப் பிளாஸ்டிக் பலகையை எங்களுக்கு விருப்பம்போல எந்த அளவிலும், எந்த நிறத்திலும் பெறலாம். இதை, 'சீட்சீட்'டாக நாங்கள் எடுப்போம். ஒரு சாதாரண சீட் (4'X3') சதுர அடி ரூ. 5 கொடுத்துப் பெறுகிறோம். இதைக் கொண்டு ரூ. 15 பெறுமதியான எழுத்துக்களையோ பொருட்களையோ செய்யலாம்.

முதலிலே எழுத்துக்களை விரும்பிய விதத்தில் தாளிலே வரைந்து 'சீட்'டில் ஒட்டுகிறோம். இப்படி ஒட்டிய எழுத்துக்களை 'ஹொபிஸ் மெஷின்' கொண்டு அறுத்தெடுத்து மெருகு கொடுத்து, அதற்குரிய 'பொலிஷ்' கொடுப்போம். இப்போது, பலகையில் ஒட்டக்கூடியவாறு எழுத்துத் தயாராகிவிடும். 'ரென்சல் சிமெண்ட்' என்ற பசைமூலமாக எழுத்துக்களைப் பலகையில் பொருத்துவோம். இத்தோடு பெயர்ப் பலகை சரி.

இதே போன்றுதான் பிளாஸ்ரிக் உருவங்களையும் அறுத்தெடுக்கிறோம்.

இந்த மூலப்பொருளைச் சூடாக்கினால் எங்கள் விருப்பப்படி வளைத்தெடுக்கலாம். வேண்டிய அளவு இதனை அறுத்து, சூடேற்றி 'போட்டோ ஸ்டாண்ட்' முதலியன செய்கிறோம்.

'வின்ஸ்கிறீனுக்கு' வேறான சீட் இருக்கிறது. அளவுக்கு அறுத்து வளைவாக்கி மெருகேற்றி எடுக்கிறோம்.

எங்கள் விலை எழுத்துக்களின் பருமனையும், தொகையையும் பொறுத்தது. ஒரு அங்குல எழுத்தொன்று ரூ. 1-25. ஒரு பெயர்ப் பலகையிலே 10 எழுத்துக்கள் வருமானால், அதன் விலை ரூ. 12-50.

இதோ பார்த்தீர்களா? இந்த இயந்திரம்மூலமாகத்தான் 'என்கிறேவிங்' (செதுக்கு வேலை) செய்கிறோம். பவுண்டன் பேனாக்கள், 'கிராக்ஸ்' இவைகளுக்கே பெயர் பொறித்துக் கொடுக்கிறோம். ஒரு பேனாவுக்குப் பெயர் பொறிக்க கூலி ரூ. 1-50 பெறுகிறோம். 'கிராக்ஸ்' ரூ. 2-50. (இரு வரிகள்)

"இவைகளோடு பெட்டிப் படங்களறுத்தல், பிரேம் பண்ணுதல், பூக்கட்டுதல்; பெயர்ப் பலகை எழுதுதல், சித்திர வேலைகள் ஆகியனவற்றையும் அவ்வப்போது நான் செய்கிறேன்"

"நல்லது தம்பி வேதாரணியம்! நீங்கள் இந்த ஸ்தாபனத்தின் நிர்வாகி என்ற முறையிலே என்ன சொல்லப்போகிறீர்கள்?"

"நீங்கள் எதை எதிர்பார்க்கிறீர்களோ, அதைத் தானே சொல்லவேண்டும்!"

இங்கே என்னோடு இன்னும் மூவர் இருக்கிறார்கள். எல்லோருக்கும் பொதுவாக எல்லா வேலையும் தெரியும். ரப்பர் ஸ்டாம்புகூட நாங்

(13ம் பக்கம் பார்க்க)




அழகழகான பிளாஸ்டிக் எழுத்துக்கள் பெயர்ப்பலகையிலே பதிந்து ஒட்டப்படும் காட்சி. கை தேர்ந்த தொழிலாளியின் கரம்படும்போது பெயர்ப்பலகைகள் கண்ணைக் கவரும் வனப்பைப் பெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில நாடகங்களின் சமீபகால வளர்ச்சி

## சமுதாயத்தின் சீர்கேடுகளைத் தம் நாடகத்தின் மூலம் சாடியவர் இப்சன்

## அவருக்குப் பிறகு தோன்றிய ஓரே புரட்சி நாடகாசிரியன் பெர்னுட் ஷா

எலிசபெத் மகாராணி இங்கிலாந்தை ஆண்டு கொண்டிருந்த காலத்தில் ஆங்கில மொழி வளர்ச்சி உச்சநிலை அடைந்திருந்தது. குறிப்பாக ஆங்கில மொழியில் அருமையான நாடகங்கள் தோன்றின. அதற்குப் பிறகு பல ஆண்டுகள் நாடகங்கள் தோன்ருமலேயே இருந்தன. ஆங்கில நாடகங்களின் வளர்ச்சி தடைபட்டு விட்டதோ என அஞ்சினர் பலர்.

ஆனல் 18-வது நூற்ருண்டின் ஆரம்பத்தில் கோல்டுஸ்மித், செரிடன் போன்ற நாடகாசிரியர்கள் நாடக வளர்ச்சிக்கு விதைகளை ஊன்றினர். 18-வது நூற்ருண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்து தலைசிறந்த பல நாடக நடிகர்களைக் கண்டது. ஆனல் நாடகாசிரியர்கள் திறமை படைத்தவர்களாக ஒருவரும் தோன்றவில்லை. பெரும்பாலும் கீழ்த்தரமான நகைச்சுவையோடு கூடிய இரண்டாந்தரமான நாடகங்கள் பல நடிக்கப்பட்டன,

### மறுமலர்ச்சி கண்டவர்

இந்தச் சமயத்தில் தான் நாடகத்தில் மறுமலர்ச்சி காண விரும்பிக் கிளம்பினர் வி. டபிள்யு. ரொபர்ட்சன் என்ற ஒரு நாடக நடிகர். ரொபர்ட்சன் நடிகரானுலும் அற்புதமான நாடகங்கள் எழுதும் பேராற்றலைப் பெற்றிருந்தார். வாழ்க்கையின் பிரதிபலிப்பே நாடகம் என்ற தத்துவத்தை, தனது 'சமுதாயம்' என்ற நாடகத்தில் எடுத்துரைத்தார்.

ஆனல் சமுதாய மறுமலர்ச்சிக்கோ, பொருளாதார சீர் திருத்தத்திற்கோ தனது நாடகத்தை அவர் பயன் படுத்தாததால் மக்கள் மனதில் நாடகாசிரியர்கள் வரிசையில் நல்லதொரு இடத்தை அவர் பெற முடியாமல்போயிற்று. ஆயினும் உண்மை நிகழ்ச்சிகளை நாடகத்தின் மூலம் எடுத்துரைத்து மற்ற நாடகாசிரியர்களுக்கு வழி காட்டினர் ரொபர்ட்சன். எனவே 1865-ம் ஆண்டு 'சமுதாயம்' என்ற நாடகத்தின் மூலம் நாடக வளர்ச்சிக்கு விதை ஊன்றினர் ரொபர்ட்சன் என்பதை அநேகமாக எல்லா இலக்கிய மேதைகளும் ஒத்துக்கொள்கிருர்கள்.

### திருப்திக்குத் திருப்பினர்கள்

அவருக்குப் பிறகு தோன்றிய பல நாடகாசிரியர்கள், மக்களை திருப்திப்படுத்துவதற்காகத் தங்கள் பேனவைத் திருப்பினர்கள். மக்கள் எதைச் சுவைக்கிருர்கள் என்பதை ஆராய்ந்து, அவர்களது சுவைக்குத் தக்கவாறு நாடகங்களை அமைத்தார்கள்.

பின்ரோ, ஜோன்ஸ் போன்ற நாடகாசிரியர்கள் தங்கள் சொந்தக் கற்பனையைவிட மக்கள் சுவையையே பெரிதும் விரும்பியவர்கள். ஜோன்ஸ் எழுதிய "பரிசுத்தவான்களும் பாவிகளும்" (1884) என்ற நாடகம் முழுக்க முழுக்க நாடகம் பார்க்க வருகிறவர்களைத் திருப்திபடுத்துவதற்காகவே எழுதப்பட்டது. இவர்களது நாடகங்களில் ஆங்கில மக்களின் சமுதாய அமைப்பு முறையையோ அவர்களது பண்பாட்டையோ கலைப் பண்பையோ பார்ப்பதற்கு வழியில்லாமல் போய்விட்டது.

### புரட்சி நாடகங்கள் ஆரம்பம்

ஆங்கில மொழியில் புரட்சிகரமான நாடகங்களின் ஆரம்பம் இப்சன் என்ற நார்வே நாட்டு நாடக ஆசிரியரோடு ஆரம்பமாகிறது. கிரின் என்பவரால் ஆங்கில

### 'விரமா முனிவர்'

மக்களுக்கு இப்சன் அறிமுகப்படுத்தப்பட்டார். வாழ்க்கையில் நடக்கும் அன்ருட சம்பவங்களை கருப்பொருட்களாக எடுத்துக் கொண்டு தன்னுடைய நாடகங்களைத் தீட்டினர் இப்சன்.

சமுதாயத்தோடு, சமுதாயப் பழக்க வழக்கங்களோடு ஒத்துப் போவது என்றுமே புரட்சியாகக் கருதப்பட மாட்டாது. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்பது அனுபவ அறிவு. எனவே சமுதாய ஏற்றத் தாழ்வுகளைக் கண்டித்து செல்லரித்த சமுதாயத்தின் சீர்கேடுகளைச் சித்தரித்துத் தனது நாடகங்களை எழுதி நாடகப் புரட்சிக்கு வித்திட்டார் இப்சன்.

### பேரிடியாக இருந்தன

இப்சனின் நாடகங்களும், நாடகங்களில் வருகின்ற கதாபாத்திரங்களின் குணதிசயங்களும் பழமை விரும்பிகளுக்குப் பேரிடியாக இருந்தன. நெஞ்சுரமும் புரட்சி மனப்பான்மையும் கொண்ட இப்சன் அவைகளை தூசெனத் தள்ளிவிட்டார்.

இப்சனுக்குப் பிறகு தோன்றிய ஓரே புரட்சி, நாடகாசிரியன் பெர்னுட் ஷா. பகுத்தறிவுப் பிரசாரத்தையும் சமுதாய சீர்திருத்தத்தையும் நாடகங்களின் மூலம் செய்தார் ஷா.

### பெர்னுட்ஷாவின் குறிக்கோள்

கலை கலைக்காக அல்ல கலை மக்களுக்காக என்ற தத்துவத்தின் கீழ் இருந்து தொண்டாற்றியவர் அவர். சமுதாய சீர்திருத்தத்திற்காகத்தான் அவர் தன் நாடகங்களை எழுதினரே தவிர மக்களை திருப்திபடுத்தி அதன் மூலம் காசு சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக அல்ல.

ஷா எழுதியமுதல் நாடகம் 'விதவைகளின் வீடுகள்' என்பது (Widowers Houses). இது 1892-ம் ஆண்டு வெளி வந்தது. ஆங்கில நாடக வளர்சியில் ஷாவின் பங்கு பெரியது என்பது அவர் எழுதிய 'யுத்தக்கருவிகளும் மனிதனும்' 'காண்டிடா' 'செயின்ட் ஜோன்' 'மனிதனும் அசாதாரண மனிதனும்' (Man and Superman) முதலிய நாடகங்களினின்று தெரிய வருகிறது.

### சமுதாயப் பிரச்னை நாடகாசிரியர்கள்

சமுதாயப் பிரச்னைகளை வைத்து நாடகம் எழுதியவர்கள்தான் ஜான் கால்ஸ்வர்த்தி, பாக்கர் போன்றவர்கள். ஆனல் இவர்கள் சமுதாயத்தைச் சாடும்போதும் புரட்சி எண்ணங்களைத் தூவும் பொழுதும் உணர்ச்சிகரமான முறையில் எழுத்துக்களைக் கோத்து எண்ணங்களை வடித்தார்கள்.

ஆனல் ஷாவின் நாடகங்கள் உணர்ச்சியை எழுப்ப வல்ல திறமை படைத்தனவாக இல்லாமலிருந்தாலும், கிண்டல் கேலி மூலம் சமுதாயச் சீர் கேடுகளை மக்கள் மனதில் பதிய வைப்பனவாக இருந்தன. குறிப்பாக நகைச்சுவையைப் பெருமளவில் புகுத்தி அதன் மூலம் தன்னுடைய கொள்கையைப் பரப்புவதற்காக நாடகங்களை எழுதினர் ஷா.

### புராண ரீதியில் கற்பனை நாடகம்


ஷாவிற்கு பிறகு தோன்றிய சிறந்த நாடகாசிரியர் பேரி (Barrie) என்பவர். இவர் அரசியல், பொருளாதாரம் சமுதாயம் முதலியவற்றை அறவே மறந்த புராணரீதியில் கற்பனை நாடகங்களை எழுதினர்; அராபியக் கதைப் போக்கில் நாடகங்களைத் தீட்டினர்.

புகழ் பெற்ற "பீட்டர் பேன்" (Peter Pan) என்ற நாடகத்தை எழுதியவர் இவர்தான். இந்தச் சமயத்தில் ஐரிஷ் எழுச்சி தோன்றவே ஐரிஷ் நாட்டு மக்களின் கலாசாரத்தையும், வீரத்தையும், பண்பாட்டையும் புகழ்ந்து பல நாடகங்கள் எழுதப்பட்டன.

### கவிதை நாடகங்கள்

ஜே. எம். சினஞ் (Synge) என்பவர் ஆறு அற்புதமான நாடகங்கள் எழுதி வெளியிட்டார். இவருடைய நாடகங்கள் அத்தனையும் மக்கள் பேராதரவை பெற்றவை. "சினஞ் எல்லாவிதத்திலும் நாடக மேதை ஷேக்ஸ்பியரை ஞாபகப் படுத்துகிருர்" என்று பேராசிரியர்—திருவாளர் ஹட்சன் கூறியுள்ளார்.

(13-ம் பக்கம் பார்க்க)



இம்மாதம் 19-ம் 21-ம் 23-ந் தேதிகளில் கொழும்பு லயனல் வெண்ட் தியேட்டரில் நடைபெறவிருக்கும் "லண்டன் கந்தையா" என்ற நகைச்சுவை நாடகத்தில் ஒரு காட்சி.

லண்டனில் தமிழர் பண்பாட்டைப் பரப்பும் நோக்கத்துடன் கந்தையா (எஸ். சண்முகநாதன்) நிகழ்த்திய 'நந்தன் ஆர்?' புருேக்கின் இங்கிலீஸ் கதாப்பிரசங்கம் நாடகத்தின் முக்கிய அம்சமாக விளங்கும் என்று தெரிகிறது.

# நவ்ரங்

இலங்கையிலுள்ள இந்திப் பட ரஸிகர்களின் மனத்திலே "ஜனக ஜனக பாயல் பஜே" என்ற படம் பசுமரத்தாணி போல் பதிந்திருக்கிறதல்லவா?

அந்த அற்புதமான படத்திலே நிறைந்திருந்த உயிர்த் துடிப்பான நர்த்தனங்களும், உளம் உருக்கும் கீதங்களும், கண்கவர் வர்ண விசித்திரங்களுமே அத்தப் படத்துக்கு சிரஞ்சீவித்துவம் அளித்தன.

'ஜனக ஜனக' வைப் பார்த்துக் களித்து, மற்றுமொரு படம் அந்த ரகத்தில், அந்தத் தரத்தில் வராதா என்று ஆவலோடு காத்திருந்த ரஸிகர்களுக்கு இதோ வந்திருக்கிறது "நவ்ரங்" என்று கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேம்.

'ஜனக ஜனக' வில் கதை அமைப்புப் பலம் பெறவில்லை. நிருத்த நிகழ்ச்சிகளே பெரிதும் இடம் பெற்றன. 'நவ்ரங்' கில் அருமையான கதைப் பிடிப்பும் இருப்பதால் 'ஜனக ஜனக' வைவிட கதாரஸனையிலும், தரத்திலும 'நவ்ரங்' மிகவும் உயர்ந்த படமாக அமைந்து விட்டது.

காட்சிக்குக் காட்சி, திருப்பத்துக்குத் திருப்பம், பாத்திரப் படைப்புக்குப் படைப்பு, படக் கோணத்துக்குக் கோணம் கலாமேதை டைரக்டர் வி. சாந்தாராமின் முத்திரையைக் காண்கிறேம். திரைப்படவுலகிலே ககனத்தைத் தொடும் கற்பனைகளையும், நிகழ் காலத்தை வெல்லும் புதுமைகளையும் சிருஷ்டிக்க வல்ல கலைப் பிரம்மா அல்லவா சாந்தாராம்?



வியாழன் முதல் கொழும்பு காமினி, வெள்ளவத்தை சபயர் தியேட்டர்களில் ஓடும் "நவ்ரங்" என்ற டெக்னி கலர் இந்திப் படத்தில் ஒரு காட்சி. நடனமாடும் ஒரு யானையின் முன்னல் ஏககாலத்தில் பெண்ணுகவும் ஆணுகவும் மாற்றுடை தரித்து வலைந்த ருது நர்த்தனம் புரிகிருர் சந்தியா. இப்படத்தில் ராம் சந்ரா என்ற அதிசய யானையும், மோதி என்ற வேடிக்கைக் குதிரையும் நடிக்கின்றன.

நவ்ரங் ஒரு ஏழைக் கவிஞன். இளம் பாடகன். மனைவி ஜமுனுவோடு பிணங்கிக்கொண்டு கற்பனை மோகினியின் ஆட்டத்தில் அடிக்கடி மெய் மறக்கிருன். அந்தக் கற்பனை மோஹினி வேறுயாருமல்லள்; அவன் மனைவியேதான்.

அவன் கவிதையின் புகழ், பாட்டின் இனிமை அரசவையை எட்டுகிறது. அரசவைக் கவிஞனுக மன்னர் கரன்சிங் அவனை நியமிக்கிருர்.

சிட்டுக் குருவியைப் போல விட்டு விடுதலை பெற்ற அவன் உள்ளம் கட்டுமீறிக் கான வெள்ளத்தில் மிதக்கிறது. அரசவைக் கட்டுப் [illegible] உபத்திரவமாகத் தோன்றுகின்றன. ஆ[illegible] பணிந்து அவனால் பாட முடியவில்லை. அரச சீற்றத்துக்கு ஆளாகிருன். முடிவில் மனைவி ஜமுனு அவன் மகிமையை உணர்ந்து பிணக்கு நீங்குகிருள். அந்த நிலையில் அவனுக்கு கவிதா வெள்ளம் காட்டாருகப் பெருக்கெடுத்து கரை புரண்டு ஓடுகிறது. அனைவரும் மகிழ்கின்றனர். இதுவே கதையின் கருப் பொருள்.

இந்தக் கருவை வைத்துக் கொண்டு எவ்வளவு அற்புதமாகக் கற்பனைப் புரவியைத் தட்டி விட்டிருக்கிருர் டைரக்டர் சாந்தாராம் என்பதைப் பார்க்கும் போது ஒரே பிரமிப்பாய் இருக்கிறது.

அழகி சந்தியா மனைவி ஜமுனு வாகவும், நர்த்தகி மோஹனுவாகவும் தோன்றி இரண்டு வேறுபட்ட குண சித்திரங்களைத் தீட்டிக் காட்டுகிருர். மோஹனுவாக அவர் ஆடும் ஆட்டங்கள் அமர்க்களமானவை.

நவ்ரங்காக மஹிபால் நடிக்கிருர். அவர் தோற்றமும் கண்களும் அவரை ஒரு இயற்கைக் கவிஞனுகவே காட்டுகின்றன.

மஞ்சரியாக வரும் வத்தனு, மன்னர் கரன்சிங்காக வரும் உல்ஹாஸ் ஆகியோரின் நடிப்பு நாடக பாணியாகக் காணப்படுகிறது. ஜனுர்த்தனுக கேஸவ ராவ் தாதே நன்ருக நடித்துள்ளார்.

இப்படத்தில் உள்ள அத்தனை பாட்டுகளும் உள்ளக் கிளர்ச்சி உண்டு பண்ணுபவை. இசையமைத்த ராமச்சந்ரா பாராட்டுக்குரியவர்.

செட்டிங்ஸ்களும், கலர்ப் பிரயோகமும் பிரமாதம் என்று சொல்லலாம். நடனக் காட்சிகளில் வர்ண ஜாலங்கள் மனேரம்மியமாயிருக்கின்றன.

—எஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பாடசாலைகளில்....

(11ம் பக்கத் தொடர்ச்சி)

களை செய்து வந்தோம். இப்போது அதை நாங்களாகச் செய்யாவிட்டாலும் எங்கள் மூலமாகச் செய்து தருகிறோம்.

இலங்கையின் பிரபல எல்லா நகரங்களிலும் எங்களுக்கு 'ஏஜன்ட்ஸ்' இருக்கிறார்கள். எல்லா வேலைகளையும் ஆடர்களுக்கே செய்கிறோம். சந்தர்ப்பத்தைப் பொறுத்து சில பொருட்களை வியாபாரத்துக்கும் செய்து வைப்போம்.

சொல்லப்போனால் இது இன்னும் முன்னேற வேண்டிய தொழில். நல்ல இலாபகரமான தொழில்.

படித்த இளைஞர்கள் இதிலேகூடத் தயங்காது ஈடுபடலாம்.

"ஆமாம்; நீங்கள் கூட படித்த இளைஞர்களுக்கு ஒரு முன்மாதிரி"

"அவர்களுக்கு இந்தத் தொழிலில் பயிற்சியளிக்கும் வசதி கிடைத்தால் வரவேற்பேன். என்னால் இயன்ற உதவியைச் செய்வேன்..."

"சந்தோஷம். உங்கள் எதிர்கால நோக்கம் எப்படி?".

"ஆசிரியராகத்தான் ஆசை. அது கைகூடாவிட்டால் இதிலேயே முன்னேற வேண்டியதுதான்..." இப்படிக் கூறிக்கொண்டு வரும் வேதாரணியம் என் முகத்தை ஏதோ ஒரு ஆவலோடு பார்க்கிறார்.

"என்ன தயங்காமல் சொல்லுங்கள்" என்கிறேன் நான்.

"நீங்கள் எழுதிவரும் இந்தக் கட்டுரைகளைப்பற்றித் தான்......"

"என்ன?..." நான் அவசரப்படுகிறேன்.

"ஒன்றுமில்லை; மட்டக்களப்புத் தமிழை-கொச்சையாக அப்படியே பச்சையாகப் போட்டுவிடுகிறீர்கள். இதை எடுத்துக்காட்டிவேறு சிலர் நகையாடுகிறார்கள். மட்டக்களப்புத் தமிழ் இப்படி நகைப்புக்கிடமாவதை நம் மக்களால் சகிக்க முடியவில்லை. அதைத்தான் சொன்னேன்.

"ஓ, அதுவா?" நான் சிரிக்கிறேன்.

"மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ்தானே சங்க காலத் தமிழ்? அதை வளர்க்க வானொலியும் பத்திரிகைகளும் இடம் தரவில்லையே என்று நான் அங்கலாய்க்கிறேன். நீங்கள் என்னடாவென்றால்..." நான் பேச்சை முடிக்கவில்லை. அவர் சிரித்துவிடுகிறார். அந்தச் சிரிப்போடு நானும் விடைபெறுகிறேன். அவருக்கு நன்றி பல.

## ஆங்கில...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

இவருக்குப்பின் புகுந்தது கவிதை நாடகங்கள் பல தோன்ற ஆரம்பித்தன. இந்தத் துறையில் பிரசித்திப் பெற்ற நாடகாசிரியர் ஸ்டீபன் பிலிப்ஸ் என்பவர். ஆனால் கவிதை உலகில் அவ்வளவு திறமை பெற்றவராக அவர் கருதப்படவில்லை.

ஜான் டிரிங் வாட்டர், மேஸ்பீல்டு (Drinkwater, Masefield) போன்றவர்களுடைய நாடகங்களில் வருகின்ற வசனங்கள் கவிதைத் தாய்க்கும் உரை நாடகத் தந்தைக்கும் பிறந்தவைகளாக இருந்தன.

டிரிங்வாட்டர் எழுதியுள்ள 'ஆபிரகாம் லிங்கன்', 'கிராம்வெல்', 'மேரி ஸ்டுவர்ட்' போன்ற நாடகங்கள், அவருக்குப்பின் ஜே. எஸ். எலியட்டின் "கத்தீட்ரலில் நடந்த கொலை" என்ற நாடகம், பெரும் வரவேற்பைப் பெற்றன. அதைத் தொடர்ந்து பல நாடகங்கள் ஆங்கில மொழி இலக்கிய வளர்ச்சிக்குத் துணை புரியத் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. எதிர்காலம் இதைவிடச் சிறந்ததாக இருக்கும் என கைபெல் போன்றவர்கள் கருதுகிறார்கள். அதையும் பொறுத்திருந்து பார்ப்போம்.

### முஸ்லிம் சகாயநிதி இயக்கம்

சென் செபஸ்தியன் அக்பர் லேன் ஏழை முஸ்லிம் சகாய நிதி இயக்கத்தின் முதலாவது பொதுக்கூட்டம் அண்மையில் ஜனாப் எஸ். எம். எம். ஹம்ஸா தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் நடப்பு வருட நிருவாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: எஸ். எம். எம். ஹம்சா, காரியதரிசி: வீ. எம். பீ. சேகுமுகைதீன், தனாதிகாரி: எம். ஷம்சுதீன்.

இவ்வியக்கத்தின் வளர்ச்சிக்காக ஜனாப் சேகு முகைதீன் செய்துவரும் சேவையைப் பல அங்கத்தவர்கள் பாராட்டிப் பேசினர்.

## பல்கலைக்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

1. ஆர். கே. டபிள்யு. குணசேகரா, (சட்ட விரிவுரையாளர்)

2. ஜி. ஒபயசேகரா, (சமூக இயல் உதவி விரிவுரையாளர்)

3. லக்ஷ்மன் எஸ். பெரேரா, (சரித்திர விரிவுரையாளர்)

4. மேலின் பீரிஸ், (நிறை நூல்கள் உதவி விரிவுரையாளர்)

5. பி. செனிவிரத்ன, (மிருக மருத்துவ, பரசீவியியல் விரிவுரையாளர்)

6. எல். பிரேமதிலகா, (புதை பொருளியல் உதவி விரிவுரையாளர்)

7. கே எச். ஜெயசிங்கா, (ஆட்சியியல் உதவி விரிவுரையாளர்)

8. வி. ஈ. ஏ. விக்கிரமநாயகா, (விவசாயப் பொறியியல் விரிவுரையாளர்)

9. எச். ஏ. ஐ. குணதிலகா, (உதவி நூலக அதிபர்)

10. பி. ஹேவவிதாரண (பொருளியல் உதவி விரிவுரையாளர்)

11. குசுமா ஏ. குணசேகரா, (பூமிசாஸ்திர உதவி விரிவுரையாளர்)

12. கே. பம்பரதேனியா, (பல் சிகிச்சை விரிவுரையாளர்)

இலங்கைப் பல்கலைக் கழகம்
பேராதனை.

## வள்ளுவர் வகுத்த அறநெறி

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

துக் கூறியுள்ளார் வள்ளுவப் பெருந்தகையார். திருவள்ளுவர் தமது உயர்ந்த கருத்துக்களையும் கொள்கைகளையும் அமைத்துத் தந்த திருக்குறள் நூலானது தமிழ் வேதம் என்று புகழ்ந்து கூறப்படுகிறது.

"சிறப்புடைய மரபிற்
பொருளுமின்பமும்
அறத்து வழிப்படு உந்
தோற்றம்போல்"

என முன்னோர் கூறிய முறையும். வள்ளுவர் வகுத்தமைத்த, அறம், பொருள், இன்பம் என்னும் வைப்பு முறையும் ஒரே நோக்குள்ளனவாய் அமைந்து விளங்குகின்றன. திருக்குறளைப் படிப்போர் அறத்திலும் அறத்தைக் காண்பார். பொருளிலும் இன்பத்திலும் அவ்வறமே முற்பட்டு நிற்பதையும் காண்பவராவார். அறத்திற் சிறந்த செல்வமுமில்லை; அதனை மறத்தலிற் கொடிய வறுமையுமில்லை என்னும் கருத்தைத் திருக்குறள் அழுத்தமாகக் கூறுகின்றது.

"அறத்தின் ஊங்கு
ஆக்கமுமில்லை; அதனை
மறத்தலின் ஊங்கில்லைக்
கேடு"


என்றுந் திருக்குறள் அறத்துக் கும் பொருளுக்கு முள்ள ஒற்றுமை நயத்தினை நன்கு உணர்த்தி நிற்கின்றது. அன்றியும் அறத்தின் வழியாக வருவதே இன்பமாகும். மற்றத் தீய வழிகளால் வரும் அனுபவமெல்லாம் அறத்துக்குப் புறம்பானவைகளே; அவற்றால் ஒருவன் இன்பமடைவதுமில்லை; அவன் தான் விரும்பிய புகழினை அடைவதுமில்லை.

"அறத்தான் வருவதே
இன்பம், மற்றெல்லாம்
புறத்து புகழும் இல"

என்பது திருக்குறள். திருவள்ளுவர் வகுத்துரைத்த இந்த நெறி முறையே நோக்கும் போதெல்லாம் அறமில்லாத அறமுமில்லை, அறமில்லாத பொருளுமில்லை; அறமில்லாத இன்பமும் இல்லை என்ற உணர்ச்சி நமக்குத் தோன்றுகின்றது.

—வ. திருமலராணி,
சாவகச்சேரி.

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)
பாலாஜி—ஜெயஸ்ரீ
சாரங்கபாணி—ராஜகோபால்
கிரிஜா—காகா ராதாகிருஷ்ணன் நடித்த
தெய்வ பலம்
7 ரீல்ஸ்கள் கேவா வர்ணக் கலரில் காண்பிக்கப்படுகிறது.



கெயிட்டி மகத்தான 3-வது வாரம்!
டி. ஆர். மகாலிங்கம் - எம். என். ராஜம்
தாம்பரம் லலிதா - ஏ. கருணாநிதி நடித்த
ஜுப்பிட்டரின் அமுதவல்லி

எதிர்பாருங்கள் வெகு விரைவில்!
சிலோன் என்டர்டெயின்மென்ட்ஸ் திரைகளில்
எஸ். எஸ். ராஜேந்திரன்—ராஜசுலோசனா
பாலையா—வி. கே. ராமசாமி—வி. ஆர். ராஜகோபால்
நடிக்கும்
சங்கிலித் தேவன்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
முருகன் (ஜிந்துப்பிட்டி)
ஏ. நாகேஸ்வரராவ்—கே. சாவித்திரி
கே. ஏ. தங்கவேலு—ராஜசுலோசனா—நம்பியார்
ஈ. வி. சரோஜா நடித்த
எங்கள் வீட்டு மகாலட்சுமி

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
ராணி (யாழ்ப்பாணம்)
ஜெமினி கணேசன்—சாவித்திரி—பாலையா
சந்திரபாபு—துரைராஜ்—முத்துலட்சுமி
நடித்த
மாமன் மகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நவ நாகரிகம்'

பிரியமுள்ள பிலோ! ஈழத்தில் இன்னலுறும் இனிய தமிழ் மொழியால் உன் அன்புச் சோதரன் செதுக்கும் தெவிட்டாத் தேன் மடல். நாட்கள் பல நழுவிய பின் நகல் வரைவதை யிட்டு நச்சரிக்க வேண்டாம். எங்கள் கழக விடுமுறையின் காரணத்தினுல் அதை இன்பமாகக் கழிக்க பல திக்கும் சென்று இயற்கை எழிலை கண்டு களித்தோம். ஆன காரணத்தினுற்முன் உன் வினுச் சரங்களுக்கு விடைப் பாணங்கள் விட முடியாது போய்விட்டன.

நாகரிகம்-அதுவும் இன்றைய நாகரிகத்தைப் பற்றிக் கூறச் சொன்னுய். இன்று நாகரிகம் எம்மை ஆட்கொண்டு விட்டது. நாகரிகம் இன்றேல் நானிலம் இல்லை என்ற அளவிற்கு அது பல்கிப் பெருகிவிட்டது. கேவலம்-மாற்ருன், எம்மில் நாட்டம் கொள்ள வேண்டும் என்பதற்காக நம் அடிப்படைக் கலாச்சாரங்களைக் களைந்தெறிவதா. அற்ப இன்பத்துக்காக பண்டைய மக்கள் பேணி வளர்த்த பழக்க வழக்கங்களை விலை கூறி விற்பதா? ஆ! ஊற்றுப் பேனு உதறுகிறதே சோதரி! இந்த நாகரிகத்தைப் பற்றி மடல் சமைக்க.

அன்று தமிழகத்தில் பிறந்த கம்பன் இன்று ஈழத்திலே பிறந்திருந்தால் நாகரிக மணிகளைப் பற்றி ஆயிரமாயிரம் பாக்கள் பாடியிருப்பான். அடிசில் சாலையில் ஒடுங்கிக் கிடந்த ஆபரணங்களை தட்டி யெழுப்பிய பாரதி இன்று இருந்தால் அக்குலமே அழியும் படி விருது பாடியிருப்பான். இன்று பாரதிதாசன் பாக்கள் புனைய முனைந்தால் பெண் குலமே மடிந்து போயிருக்கும்.

சோதரியே! சோர்ந்து விடாதே உன் குலத்துக்கு இழுக்குத் தேடியதையிட்டு, நீயாவது தாய்க்குலத்தின் பெருமையை நிலை நாட்டி பெண்கள் ஏட்டின் புது அத்தியாயத்தை ஆரம்பித்து வை. எம் தாய்க்குலத்துக்கே நிந்தை தேடாமல் பார்த்துக்கொள். நீர் மங்கையர் குலத்தின் மங்கா மாணிக்கமாகத் திகழவேண்டும் என்பதே என் அவா.

வணக்கம்.

இங்ஙனம்

''புரட்சி யுகன்''




# கம்பர் தந்த கவியமுதம்

—செல்வி மா. இந்திராணி—

தேன்னலுடன் தேனும் கலந்த அமிழ்தினுமினிய அருந்தமிழ் மொழியாகிய செந்தமிழ் கடலிலிருந்து கம்பரால் கண்டெடுக்கப்பட்ட இன்பத் தேன் சொட்டும் பொற்கலசமே இராமாயணம்.

அடேயப்பா! அப்பொற்கலசமாகிய இராமாயணத்தைப் படிக்குந் தோறும் எல்லையற்ற பரவசம்! இதய மலையிலே இன்ப ஊற்று! செவியிலே, செந்தமிழ் ஓசை! உள்ளத்திலே பொங்கும் உணர்ச்சி! உடலிலே புல்லரிப்பு! கண்ணிலே களி நடனம்! நாவிலே நறுமலர்த்தேன் பருகுமுணர்ச்சி! பேரின்பம்! பெருமகிழ்ச்சி!

தமிழ்த்தாய் ஈன்றெடுத்த பைந் தமிழ் பாவலர்களில் கம்பர் ஒருவர். கலைமகளின் கடைக்கண் பார்வையால் கல்விப் பெருக்கும் கவிபாடும் வன்மையும் பெற்றவர். மாரி மழைபோல் கவி பொழியும் பாவலர் கம்பர் என்று கூறின் மிகையாகாது. தெள்ளு தமிழ் நடையிலே புனைந்த சிங்காரச் செய்யுள்களை, சிந்தை கவரும் நிலையில், உவகையிலாழ்த்தும் முறையில், உணர்ச்சி யூட்டும் வகையில் இயற்றியுள்ளார் அவர் கவிதைகளிலே வெண்ணிலவின் தண்மையையும், தென்றலின் குளிர்மையையும், பூங்காவின் புத்துணர்ச்சியையும், புது மலரின் புனிதத்தையும் காணலாம்.

தேன் தமிழில் கம்பர் தந்த கவியமுதமாகிய இராமாயணம் செந்தமிழுக்கு, தலை சிறந்த காவியமாக யாவராலும் மதிக்கப்பட்டு வருகிறது. இது வான்மீகி இராமாயணத்தின் வழி நூலாயினும் சிற்சில இடங்களில் அக்கால தேச பண்பாட்டிற்கேற்ப சம்பவங்களை மாற்றியமைத்து தண்ணிலவொடு மென் தென்றல் சேர்ந்தாற் போல் அழகு படுத்தியிருக்கிருர். கம்பர் தமது கவியமுதத்திற்கு இராமவதாரம் எனப் பெயரிட்டாலும் அது கம்பராமாயணம் என்றே வழங்கி வருகிறது. இக் கவியமுதம் பன்னீராயிரம் வைர மணிச் செய்யுள்கள் கொண்டதாகும். இராமாயணக் கதை எழுவதற்கு காரணமாயிருந்தவர்கள் பெண்களே. கூனியும், சூர்ப்பணகையும் சூழ்ச்சிசெய்யாவிடில் இராமாயணக் கதையே இருந்திராது. நாமும் அச்சுவைமிகு தமிழ்க் கவிதையைச் சுவைத்திருக்க முடியாது.

இக் கவியமுதத்திலே உள்ள ஒவ்வொரு பாத்திரங்களின் குணுதிசயத்தை எத்தனை வகை உவமான உவமயங்களோடு நயம்பட வர்ணிக்கிருர் கம்பர். படிக்கப் படிக்க பரவச மூட்டி இன்பக் கடலிலாழ்த்தும் இச் செந்தமிழ் காவியம் விண்ணவர் அருந்தும் அமுதத்திலும் மேன்மைமிக்கதாகும். கம்பர் தந்த கவியமுதம் தரணி புகழ் தமிழர்க்கு மங்காப் புகழ் தரும் அமுதமாகும். அதன் பெருமை மிகு சிறப்பை எழுத்தாற் கூற எழுத இயலுமோ! சொல்லாற் கூற முடியுமோ?

# இரக்கவைத்தவன் இறக்கட்டும்

''காஸிம்''

ஏழடுக்கு மாளிகையில் வாழ்கின்ருேனே
 ஏழைபடும் பாடுதனை அறிவாயோ நீ?
பாலுணவும் தேன் சுவையும் பருகுவோனே
 பருக்கை தந்து என் பசியைத் தீர்ப்பாயோ நீ?

உடைதனிலே கிழிசலென நாணுகின்றேன்—உன்
 அன்புடையாள் அரையுடலைக் காட்டுகின்ருள்
நடைபோட்டு ஊர்சுற்றி இரக்கின்றேன் நான்
 கடைகடையாய் அவள் 'காரில்' அலைகின்ருளே!

உழைப்பாளி படும் பாட்டை நானறிவேன்,
 உன் ரேடியோப் பாட்டைத்தான் நீயறிவாய்
மழை வெய்யில் பாராமல் சுற்றுகின்றேன்,
 மனமிரங்கி என் முகத்தைப் பார்ப்பாயோ நீ?

கொட்டு பனிக் குளிராலே கொடுகுகின்றேன்—ஐஸ்
 குளிர்ப் பெட்டி உறை பனியைச் சுவைக்கின்ருய் நீ
எட்டாதோ என் குரலும் உன் செவிக்கு
 இரக்கவைத்த இறைவன் இன்றே இறந்திடானே?

பாரதியின் பாட்டொலி:

# காணி நிலம் வேண்டும்

காணி நிலம்-குடியேற்றப் பூமி வேண்டும் பராசக்தி! அழகிய மரத்திலே தூண் செதுக்கி-வீடுகளைத் தூயனவாய்-அந்தக் காணியின் மத்தியிலே-ஒரு மாளிகை போன்று கட்டித் தர வேண்டும். கேணியருகினிலே-காய்த்து இள நீர் தரும்-பத்துப்பன்னிரெண்டு தென்னை மரங்கள் வேண்டும்! அங்கே—

முத்துச் சுடர் போலே-நிலவின் அமுத ஒளி எறித்து வண்ணங்கொழிக்க வேண்டும்! மாஞ்சோலை தனிற் கூவிடுங் குயிலோசை காதிற் கின்பமளிக்க வேண்டும்! எனது உள்ளம் மகிழ்ந்து உவகை பொங்க இளந் தென்றல் இன்னுடல் தழுவிட வேண்டும்!

பாட்டுப் பண்ணிசைத்திடவே அங்கொரு பத்தினிப் பெண் வேண்டும்! எங்கள் கூட்டு மகிழ்ச்சியினிலே-பல ஆயிரங் கவிதைகள் உதித்திட வேண்டும்! அங்குள்ள காட்டு வெளிகளிலே-தாயே பராசக்தி! நின் தன் காவலுறல் வேண்டும். எங்களுடைய பாட்டின் திறமையாலே-இந்த வையத்தை ஆட்சி செய்திட வேண்டும். அன்று அமரகவி இப்படிக் கேட்டார், பராசக்தியிடம். ஆனல் நாம் இன்று—

காட்டை வெட்டிக் களனியாக்கி கனக்கசற்ற வசதியுடன் வீடமைத்துக் கொடுத்

# வள்ளுவர் வகுத்த அறநெறி

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் மக்கள் அடைதற்குரிய உறுதிப் பொருள்களாகும். அவற்றில் அறம் என்பது இல்லறம், துறவறம் என இருவகைப்படும். பொருள் என்பது மெய்ப் பொருள், மெய்ப் பொருள் என இரு வகைப்படும். இன்பமும் சிற்றின்பம், பேரின்பம் என இரு பகுப்புடன் அடங்கும். நிலையில்லாத உலகப் பொருள்கள் வாயிலாக நாம் அனுபவிக்கும் இன்பம் சிற்றின்பமாம். நிலையுள்ள மெய்ப் பொருளாகிய இறைவனை அடைந்து துய்க்கும் இன்பம் பேரின்பமாகும்.

இந்த நான்கு உறுதிப் பொருள்களுள்ளே அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றினையும் வெளிப்படையாகவும் முத்தியின் பத்தினைக் குறிப்பாகவும் வகுத்

(13-ம் பக்கம் பார்க்க)

துக் குடியேறி வாழுங்கள்; உங்கள் நிலத்தில் அந்நியரைக் குடியேற விடாது; ஆயிரமாயிரம் பேர்களாகச் சென்று குடியேறி வாழுங்கள் என்று சொல்லி அரசாங்கம் ஊக்கமளித்தாலும் தமிழ்ப் பெருங்குடி மக்கள் அசைய மறுக்கின்றனர். இதை விட்டு நல்வாழ்வுக்காக—எமது வள நிலத்தைக் காக்க உணர்வூட்டுங்கள் காளையர்களே!

——சித்தாண்டிச்சபா

# வளர்மதி புதிய மருமக்கள்

2908 சின்னையா மகாலிங்கம், கரவெட்டி கிழக்கு
2909 ந. ச. மகேந்திரன், பண்டத்தரிப்பு
2910 பரமகுரு சந்திரசேகரம், கட்டுகாஸ் தோட்டை
2911 பொ. சுந்தரலிங்கம் கல்முனை
2912 க. நவரத்தினம், வேலணை
2913 ச. சுங்காதரன், பொரளை
2914 ச. இராஜசிங்கம், மட்டக்களப்பு
2915 பெ. செல்வராசு, பூண்டுலோயா
2916 ஏ. சி. எம். அன்ஸாரி, காலி
2917 ச. வெற்றிவேல் வேந்தன், பொரளை
2918 ஏ. எல். எம். ஏ. அஸீஸ், கட்டுப்பொத்த
2919 க. சின்னத்தம்பி, நுவரெலியா
2920 செல்வி ம. அன்னமேரி, விடத்தல்தீவு
2921 செல்வி சி. சரஸ்வதி, செங்கலடி
2922 மு. சி. க. மகாலிங்கம், கோண்டாவில்
2923 த. இராசையா, பண்டாரவளை
2924 நா. சிவசுந்தரம், காங்கேசன்துறை
2925 கே. இராசரத்தினம் வரணி
2926 வி. இ. ரகுபதி, களுவாஞ்சிக்குடி
2927 க. சபாநாயகம், காரைநகர்
2928 நா. ஜெயமணி, திருகோணமலை
2929 எச். பி. ஜே. நல்லையா, யாழ்ப்பாணம்
2930 செல்வி கனகரத்தினம் சின்னத்தம்பி, கரவெட்டி மேற்கு
2931 செல்வி நீலாயதாச்சி தருமலிங்கம், சுன்னுகம்.
2932 பொ. ஜெயராஜா, நழுனுகல.

வள்ளுவர் குறள்: 27

# பெரியரும் சிறியரும்

மக்களெல்லாம் ஒத்த பிறப்பினை உடையவர்கள்; 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்.' ஆனல் அவர்களுட் சிலர், 'பெரியர்' என்று போற்றப்படுகிருர்கள்; பலர், 'சிறியர்' என்று தூற்றப்படுகிருர்கள். பெரியர் சிறியர் என்பதை அறிந்து கொள்ளக் கூடிய அளவு கோல் எது! உரைத்துப்பார்க்கக் கூடிய கட்டளைக் கல் எது?

''செயற்கரிய செய்வார்
 பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்''

ஒருவருடைய தோற்றத்தைக் கொண்டு, அவர் பெரியரோ சிறியரோ என அளவிட முடியாது. பின்னை, 'பெருமைக்கும் சிறுமைக்கும் கருமமே கட்டளைக் கல்'. செயலைக் கொண்டு தான் அளவிட முடியும்.

செய்தற்கு அரிய செயல்களைச் செய்பவர்களே பெரியர் என்று பேசப்படுகிருர்கள். ஒத்த பிறப்புடைய மக்களுள்ளும் சிலர், மனம் போன போக்கிலே புலனைச் செலுத்தித் தாழாமல், அவற்றை அடக்கி உயர்ந்து, செயற்கரிய செய்து, பெரியார் ஆகிருர்கள்' பற்றுக்களைத் துறந்த அறவோர், அவர்களே.

மக்களுட் பலர் எங்ஙனம் போகிருர்கள்? மனத்தை அடக்க மாட்டாமல், புலன்களிலே செல்லும் வழியிற் செலவிட்டு, செய்தற்கு எளிய செயல்களிலே ஈடுபட்டு, எங்ஙனமாயினும் உயிர் வாழ்ந்தாற் போதுமென்று வாழ்ந்து, இறந்து போகிருர்கள்; இவர்களே சிறியோர்.

—பா. ஆறுமுகம்.

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை ''வளர்மதி''யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து ''வளர்மதி'' C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும்.

## வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 7.

பெயர் ........................................................................

பாடசாலை ..................................................................

விலாசம் .....................................................................

........................................................

.................................... ....................................
பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## நல்லூர் தொகுதி அ. இ. த. க. காரியாலய திறப்பு விழா

நல்லூர்த் தொகுதி ஒன்பதாம் வட்டார தமிழரசுக் கட்சியின் கிளை காரியாலயம் சென்ற 31-5-60-ல் கந்தர் மடம் அரசடி ரோட்டிலுள்ள 117-ம் இலக்கக் கட்டிடத்தில் யாழ்ப்பாணத் தொகுதி அபேட்சகர் அத்துவக்காத்து திரு. சி. கதிரவேற்பிள்ளையால் திறந்து வைக்கப்பட்டது.

கிளை தலைவர் திரு. ஆ. கந்தையா பேசுகையில் "எமது யாழ்ப்பாணப் பகுதி இன்று நல்லூர், யாழ்ப்பாணம் என இரு பிரிவுகளாக்கப்பட்ட போதிலும் நாம் எமது கடமையைச் சரிவர இருபகுதிகளிலும் செய்தல்வேண்டும். இன்று எம்மை ஒரு பெரிய கிலி பிடித்திருக்கின்றது. அதை அகற்ற நாம் சோராது உழைத்தால் வெற்றி நிச்சயம்" என்று கூறினார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் "நாம் ஆறுதலாகவும், அமைதியாகவும் பிரசாரம் செய்து மற்றவர்களுடைய மனதைப் புண்படுத்தாமல் மகாத்மா காந்தி காட்டிய வழியில் எமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல் வேண்டும்" என்று கூறினார்.

திரு. சி. கதிரவேற்பிள்ளை பேசுகையில், "ஒரு காரியாலயம் இரவு பகலாக இயங்க வேண்டும். அதன் பொறுப்பாளராக உள்ளவர் அநேகமாக அத்தொகுதி சம்பந்தப்பட்ட சகல விசயமும் அறிந்தவராயிருக்க வேண்டும். தொண்டர்கள், அனுதாபிகள், ஆதரவாளர்கள் எந்த நிமிட நேரமும் செல்லக் கூடியவகையில் காரியாலயம் திறந்திருக்கவேண்டும்" என்று கூறினார்.

பின் திரு. செல்லையா துரையப்பா பேசுகையில் "இன்று எமது அபேட்சகரின் உடல் நிலை சரியாயில்லை. அவர் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று பொது மக்களுடைய ஆதரவைப் பெற முடியாதவராக இருக்கிறார். எனவே அவருடைய கடமையை நாமே செய்தல் வேண்டும்" என்று கூறினார்.

## வலி மேற்கு இ. தி. மு. க. கூட்டம்

வலி மேற்கு இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் கடந்த 31-5-60-ல் மேதினப் பொதுக் கூட்டம் மாதகல் விக்கினேஸ்வர வித்தியாசாலை மண்டபத்தில் தோழர் சே. வி. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

கழகச் செயலாளர் டாக்டர் அ. வை. தங்கக்கணபதி பேசுகையில் 10 லட்சம் மலைநாட்டுத் தமிழர்களின் வாக்குரிமை, பிறப்புரிமை பெறும்வரை இ. தி. மு. க. ஓய்ந்திருக்காதென்றும் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்தும், பொருளாதார சமத்துவமும் பெற போராடவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் தமிழரசுத் தளபதி திரு. அ. அமிர்தலிங்கம் திரு. டி. எம். பீர் முகமது "தினக்கலை ஆசிரியர் திரு. மணவைத்தம்பி உட்பட பலர் பேசினார்கள்.

## புங்குடுதீவு இளைஞர் கழகம்

"தினசரி நான்கு பஸ்களை ஆஸ்பத்திரிக்கு விட்டுத் திருப்புவதன் மூலம் நோயாளர்களின் பிரயாணப் பிரச்னைகளை நாம் தீர்த்துவிட முடியாது. நண்பகலில் நோயாளர்களைப் பார்க்கச் செல்லும் பார்வையாளர்களுக்குப் பஸ்வசதி கிட்டுவதில்லை. மாலை ஐந்து மணிக்கும் ஆறு மணிக்குமிடையில் பெருந்திரளான பார்வையாளர்கள் ஆஸ்பத்திரிக்கு வந்து போகின்றனர். ஆஸ்பத்திரிக்கு விடும் பஸ் வண்டிகளின் தொகையை அதிகரிப்பதுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்று திரும்பும் எல்லாப் பஸ்களிலும் "ஆஸ்பத்திரிச் சேவை" என்ற பெயர்ப் பலகையை மாட்டி விடுமாறும் கோருகின்றோம்."

இவ்வாறு வேலணை இ. போ. ச. நிலையத்தலைவர் திரு க. குமாரகுலசிங்கத்தை அணிமையில் பேட்டி கண்டு பேசிய புங்குடுதீவு இளைஞர் கழகத்தினர் தெரிவித்தனர்.

## தெமட்டக்கொடையில் வள்ளுவர் விழா

கொழும்பு தெமட்டக் கொடை அ. த. ச. சிரேட்ட பாடசாலை உயர்தர வகுப்பு இலக்கிய மன்றத்தின் ஆதரவில் மேற்படி பாடசாலை மண்டபத்தில் கடந்த 8-6-60-ல் கொழும்பு மாவட்ட வித்தியாதரிசி திரு. வெ. சங்கரலிங்கம் தலைமையின் கீழ் வள்ளுவர் விழா நடைபெற்றது.

வரவேற்புரை நிகழ்த்திய பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. செ. சிவலிங்கம், தொல்காப்பிய உரையில் தெய்வப் புலவர் வள்ளுவரின் பெயர் குறிப்பிடப்பட்டதைக் கூறி, பல உதாரணங்கள் மூலம் வள்ளுவரின் சிறப்பை எடுத்துக் காட்டினார் தமது உரையில்.

தலைவர் தமது தலைமை உரையில், "பல தேசங்களில் பல பெரியார்கள் தோன்றிப் பல நூல்கள் எழுதினர். அதுபோல் உலக மொழிகளுள் ஒன்றாய தமிழ் மொழியும் தன்னகத்தே பல நூல்களைக் கொண்டுள்ளது. எல்லா நீதி நூல்களுள்ளும் தலை சிறந்தது திருக்குறளே. அது பொது நூல்" என்று கூறியவர், "'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற குறள் படி மாணவர் ஒழுக வேண்டும்" என்று மாணவர்க்குப் புத்திமதி கூறினார்.

'அறவாழ்வு' என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்திய தன்மொழி அலுவலகத் துணைத் தலைவர் திரு. அ. வி. மயில்வாகனம், "கலை கலைக்காகவே என்றகாலம் போய், கலை சமூகத்துக்காக என்ற நிலை ஏற்பட்டுள்ளது" என்றும், "தமிழ் இலக்கியங்கள் பல, உலக இலக்கியங்களாகி விட்டன" என்று கூறி இலட்சிய வாழ்வின் குறிக்கோளையும் கடவுள் உண்மையையும் இல்லற வாழ்வின் பெருமையையும் வலியுறுத்தினார்.

"விதிக்கும்; சாதிக்கும்; பெண் சமத்துவத்துக்கும் வள்ளுவரைப் பயன் படுத்தாது, புறங் கூறல்; நேர்மையின்மை; அவாவறுத்தல் என்பனவற்றுக்கும் பயன் படுத்துதல் வேண்டும்" என்று ஜேயல் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. கி. லக்ஷ்மணன், 'குறள் எமக்கு எவ்வாறு பயன்படும்?' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

மருதானை மத்திய கல்லூரி இசை ஆசிரியர் திரு க. கிருஷ்ணபிள்ளை கோஷ்டியாரின் பாட்டுக் கச்சேரியும் சபையில் இடம் பெற்றது. பாடசாலை மாணவிகளால் ஆரம்பத்தில் தமிழ்த் தாய் வணக்கமும், இடையிடையே தமிழ் மறைக் கீதங்களும் வள்ளுவர் கீதங்களும் பாடப்பட்டன.

கட்டுரைப் போட்டியிலும் பேச்சுப் போட்டியிலும் பரிசு பெற்ற மாணவ மாணவிகளுக்குத் திருமதி வெ. சங்கரலிங்கம் பரிசுகள் வழங்கினார்.

ஈற்றில் இலக்கிய மன்றப் பொறுப்பாளர் ஆசிரியர் திரு. ஆ. பொன்னுத்துரையால் நன்றியுரை கூறப்பட்டது.

## வேலணையில் வள்ளுவர் விழா

பாரதி இளைஞர் கழகத்தின் ஆதரவில் கடந்த 8-6-60-ல் வேலணை வடக்கு ஆத்திச்சூடி வித்தியாசாலையில் ஆசிரியர் திரு. ஐ. பொன்னையா தலைமையில் வள்ளுவர் விழா நடைபெற்றது. அப்போது அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்க யாழ் கிளைச் செயலாளர் திரு. த. வேலழகன் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார்.

"வள்ளுவன் குறளை மொழி பெயர்ப்பவர்கள் பலர் பரிமேலழகர் உரையையே ஆதாரமாகக் கொண்டு மொழி பெயர்ப்பதால் உண்மையான வள்ளுவரின் கருத்தை யாம் காண முடிவதில்லை. மொழி பெயர்ப்பவர்கள் எல்லாம் திருக்குறள் மூலத்தில் இருந்து மொழி பெயர்க்க வேண்டும். ஏனெனில் குறளின் உண்மைக் கருத்து ஒன்றாக இருக்க உரையாசிரியரின் கருத்து வேறொன்றாக உள்ளதால் உரையை ஆதாரமாகக் கொண்டு மொழி பெயர்க்கும் போது உண்மைக் கருத்து மறைந்து வருகிறது. எடுத்துக்காட்டாக "தெய்வந் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை". என்ற குறளுக்கு பரிமேலழகர் கொண்ட கருத்து பிழையானது. கணவனைத் தொழுபவள் 'பெய்' என்று சொன்னால் மழை பெய்யாவிட்டால் இக் காலத் தமிழ் தாய்மார்கள் மேல் அபபழி வந்து சேரவேண்டுமா? இவ்வுரையை ஆதாரமாகக் கொண்டு மொழிபெயர்த்தவர்கள் தமிழ் நாட்டுப் பெண்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இது முற்றிலும் பிழையான கருத்து இக் குறளுக்கு "தேவையான போது பெய்து உதவும் மழையைப் போன்றவள் கணவனை தொழுபவள்" என்றே பொருள் கொள்ள வேண்டும்"

மேற்கண்டவாறு அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்க யாழ் கிளைச் செயலாளர் திரு. வேலழகன் பேசுகையில் கூறினார்.

ஆசிரியர் திரு. கு. வி. செல்வத்துரை, ஆசிரியர் திரு. பொன்னுச்சாமி, பண்டிதர் சோ. தியாகராசா, வித்துவான் இ. பொன்னையா ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். இடையே ஆத்திசூடி வித்தியாசாலை மாணவர்களால் "ஞானக் கலாநிதி" என்னும் பாடல் பாடப்பட்டது. ஈற்றில் செயலாளர் மு. வ. மாணிக்கவாசகரின் நன்றியுரையுடன் விழா நிறைவெய்தியது.

## மாணவர் தேர்ச்சிச்சங்கம்

மட்டக்களப்பு அர்ச். மிக்கேல் கல்லூரி மாணவர் தேர்ச்சிச் சங்கம் கடந்த 1-6-60-ல் பாடசாலை மண்டபத்தில் செல்வன் பொ. கணபதிப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது.

செயலாளர் செல்வன் பாலேந்திரனின் கடந்த கூட்ட அறிக்கையோடு கூட்டம் ஆரம்பமாயிற்று. அன்றைய முக்கிய பேச்சாளரான மாஸ்டர் சிவலிங்கம் தமது இந்திய அனுபவங்களைப்பற்றி எடுத்துக் கூறினார். ஈற்றில் தலைவர் குறிப்புரையுடன் கூட்டம் இனிது கலைந்தது.

# நெற்றியில் வடு!

10-ம் பக்கத் தொடர்ச்சி

யில்லை" என்ற ஒரு புதுக்குரலில் பதில் தந்துவிட்டு குசினியை நோக்கிச் சென்றாள். நானும் அவளைப் பின் தொடர்ந்தேன்.

சாந்தி எனக்குச் சோறு பரிமாறினாள் என்றைக்குமில்லாத ஒரு புது விதத்தில். குனிந்த தலையை நிமிர்த்தவே இல்லை அவள். சோற்றைப் பார்த்தாள், என் சோற்றுக் கோப்பையைப் பார்த்தாள், கறியைப்பார்த்தாள், என் கரத்தைப் பார்த்தாள். ஆனால் அவள் என் முகத்தைப் பார்க்கவில்லையே!

அப்படி என்ன பாவம் செய்துவிட்டேனாம் நான்? சாப்பிடச் சாப்பிட எத்தனையோ கதைகள் இனிக்க இனிக்கச் சொல்லி சிரிக்க வைப்பாளே! அவையெல்லாம் இன்று எங்கு ஒளிந்து கொண்டனவாம்? இன்று சாந்தியின் முகத்திலே ஏன் இத்தனை கலக்கம்? நான் என்ன செய்துவிட்டேனாம் அவளுக்கு?

சாந்தி:-

ஆண்களே இப்படித்தான். செய்வதையெல்லாம் செய்துவிட்டு "நான் என்ன செய்து விட்டேன்?" என்று யாதுமே தெரியாத சாதுபோல் நடிக்கும் தந்திரசாலிகள். பேச்சினால் பெண்களை மடக்கி விடும் பலே கெட்டிக்காரர்கள். எது எப்படி இருந்தாலும் முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்க முடியுமா? என் கையிலே இந்தப் புகைப்படம்இருக்கும் வரைக்கும் மழுப்பவோ மறைக்கவோ அவரால் முடியாவ முடியாது! பதில் சொல்லித் தானே ஆகவேண்டும்?

அதோ அவர் வருகிறார், கைநிறையப் பழங்களும்இன்னும் ஏதேதோவெல்லாம் கொண்டு. இவற்றையெல்லாம் கண்டு நான் மயங்கி விடுவேன் என்ற அற்ப எண்ணம் போலும் அவருக்கு. அதோ சிரித்தபடியேதான் வருகிறார். ஆனால் இன்னும் சற்று நேரத்திற்குள் சிறிச் சினந்து விழப் போகிறார், தன் கள்ளத்தனத்தையெல்லாம் கண்டுகொண்டாளே என்று.

"சாந்தி, இதையெல்லாம் எடுத்துவை" என்று கூறியபடியே கொண்டு வந்த பார்சல் அனைத்தையும் எனக்கருகே வைத்து விட்டு, என்னைப் பார்த்துச் சிரித்தார். நான் அசையவில்லை, அப்படியே இருந்தேன், மௌனமாக.

என்னுடைய இந்த விசித்திரப் போக்கு அவருக்கு ஆத்திரத்தையும் அதிசயத்தையும் அளித்திருக்கவேண்டும். "சாந்தி! உனக்கென்ன பைத்தியமா? அல்லது மௌனவிரதம் அனுஷ்டிக்கிறாயா?" என்றவராய் என் தோள்பட்டையைப் பிடித்துலுக்கினார். அப்பொழுதும் நான் பேசவில்லை அசையாமலே இருந்தேன்.

இப்பொழுது அவர் ஏதோ நினைத்துக் கொண்டார் போலும். "சாந்தி, சதா அம்மாவை நினைத்துக் கலங்கி என்னத்தைத்தான் கண்டுவிட்டாயாம்? இறந்தவர்கள் வந்து விடுவார்களா?" என்று அவர் என் கவலைக்குப் புதுக் கருத்தெடுத்துப் பேசிய பேச்சு, என் உள்ளத்தே கொந்தளிக்கும் ஆத்திரத்தையெல்லாம் கொட்டிவிடச் சந்தர்ப்பம் அளித்தது எனக்கு.

"ஆமாம், எனக்கு அம்மா இருந்திருந்தால் நீங்கள் செய்யும் அநியாயத்தையெல்லாம் பார்த்துக் கொண்டு நான் இங்கேயா இருக்கவேண்டும்?" என்று நான் கேட்டேனோ இல்லையோ, அவர் அதிர்ச்சியால் அறையப்பட்டவராய் "சாந்தி! நான் உனக்கு அப்படி என்ன அநியாயத்தைச் செய்துவிட்டேன்?" என்று உரக்கக் கூவியே விட்டார்.

"ஏன் ஆத்திரப் படுகிறீர்கள்! நீங்கள் செய்யும் அநியாயத்திற்கு அத்தாட்சி காட்டினால்?"

"ஏய்! நீ என்ன சொல்கிறாய்? சுற்றி வளைக்காதே புரியச் சொல்"

"எப்படித்தான் புரியும் உங்களுக்கு! கட்டியவள் இருக்க வேறு பெண்! கலியாணம் முடிக்க முன்பே கள்ள நாயகி! சீ! என்ன மானங்கெட்ட வாழ்க்கை!" என்று கூறி முடிப்பதற்குள் "சீ! போதும் நிறுத்து!" என்று சீறியவராய் என்னத்தை நோக்கிக் கையை ஓங்கவும் அந்தப் புகைப் படம் போய் அவர் முன் விழவும் சரியாக இருந்தது.

அடுத்தகணம், பாம்பாகச் சீறியவர் எப்படித்தான் அடங்கினாரோ தெரியவில்லை. வாஞ்சையோடு அந்தப் புகைப் படத்தை எடுத்துப் பார்த்த அவர் முகத்திலே ஆச்சரியமும், ஓர் அலாதி மகிழ்ச்சியும் போட்டி போட்டன. பின் அப்படத்தையும் என் முகத்தையும் மாறி மாறிப் பார்த்துவிட்டுக் 'கடகட'வெனச் சிரித்தார். அவர் சிரிப்பு எனக்கு ஆத்திரத்தைத் தான் மூட்டியது.


"சிரித்து மழுப்பியதும் இதற்கென்ன சொல்கிறீர்கள்?" என்றேன் முந்திய கடுகடுப்பு சற்றும் குறையாவளாக.

"அட அசடே" இதற்குத் தான் இத்தனை கோபம்? இதை எனக்குசிறிது முன்பே சொல்லியிருந்தால், உனது பாழான சந்தேகம் நீங்கியிருக்குமே. இந்தப் படதை எங்கு தான் தேடி எடுத்தாயோ ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம். இந்தப் படத்தை நானும் தான் தேடிக்கொண்டிருந்தேன் பிரேம் போட்டு சுவரிலே மாட்டுவதற்கு. இந்தப் படத்திலே இருப்பவர்கள் தான் எனது அம்மாவும் அப்பாவும் அவர்கள் கலியாணமாக முன்பு, காதலர்களாக இருந்த காலத்தில் எடுத்த படம்தான் இது. என் அம்மாதான் என் சின்னக் காலத்திலேயே இறந்து விட்டாள். அவளை அடையாளந் தெரிந்திருக்க உனக்கு நியாயமில்லை. ஆனால் எனது அப்பாவைக் கூடவா உன்னால் அடையாளங் கண்டு பிடிக்க முடியவில்லை! என்னைப்போலவே எனது அப்பாவும் இளமையில் இருந்தாலும், எனக்கு நெற்றியிலே இருக்கும் இப் பெரிய வடு அப்பாவுக்கில்லையே! அதையாவது கவனித்தாயா? உன் சந்தேகக் கண்களுக்கு அது எல்லாம் எங்கே தெரியப் போகிறது?" என்று சொல்லிவிட்டு அவர் என்னைப் பார்த்து மீண்டும் சிரித்தார். நான் [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

● காமினி [மருதானை] சபயர் [வெள்ளவத்தை] ●



சந்தியா, மஹிபால், வந்தனு, ஆகா, சந்த்ரகாந்த், கேஸவ ராவ் தாதே, உல்ஹாஸ்

ஆகியோர் நடித்த

ராஜ்கமால்ஸ் கலாமந்திர் அளிக்கும்

# நவ்ரங்

டெக்னிக் கலர் படம்

இசை: டைரக்ஷன்:

சி. ராமச்சந்திரா—வி. சாந்தாராம்


நவ்ரங் ஒரு ஏழைக் கவிஞன். இளம் பாடகன். மனைவி ஜமுனுவோடு பிணங்கிக் கொண்டு கற்பனை மோகினியின் ஆட்டத்தில் அடிக்கடி மெய் மறக்கிறன். அந்தக் கற்பனை மோஹினி வேறு யாருமல்ல; அவன் மனைவியே தான். அழகி சந்தியா மனைவி ஜமுனுவாகவும், நர்த்தகி மோஹனுவாகவும் தோன்றி நடிக்கின்றனர்.

---

# குதூகலமான 4-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை) மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கேலியா) லக்சுமி (இரத்தினபுரி) தீவொளி (நுவரெலியா)



சிவாஜி கணேசன் ❁ பி. சரோஜாதேவி

எம். ஆர். ராதா, பத்மினி பிரியதர்சினி

டி. எஸ். பாலையா—எஸ். வி. சுப்பையா

எம். என். நம்பியார், தாம்பரம் லலிதா,

எம். வி. ராசம்மா, சி. கே. சரஸ்வதி முதலியோர் நடித்த

சரவணு பிலிம்ஸ்

# பாகப் பிரிவினை

கதை—வசனம்: ● திரைக் கதை-டைரக்ஷன்:

எம். எஸ். சோலைமலை ஏ. பீம்சிங்

இசை:

விஸ்வநாதனும்—ராமமூர்த்தியும்

பின்னணி: டி. எம். சௌந்திரராஜன்—சீர்காழி கோவிந்தராஜன்

பி. லீலா—பி. சுசீலா—ஜமுனுராணி.

இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க ... எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க ... அச்சகத்தில் பதிப்பித்து 1960 ஜூன் 19-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org